# ஹர்ஷன்

4035

பெ. கோ. சுந்தரராஜன்

PRESENTED BY
V. PR. PL. M.
KASIVISWANATHAN CHETTIAR
PAGANERI.

4035

ஜோதி நிலையம்

# ஹர்ஷன்

நாடகம்

---

பெ. கோ. சுந்தரராஜன்

PAGANERI.

ஜோதி நிலையம்
திருவல்லிக்கேணி, சென்னை.

ஜோதிமலர் 19
முதிற்பதிப்பு 1944

விலை ரூபா இரண்டு

இதே ஆசிரியர் எழுதிய
**அந்திமந்தாரை**
முதலிய கதைகள்
விரைவில் வெளிவரும்.

இந்தப் புஸ்தகத்தில் 56 பக்கங்கள் வரை திருச்சி கலாமோஹினி பிரஸிலும்,
மிகுதி சென்னை கபீர் அச்சுக்கூடத்திலும் அச்சிடப்பட்டது.

## சமர்ப்பணம்.

நான் நன்ருய் அறியுமுன் பிரிந்து மறைந்த
என் சகோதரி
**ஸ்ரீமதி காவேரிக்கு**

# ஹர்ஷன்

**பாத்திரங்கள் :**

| | | |
|---|---|---|
| குமாரகுப்தன் | ... | ஹர்ஷனின் நண்பன். |
| பண்டி | ... | ஹர்ஷனின் நண்பன். |
| சசாங்கன் | ... | கௌடமன்னன். |
| தேவகுப்தன் | ... | மாளவமன்னன். |
| பிரபாகரவர்த்தனன் | ... | தானேஸ்வராதிபதி, ஹர்ஷனின் தந்தை. |
| ராஜ்யஸ்ரீ | ... | ஹர்ஷனின் சகோதரி. |
| யசோமதி | ... | ராணி. |
| ராஜ்யவர்த்தனன் | ... | ஹர்ஷனின் மூத்தசகோதரன். |
| ஹர்ஷவர்த்தனன் | ... | இளைய குமாரன். |
| கிரஹவர்மன் | ... | கன்னோசி மன்னன். |
| மாதவகுப்தன் | ... | குமாரகுப்தன் சகோதரன். |
| இந்துமதி | ... | மாதவகுப்தனின் சகோதரி (தாய் தந்தையற்றவள், அரண்மனையில் வளர்கிறாள்) |
| அவந்தி | ... | தானேஸ்வர மந்திரி. |
| ரஸாயனன் | ... | அரண்மனை வைத்தியன். |
| பாஸ்கரவர்மன் | ... | காமரூப மன்னன். |
| திவாகரமித்திரன் | ... | பௌத்தபிக்ஷு. |

# ஹர்ஷன்

4035

## அங்கம் 1

### காட்சி 1

*[தானேஸ்வரம் அரண்மனையில் ஒரு பகுதி. பண்டியும், குமாரகுப்தனும்.]*

**குமாரகுப்தன்:** பண்டி, மாதவகுப்தன் எங்கே?

**பண்டி:** ஹர்ஷனோடு தான் இருப்பான்.

குமார: ஹர்ஷனையும் காணவில்லையே.

பண்: கிரஹவர்மன் நாலுதிக்கும் போய்விடுவான். ஏன்? என்ன விசேஷம்?

குமார: இல்லை, மாதவகுப்தனை இந்துமதி தேடிக்கொண்டிருந்தாள்.

பண்: இந்தச் சந்தடியில் அவனைக் காணமுடியுமா? ஹர்ஷனை விட்டுப்பிரியாமல் தொடர்ந்துகொண்டிருக்கிறான்.

குமார: நேற்றுமுழுதும் நீதானே ஹர்ஷனோடு சுற்றிக்கொண்டிருந்தாய்? இப்பொழுது தனியாய் உட்கார்ந்துகொண்டிருக்கியே? மாதவன்மேல் பொறாமையா?

பண்: பைத்தியம்! பொறாமை என்ன வந்தது?

குமார: இல்லை, நீ தனியாயிருப்பதுகண்டு சிலபேர் ஏதோ பேசிக்கொண்டிருந்தார்கள்.

பண்: போகட்டும். அவர்களைப்பற்றிக் கவலையில்லை. இங்கே வா. (ஜன்னல் அருகில்) அதோ எதிரில் தெரிகிறதே அது யாருடைய மாளிகை தெரியுமா?

குமார: ஏன், அரசன் வஸந்தமண்டபமல்லவா அது?

பண்: ஆம். அதில் இப்பொழுது யார் வந்து இறங்கி இருக்கிறார்கள் தெரியுமா?

குமார: சசாங்கன்.

பண்: வாஸ்தவம். அவனோடு இப்பொழுது மாளவமன்னன் தேவகுப்தன் பேசிக்கொண்டிருக்கிறான்.

குமார: அதைப்பற்றி இப்பொழுது என்ன?

பண்: அவர்கள்மேல் ஒரு கண் வைத்துக்கொண்டிருப்பது என் கடமை.

குமார : ஏன் ஹர்ஷன் உத்திரவோ ?

பண் : இல்லை. ஹர்ஷனுக்குத் தெரியாது.

குமார : அவர்கள் என்ன குற்றம் செய்தார்கள் ?

பண் ; இன்னும் செய்யவில்லை. செய்யாமலிருப்பதற்காகத் தான் நான் ஜாக்கிரதையாயிருக்கிறேன்.

குமார : என்ன, வேடிக்கையாக இருக்கிறதே. கலியாணத்திற்கு வந்த இடத்தில் என்ன குற்றம் செய்யப்போகிறார்கள் ?

பண் : ரொம்பவும் மோசமான குற்றம். சதி ! துரோகம் !

குமார : நான் நம்பவில்லை.

பண் : நீ நம்பமாட்டாய். கௌடராஜனைப்பற்றி உனக்குத் தெரியாது.

குமார : நம்மீது அவனுக்கு விரோதமென்றால் ராஜ்யஸ்ரீயின் விவாகத்திற்கு வந்திருக்கவேமாட்டான்.

பண் : சசாங்கன் ரொம்ப சாமர்த்தியசாலி. தன் எண்ணத்தை வெளியில் காட்டமாட்டான். ராஜ்யஸ்ரீயை கிரஹவர்மன் மணந்துகொள்வதில் அவனுக்குப் பொறாமை. விருந்தாளியாக வந்தும் சதிசெய்யத் தயங்கமாட்டான்.

குமார : இதை ஹர்ஷனிடம் சொல்லவேண்டாமா ?

பண் : இப்பொழுது வேண்டாம். அவன் கலியாணச் சந்தடியில் சுறுசுறுப்பாக இருக்கிறான். நாளை விவாகம் முடிந்தவுடன் சொல்லலாமென இருக்கிறேன்.

குமார: நீ தனித்திருப்பதைப்பற்றி ஹர்ஷன் சந்தேகப்படமாட்டானா ?

பண் : நமது விருந்தாளிகளைக் கவனித்துக்கொண்டிருக்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன்.

[ஒரு வேலையாள் வருகிறான்.]

வே : இளவரசர் உங்கள் இரண்டுபேரையும் அழைத்துவரச் சொன்னார். கலியாண மண்டபத்தில் இருக்கிறார்.

குமார : மாதவகுப்தன் அங்கே இருக்கிறானா ?

வே : இருக்கிறார்.

பண் : சரி. போவோம் வா.

[போகிறார்கள்.]

## காட்சி 2

### தேவகுப்தனும் சசாங்கனும்

சசா : என்ன தேவகுப்தா? கன்னோசிக்கு அதிருஷ்டம்தான்.

தேவ : என்ன அதிருஷ்டம்? பயங்கொள்ளித்தனமாய் கலியாணம் செய்துகொண்டதா?

சசா : ஏன்? நம் முன்னால்தானே விவாகம் நடந்தது.

தேவ : ஆமாம். பிரபாகரவர்த்தனன் சுயம்வரம் நடத்தியிருந்தால் கிரஹவர்மன் அதிருஷ்டம் தெரியும்.

சசா : ராஜ்யஸ்ரீ உன்னை மணந்திருப்பாளோ? அதுதான் உன் குறையோ?

தேவ : நீகூடவா பரிகாசம் செய்யவேண்டும்?

சசா : கோழை! நீ இவ்வளவு மோசமா? ராஜ்ய விவகாரங்களில் சிரத்தை காட்டுவாயென்று நினைத்தேன். ராஜ்யஸ்ரீயின்மேல் போய்விட்டது உன் கவனம்.

தேவ : ஒன்றுமில்லை. விவாகமோ நடந்துவிட்டது. அதைப் பற்றிப் பேசி என்ன பயன்?

சசா : என்ன பயனா? கன்னோசியின் பலம் இந்த கலியாணத்தினால் அதிகரித்திருப்பதை மறந்துவிட்டாயா?

தேவ : பிரமாதமோ? கன்னோசிக்குத் தானேஸ்வரம் எவ்வளவு காலம் உதவிசெய்யமுடியும்?

சசா : அப்படியென்றால்?

தேவ : பிரபாகரவர்த்தனன் கிழவன். கூடிய சீக்கிரம் இறந்துவிடுவான். தவிர...

சசா : ஊம்...தவிர?

தேவ : உன்னுடைய தயவு இருக்கும்வரையில் எனக்கு எதுதான் பிரமாதம்?

சசா : உஸ்! அதைப்பற்றி இப்பொழுது என்ன பேச்சு! பண்டியின் பார்வை பருந்தைப்போன்றது.

தேவ : இப்பொழுது யார்நம்மீது சந்தேகப்படப் போகிறார்கள்?

சசா : சரி! பிரபாகரவர்த்தனன் இறந்துவிட்டால்? புலிக்குட்டிகள் போன்ற பிள்ளைகள் இரண்டுபேரையும் மறந்துவிட்டாயா?

தேவ : அந்தச் சிறுவர்களுக்கா நான் பயப்படுவேன்?

சசா : சிறுவர்களா அவர்கள்! தோற்றத்தில்தான் அப்படி. செய்கையில் சிங்கங்கள்!

தேவ: புலிக்குட்டிகள் இப்பொழுது சிங்கங்களாக மாறி விட்டனவோ?

சசா: அவர்கள் இருவரும் எப்படி வேண்டுமானாலும் மாறு வார்கள். வீரம், தைரியம் இரண்டும் உருவெடுத்தவர்கள்தான் ராஜ்யவர்த்தனனும் ஹர்ஷனும்.

தேவ: சசாங்கா! வர்த்தனர்கள்மேல் என்ன இவ்வளவு பிரேமை?

சசா: பிரேமையா? உண்மையைச் சொன்னேன். அது மட்டுமல்ல. அவர்கள் எதைப் பொறுத்தாலும் ராஜ்யஸ்ரீக்கு தீங்கு ஏற்பட்டால் சகிக்கமாட்டார்கள்.

தேவ: சரி. அப்படியானால் நான் என் விதியை நொந்து கொண்டு பேசாமலிருக்கவேண்டியதுதான்.

சசா: என்ன? மாளவமன்னனா இப்படிப் பேசுவது?

தேவ: ஏன்? உண்மை நிலையை அறிந்து நடப்பதில் ஆச்சரி யம் என்ன?

சசா: உண்மையை ஒப்புக்கொள்ளுகிறவன் கோழை.

தேவ: என்ன செய்வது? மலையின்மீது முட்டிக்கொண்டால் தலைதானே சிதறும்?

சசா: பேஷ்! அந்த மலையைச் சிதறவடிக்க ஒரு சிற்றுளி போதாதா?

தேவ: இந்த வர்ம—வர்த்தனர்களின் சேர்க்கையை எந்த சிற்றுளி வெல்லமுடியும்? அவர்களுடைய பலத்தை நீயே ஒப்புக் கொள்ளுகிறாய்.

சசா: ஏன்? கன்னோசிக்கு தானேஸ்வரத்தின் உதவி கிடைத் ததுபோல உனக்கும் ஒரு துணை கிடைக்காதா?

தேவ: உன்னைத் தவிர எனக்கு யார் துணை இருக்கிறார்கள்?

சசா: பின் தயக்கமேன்?

தேவ: சசாங்கா, உண்மையாக உதவி செய்வாயா?

சசா: என்ன சந்தேகம்? தேவகுப்தா! மௌகரி மன்ன னும் தானேஸ்வர ராஜனும் சேர்ந்து வளரும்போது கௌடதேசம் தூங்கிக்கொண்டிருக்குமா?

தேவ: ஆனால் இந்த முகூர்த்தத்திலேயே நம்முடைய நேசத்தை உறுதிசெய்துகொள்வோம்.

சசா: ஆம். (கை அடித்துக்கொள்கிறார்கள்.) சபையில் தேடப்போகிறார்கள். வா போவோம். பண்டி சந்தேகப்படுவான்.

[போகிறார்கள்.]

## காட்சி 3

### அரண்மனையில்

[ராஜ்யஸ்ரீ தன்னுடைய புதிய சந்தோஷத்தைக் குறித்து சிந்தித்துக் கொண்டிருக்கிறாள். அரசன் பிரபாகரவர்த்தனனும் தாயார் யசோமதியும் வருகிறார்கள். ராஜ்யஸ்ரீ எழுந்து அவளருகில் போனாள்.]

**யசோ:** கண்ணே, ராஜ்யா, என்ன தனியே உட்கார்ந்து கொண்டிருக்கிறாய்?

**பிரபாகரன்;** குழந்தைக்கு இனிமேல் தனிமையில்தானே பிரியம்.

ராஜ்ய: இல்லை அம்மா. ஹர்ஷ அண்ணா வருவாரென்று பார்த்துக் கொண்டிருந்தேன். எங்கே அண்ணா?

யசோ: ஹர்ஷனுக்கும் ராஜாவுக்கும் எவ்வளவோ வேலை. கலியாணத்திற்கு வந்த மன்னர்களை வழியனுப்பிக்கொண்டிருக்கிறான்.

ராஜ்ய: ராஜ்யண்ணாதான் இருக்கிறாரே. சின்னண்ணாவை நேற்று ராத்திரியிலிருந்து நான் பார்க்கவேயில்லை.

பிர: தன் வேலை முடிந்ததும் வந்துவிடுவான். என்ன இவ்வளவு கவலை?

ராஜ்ய: ஆம். ரெண்டுபேருக்கும் என்ன வேலை? யாராவது ஒருவர்கூட இங்கே வரக்கூடாதா?

யசோ: கன்னோசிக்குப் போன பிறகு என்ன செய்யப் போகிறாய்?

ராஜ்ய: அண்ணாவும் என்னோடே வரமாட்டாரா?

யசோ: பைத்தியந்தான்! அண்ணா உன்னோடு வருவானா?

ராஜ்ய: நான்மாத்திரம்தானா போகவேண்டும்?

யசோ: நீயும் உன் கணவரும்தான்.

பிர: யசோமதி, இப்பொழுதே ஏன் குழந்தைக்கு வீண் கவலை கொடுக்கிறாய்?

யசோ: சரிதான். அவளுக்கு இதெல்லாம் தெரியவேண்டாமா? எத்தனை நாள் குழந்தையாகவே இருப்பது?

பிர: ராஜ்யா, நீ இப்பொழுது கன்னோசி ராணியாகிவிட்டாய். கிரஹவர்மனோடு அங்குபோய் வாழவேண்டும். கவலைப்படாதே. அண்ணா அடிக்கடி வந்து பார்த்துக்கொண்டிருப்பான்.

ராஜ்ய: அப்பா, அது தெரியாதா எனக்கு. அண்ணா ரெண்டுபேரையும் விட்டுப் பிரியவேண்டுமே என்றுதான் கவலைப் பட்டுக் கொண்டிருந்தேன்.

[ராஜ்யவர்த்தனன் வருகிறான்.]

ரா. வ.: கவலையா? கன்னோசி ராணிக்குக் கூடவா கவலை?

ராஜ்ய: அண்ணா! எங்கே போயிருந்தாய்? சின்ன அண்ணா எங்கே? உங்களைப் பார்க்கவில்லையே என்றுதான் கவலை.

ரா. வ.: ஹர்ஷன் வருகிறான். கிரஹவர்மன் இங்கே இருப்பானென்று நினைத்தேன். அதனால்தான் நான் வரவில்லை.

ராஜ்ய: இருந்தாலென்ன......போ அண்ணா! இதுதான் உன்னோடு.

யசோ: ராஜா! தங்கையைப் பரிகாசம் செய்கிறாயா?

ரா. வ.: இல்லை அம்மா. உண்மையாகவே சொல்லுகிறேன்.

பிர: ராஜா; குழந்தை உங்கள் இருவரையும் காணவில்லையென்றுதான் கவலையோடிருந்தாள். கிரஹவர்மன் சபாமண்டபத்தில் சசாங்கனோடு பேசிக்கொண்டிருந்தான்.

ரா. வ.: ஆம். இப்பொழுதுதான் பார்த்தேன். ஹர்ஷனும் அங்கேதான் போனான். அவனைப் பார்த்த பிறகுதான் நான் இங்கே வந்தேன்.

பிர: நல்லவேளை. ஹர்ஷன் அங்கே இருக்கிறானா! சசாங்கனைப்பற்றி ஜாக்கிரதையாயிருக்கவேண்டும்.

ராஜ்ய: ஏன் அப்பா, அவர் கெட்டவரா?

பிர: ஒன்றுமில்லை அம்மா. ராஜாங்க விஷயமாக சொன்னேன்.

ராஜ்ய: அவரோடு ஏன் பேசவேண்டும்?

யசோ: புறப்பட்டுப்போகிறவர்களை அனுப்பவேண்டாமா? இப்பொழுது வந்துவிடுவார் கன்னோசி மன்னர் கவலைப்படாதே.

ரா. வ.: ஹர்ஷன்தான் கூட இருக்கிறானே. உனக்கென்ன கவலை?

பிரபா: அதோ முரசொலி! சசாங்கன் புறப்பட்டுவிட்டான். ஹர்ஷனும் கிரஹவர்மனும் வந்துவிடுவார்கள்.

யசோ: ராஜ்யா, எங்கே வீணை? எடுத்துவைத்துக்கொண்டு பாடு. மன்னன் வரும் வேளை.

ராஜ்ய: வேண்டாம் அம்மா. இப்போ பாட்டுப் பாடவே வராது.

ரா. வ.: ராஜ்யா, நாங்கள் கேட்கவேண்டாமா?

பிர: ஆம் கண்ணே, இனிமேல் அடிக்கடி உன் கானத்தைக் கேட்கமுடியுமா?

ராஜ்ய: அப்பா!......இதோ பாடுகிறேன்.

[ராஜ்யஸ்ரீ பாடிக்கொண்டு இருக்கும்போது கிரஹவர்மன் வருகிருன். ராஜ்யஸ்ரீ எழுந்து யசோமதி அருகில் போய் நிற்கிருள்.]

கிரஹ: நமஸ்காரம் அரசே. ராஜ்யவர்த்தனு! ஹர்ஷன் உன்னை அழைத்துவரச்சொன்னுன்.

பிர: என்ன கிரஹவர்மா என்ன அவ்வளவு அவசரம்? ஹர்ஷனை எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்ருேமே.

ரா. வ.: சசாங்கன் புறப்பட்டுப் போய்விட்டானு?

கிரஹ: சசாங்கன் போய்விட்டான். பண்டி ஹர்ஷனிடம் ஏதோ சொன்னுன். உடனே ஹர்ஷன் உன்னைப் பார்க்கவேண்டுமென்று சொன்னுன்.

பிரபா: சரி, கிரஹவர்மா நீ இங்கே இரு. நானும் ராஜாவும் போகிருேம்.

[போகிருர்கள். யசோமதி ராஜ்யஸ்ரீயிடம் ஏதோ சொல்லிவிட்டுப் பின்தொடருகிருள்.]

[ராஜ்யஸ்ரீ கிரஹவர்மனுடன் தனிமையாயிருப்பதை உணர்ந்து சிறிது நேரம் ஒன்றும் தோன்ருமல் நிற்கிருள்.]

கிரஹ: ராஜ்யஸ்ரீ, என்ன மௌனம்? கவலையா, கோபமா?

ராஜ்ய: அப்பாவும் அண்ணுவும் ஏன் அவசரமாய்ப் போனுர்கள். சின்னண்ணு ஏன் வரவில்லை? உங்களோடுதான் இருந்தாராமே?

கிரஹ: என்ன பரிவு! நான் இருப்பதை கவனிக்கவில்லை. சின்னண்ணுமீதுதான் சிரத்தை.

ராஜ்ய: இதென்ன பரிகாசம். பரிவு இயற்கைதானே?

கிரஹ: நியாயம், நான் இங்கே வந்ததுதான் தப்பு. நான் போய்விடுகிறேன். (நகருகிருன்.)

ராஜ்ய: ஐயோ! வேண்டாம். (ஓடிப்போய் அவனைப் பிடித்துக்கொள்கிருள்.) அண்ணுவைப் பார்க்கவேண்டுமென்ருல் அதற்கு இவ்வளவு தண்டனையா?

கிரஹ: அண்ணு எப்பொழுதும் உன்னேடு இருப்பானு? ராஜகாரியங்களைவிட்டுக் கன்னேசிக்கு வருவானு?

ராஜ்ய: ஆம், ஒவ்வொருவராக இதைச்சொல்லி என்னை ஏன் கஷ்டப்படுத்துகிறீர்கள். அவன் நம்மோடு வரமுடியாதே என்றுதான் இங்கிருக்கும்போதாவது அவனைப் பார்க்கலாமென்று நினைத்தேன். இதுகூடக் குற்றமா?

கிருஹ: இப்பொழுது வந்துவிடுவான். வேண்டிய மட்டும் பாரு. அவனும் இங்கு வரவேண்டுமென்று துடித்துக்கொண்டுதானிருந்தான். இளவரசனுயிற்றே. எவ்வளவோ பொறுப்புகள்.

ராஜ்ய: பெரியண்ணா இருக்கிறபோது இவனுக்கென்ன பொறுப்பு. இப்பொழுது என்ன விசேஷம்? பெரியண்ணாவையும் கூப்பிட்டானே!

கிரஹ: விசேஷமுமில்லை ஒன்றுமில்லை. வேண்டுமென்றே செய்திருப்பான் என்று எனக்குத் தோன்றுகிறது. நான் ஏமாந்து போனேன்.

ராஜ்ய: ஏமாற்றமா? எதில்? என் விஷயத்திலா?

கிரஹ: ஒரு வழியில் அப்படித்தான் சொல்லவேண்டும்.

ராஜ்ய: ஆம், எனக்குத் தெரியும் என்மேல் குற்றத்தைப் போடுவீர்களென்று. (கோபத்துடன் விலகுகிருள்.)

கிரஹ: அட கஷ்டமே! தப்பர்த்தம் செய்துவிட்டாயே. நான் இங்கே வரும்போது ஹர்ஷனையும் அழைத்தேன். முதலில் ஏதோ சாக்குச் சொன்னான். ராஜ்ய வர்த்தனனும் இங்கு இருப்பதாகச் சொன்னேன். முதலில்கூட வந்தவன் திடீரென்று பண்டியோடு ஏதோ பேசிக்கொண்டிருந்தான். என்னிடம் ராஜ்யவர்த்தனனை அனுப்பச்சொல்லிவிட்டு நின்றுவிட்டான்.

ராஜ்ய: திருப்பித் திருப்பி இதை ஏன் சொல்கிறீர்கள்?

கிரஹ: இதில்தான் நான் ஏமாந்தது. உன் தந்தையும் ராஜ்யவர்த்தனனும் போனதோடு உன் தாயாரும் இவ்விடத்தை விட்டுப் போய்விட்டாள். அப்பொழுதுதான் எனக்கு ஹர்ஷன் தந்திரம் புரிந்தது.

ராஜ்ய: இதிலென்ன தந்திரமும் மந்திரமும்.

கிரஹ: என்ன வாஞ்சை சகோதரன்மேல்! அதனால்தான் அவனுக்கும் உன் விஷயத்தில் இவ்வளவு சிரத்தை. இன்னுமா தெரியவில்லை? நாமிருவரும் தனித்து இருக்கவேண்டுமென்று ஹர்ஷன் இம்மாதிரி செய்திருக்கிறான்.

ராஜ்ய: நிஜமாவா......ஆனால் என்னைத் தனியாக சந்திப்பதில்தான் உங்களுக்கு ஏமாற்றமோ?

கிரஹ: அப்படியா சொன்னேன். அவனுடைய தந்திரத்தை அறியவில்லையென்று சொன்னேன்.

ராஜ்ய: ஏமாந்துபோனதில் சந்தோஷம்தானே?

கிரஹ: இம்மாதிரி பலன் கிடைக்குமானால் எத்தனை தடவை வேண்டுமானாலும் ஏமாறலாம்.

ராஜ்ய: உங்களை ஏமாற்றுவதற்கு ஒருவரும் இல்லாவிட்டால், நான் ஏமாந்துபோகவேண்டும்.

கிரஹ: அவ்வளவு சிரத்தையற்றவனா நான்?

ராஜ்ய: ரொம்பவும் சிரத்தைதான்! இவ்வளவு நேரம் என்னைக் காக்கவைத்ததிலிருந்தே உங்கள் சிரத்தை தெரிகிறதே!

கிரஹ: நான் வேண்டுமென்று செய்தேனா? மன்னர்களை வழியனுப்பிக்கொண்டிருந்தேன்.

ராஜ்ய: கௌட மன்னனைப்பற்றி ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்று அப்பா சொன்னாரே? ஏன்?

கிரஹ: சசாங்கனைப்பற்றியா? ஒன்றுமில்லை. அரசர்களுக்குள் ஒருவருக்கொருவர் எப்பொழுதும் ஜாக்கிரதையாகத் தான் இருக்கவேண்டும். அது ராஜதந்திரத்தின் முதல் விதி. அதைப்பற்றி நீ ஏன் கவலைப்படுகிறாய்?

ராஜ்ய: கவலையில்லாமல் இருக்கமுடியுமா? அவருக்கு உங்கள்மேல் விரோதமா?

கிரஹ: விரோதமோ, குரோதமோ ஒன்றுமில்லை. ஒரு வேளை பொறாமையிருக்கலாம்.

ராஜ்ய: பொறாமையா? ஏன்?

கிரஹ: எனக்கு நீ கிடைத்ததைப்பற்றித்தான்.

ராஜ்ய: ஆம், ஏதாவது கேட்டால் பரிகாசம். ராஜ்ய விஷயங்களில் தலையிடக்கூடாது என்று சொல்லிவிட்டால் பேசாமலிருந்துவிடுகிறேன்.

கிரஹ: அப்படிச் சொல்வேனா? ராஜ்யலக்ஷ்மியாகிய நீ இல்லாமல் என்ன ராஜ்ய காரியம்? உண்மையைத்தான் சொன்னேன்.

ஹர்ஷ: ராஜ்யா! ராஜ்யம்!

ராஜ்ய: அதோ அண்ணா!

ஹர்ஷ: ராஜ்யம், என்னைத் தேடினாயா?

ராஜ்ய: தேடுவதா, எவ்வளவு நாழியாக உனக்காக காத்துக்கொண்டிருந்தேன். எங்கே போயிருந்தாய்? ஏதோ அவசரமாய் அழைக்கிறாய் என்று பெரியண்ணா வந்தாரே.

ஹர்ஷ: ஒன்றுமில்லை. ராஜ்ய விஷயமாக ஒன்று கவனிக்க வேண்டியிருந்தது.

கிரஹ: பார்த்தாயா, நான் சொன்னால் கோபித்துக்கொண்டாயே. ராஜ்ய விஷயங்களில் உனக்கு என்ன கவலை?

ராஜ்ய: அப்படி ஒன்றும் சொல்லவில்லை. எங்கள் அண்ணாவுக்கு உண்மையாகவே வேலை இருக்கும்.

கிரஹ: உனக்கு உங்கள் அண்ணாதான் பெரிது.

ராஜ்ய : இருக்காதோ, நேற்றுமுதல் சின்னண்ணுவை பார்க்கவேயில்லை.

ஹர்ஷ : ராஜ்யம், மௌகரி மன்னனுக்குக் கோபம் வந்துவிடப்போகிறது. கிரஹவர்மா, இன்னும் சில நாட்கள்தானே ராஜ்யஸ்ரீ இங்கே இருக்கப் போகிருள்......

கிரஹ : ஹர்ஷா, நீ சமர்த்தன். சகோதரியின் பிரியத்திற்கு தகுந்த பரிவுடன் பேசுகிருய். ஏதோ காரியம் இருப்பதாகச் சொல்லிவிட்டு என்னை மாத்திரம் இங்கே அனுப்பினுய்.

ஹர்ஷ : ஏன், இங்கே வர இஷ்டமில்லையா?

ராஜ்ய : அதனுல்தான் அப்படிப் பேசுகிருர்.

கிரஹ : இரண்டுபேரும் சேர்ந்துவிட்டீர்களா? இஷ்டம் ஒருபுறமிருக்கட்டும். உங்கள் அண்ணு சொல்வதெல்லாம் உண்மை என்ருயே. வேலை இருப்பதாகச்சொன்னது பொய்தானே?

ராஜ்ய : ஒன்றுமில்லை. நிஜமாகத்தான் இருக்கும். ஏன் அண்ணு?

ஹர்ஷ : உண்மைதான்.

கிரஹ : சகோதரிக்காக புது யோசனையோ?

ஹர்ஷ : இல்லை. முக்கியமான வேலை இருந்தது.

கிரஹ : என்னவென்று கேட்கலாமா?

ஹர்ஷ : பிறகு சொல்கிறேன்.

கிரஹ : இருந்தால்தானே இப்பொழுது சொல்வதற்கு. என்ன ராஜ்யஸ்ரீ?

ராஜ்ய : என்ன அவசரம்? அந்த சசாங்கனைப்பற்றியதாய் இருக்கும். என் முன்னுல் சொல்லக்கூடாது என்றுதான். ஏன் அண்ணு?

ஹர்ஷ : உனக்கு எப்படித் தெரியும்?

ராஜ்ய : தெரிவதென்ன. அதைப்பற்றித்தானே எல்லோரும் மறைமுகமாகப் பேசிக்கொண்டிருக்கிருர்கள். எனக்கு ஒரே கவலையாயிருக்கிறது.

ஹர்ஷ : உனக்கென்ன கவலை? ஆளும் அரசர்களுக்குள் எவ்வளவோ விவகாரங்கள். இதற்குக் கவலைப்படலாமா?

ராஜ்ய: நமக்கு ஏதாவது தீமை நேரிட்டால்?

கிரஹ: தீமையா? யாரால்?

ராஜ்ய: நீங்கள் பேசிக்கொண்டிருந்தீர்களே; கௌட மன்னனுல்தான்.

ஹர்ஷ: ராஜ்யம், இதென்ன பைத்தியம்! கௌடம் எங்கே, தானேஸ்வரம் எங்கே!

ராஜ்ய: நான் கன்னேசியிலல்லவா இருப்பேன்.

ஹர்ஷ: தானேஸ்வரத்தின் பிரியாத பாகமல்லவா கன்னேசி. என்ன மன்னு?

கிரஹ: தானேஸ்வர நிழலில் தானே கன்னேசிக் கொடி படரும்.

ராஜ்ய: இருந்தாலும் எனக்கு பயமாகவே இருக்கிறது.

ஹர்ஷ: பயமா? வர்த்தன குமாரிக்கா? நானும் ராஜாவும் இருக்கும்போதா உனக்கு பயம்?

ராஜ்ய: நான் கேட்டால் ஒன்றும் சொல்லாமல் மறைத்து விடுகிறீர்களே?

ஹர்ஷ: அதிலிருந்தா உனக்கு சந்தேகம்! ராஜ்யம், அப்படி ஒன்றும் விபரீதமில்லை. கன்னேசி, தானேஸ்வர ஒற்றுமையை சரிவரப் பாதுகாப்பதைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம். வேறென்றுமில்லை. தானேஸ்வர ராஜகுமாரியும், கன்னேசி ராணியுமான உனக்குத் தெரியாமல் ஒன்றும் நடக்கப்போவதில்லை. உன்னிடம் சொல்லாமல் இருப்போனு? கன்னேசிக்குப் போக வேண்டிய சந்தர்ப்பத்தில் உன் மனம் இப்படி சஞ்சலப்படக் கூடாது.

ராஜ்ய: உங்களை விட்டுவிட்டுப் போகவேண்டுமே. எப்படி நிம்மதியாயிருப்பது?

ஹர்ஷ: அப்படி ஒன்றுமில்லை. இனிமேல் கன்னேசிக்கும் தானேஸ்வரத்திற்கும் நடுவில் தொலைவே இல்லையென்று நினைத்துக் கொள். வா போவோம். அம்மா தேடுவாள். (போகிறுர்கள்.)

---

## காட்சி 4

**அரண்மனை. பயிற்சிக்களம்.**

[ஹர்ஷனும், மாதவகுப்தனும் கத்திச்சண்டை பழகுகின்றனர். சிறிது நேரம் கழித்து, மாதவகுப்தன் அடியில் ஹர்ஷன் கத்தி கீழே விழுகிறது.]

*மாதவ:* (கத்தியைக் கீழே போட்டுவிட்டு) ஏன் ஹர்ஷா சரியாகவே கவனம் செலுத்தமாட்டேனென்கிறாய்?

*ஹர்ஷ:* (சோர்ந்து உட்கார்ந்து) இன்று ஒன்றுமே ஓடவில்லை.

*மாதவ:* ராஜகுமாரன் சொல்லும் வார்த்தையா இது? இப்படியிருந்தால் ஹூணர்களை எப்படி ஜயிக்கப் போகிறாய்?

*ஹர்ஷ:* ஹூணர்கள் நமது ராஜ்யத்தைத் தாக்குவதற்குள் எவ்வளவோ யுத்த முறைகளைக் கற்றுக்கொள்வேன். போர்க்களம் போகத் தந்தை அனுமதிப்பாரோ என்பதுதான் சந்தேகம்.

*மாதவ:* நியாயம்தானே, ராஜ்யவர்த்தனன் போகும்போது உனக்கென்ன?

*ஹர்ஷ:* ராஜாவா? யுத்தகளம் போனவுடன் எதிரிகளை மன்னித்துவிடுவான். நாளுக்குநாள் அவன் புத்தசந்நியாசிகளோடு அதிகமாகப் பழகுகிறான். இங்கே பயிற்சிக்கு வந்து எத்தனை நாட்களாகிறது?

*மாதவ:* அவ்வளவு மோசமாகப் போகவில்லை இன்னும். ராஜ்யப் பொறுப்பு அவனுக்கு அதிகரித்துவிட்டது. அதனால்தான் வருவதில்லை.

*ஹர்ஷ:* நான் ஏதாவது கேட்டால் என்னைச் சிறு குழந்தை போல நடத்துகிறான். பண்டியும் அவனோடுதான் சுற்றுகிறான். குமாரன் எங்கே?

*மாதவ:* பண்டியைத் தேடிக்கொண்டுதான் போனான்.

*ஹர்ஷ:* சரி, வெளியில் போய் உலாவிவிட்டு வரலாமா?

*மாதவ:* ஆரம்பித்துவிட்டாயா? உன்னோடு வந்தால் விபரீதம் தான். காலில் முள் தைத்தால் அதைப்பற்றி வர்ணிக்க ஆரம்பித்துவிடுவாய்? வலியை கவனிக்கமாட்டாய்.

*ஹர்ஷ:* வர்ணிக்காமல் என்ன செய்வது? இயற்கையின் நித்திரை கலையும்படி நாம் பலமாக நடக்கக்கூடாதென்றுதானே, முள் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது.

*மாதவ:* அதற்காக நிலமெங்கும் முள் நிறைத்துவைப்பது தான் இயற்கையின் முறையோ?

ஹர்ஷ: இல்லாவிட்டால் பிராணிகளுக்கு ஆகாரமாக புல் பூண்டு சிறிதும் இல்லாமல் மனிதன் மிதித்து அழித்துவிடுவான். அந்த அழிவினின்றும் காப்பாற்றிக் கொள்வதற்காகத்தான் இயற்கை மனிதனை முள்மூலம் கண்டிக்கிறது.

மாதவ: இயற்கையை அப்படியாவது காப்பாற்றி என்ன ஆகவேண்டும்?

ஹர்ஷ: அதன் அழகை நாம் ரஸிப்பதற்குத்தான். ரோஜாவில் முள்ளில்லாவிட்டால் சோலைக்கு வனப்புக் கொடுக்கும் புஷ்பங்களை விட்டுவைத்திருப்போமா? தாமரை, நீரில் வளராவிட்டால் தடாகத்திற்கு அழகு கொடுக்க ஒன்றுவது மிஞ்சுமா? அந்த முள்ளும் நீரும்தான் மலருக்குப் பாதுகாப்பு.

மாதவ: வேண்டுமானால் அந்த மலர்களை இயற்கையே வைத்துக்கொள்ளட்டுமே. மனிதனுக்கென்று சிருஷ்டித்துவிட்டு பாதுகாப்புகள் எதற்காக?

ஹர்ஷ: தப்பு. மனிதனுக்கு என்று சிருஷ்டிக்கவில்லை. இயற்கை தன்னை அழகுசெய்துகொள்கிறது. அதைக் கலைக்க மனிதனுக்கு என்ன உரிமை? இஷ்டமிருந்தால் ரஸிக்கட்டும். ரஸித்தலும் அழித்தலும் ஒன்றாகுமா?

மாதவ: உபயோகத்திற்குதவாததை ரஸித்து என்ன பலன்?

ஹர்ஷ: உபயோகிப்பதை ரஸிக்கமுடியாது. வானம் தொலைவிலிருக்கும்வரைதான் நீலமாகத் தோன்றும். அந்த நீலத்தை நமக்கு உபயோகித்துக்கொள்ளமுடியுமா? அருகில் போய்ப் பார்த்தால் ஒன்றுமே இருக்காது.

மாதவ: அப்படியானால் அந்த வர்ணம் நமது மனோ பிரமை தானே? இயற்கையின் அழகு என்கிறாயே அதுவும் அப்படித் தானே?

ஹர்ஷ: அப்படியல்ல. இயற்கையின் அழகு உண்மை. அதை நாம் ரஸிப்பதுதான் நமது மனோநிலையைப் பொறுத்திருக்கிறது. அந்த அழகு அழியாமலிருப்பதற்காகத் தான் சுற்றி அபாயங்கள் நிறைந்திருக்கின்றன.

மாதவ: அபாயத்தை நீக்குவது மனிதன் கடமையல்லவா?

ஹர்ஷ: அபாயம் தானாக ஏற்படவில்லை. அவனுடைய தீமையைத் தடுக்கும் ஆயுதமாகத்தான் இருக்கிறது. அவன் சும்மாயிருந்தால் இயற்கை அவனை ஒன்றும் செய்யாது. நீ பாம்பை மிதித்தால்தானே அது உன்னைத் தீண்டுகிறது.

மாதவ: பாம்பு தீண்டுவதற்கே சந்தர்ப்பமில்லாமல் செய்துவிட்டால்? மனிதனுக்கு உபயோகப்படாத அழகு இருந்தும் பயன் என்ன? இயற்கையின் அபாயங்களை அகற்றி அதன் அழகை அனுபவிக்க வசதிகள் செய்பவன் சிறந்தவன் அல்லவா?

ஹர்ஷ: வனத்தை அழித்து, வீடுகள் கட்டுவதைவிட அந்த வனத்தின் அழகை ரஸிப்பதுதான் சிறந்தது. இயற்கையைக் கொலைசெய்து மனிதனுக்கு சௌகரியம் செய்பவனைவிட, அந்த இயற்கையின் அழகை சித்திரத்திலும், கவிதையிலும் சிருஷ்டிப்பவன்தான் சிறந்தவன்.

மாதவ: இயற்கைதான் இருக்கிறதே அதை மறுபடியும் சிருஷ்டிப்பதேன்?

ஹர்ஷ: அதுதான் மனித வளர்ச்சியின் ரகஸ்யம். துரதிர்ஷ்டவசமாக மனித வர்க்கத்தில் எல்லோருக்குமே ஒரே ரஸனையில்லை. ரஸனையில்லாமல், அழகை அழிப்பதுதான் அனுபவம் என்று திரியும் மனிதர்களின் தீங்குக்குப் பரிகாரமாக கலைஞர்கள் தோன்றியிருக்கிறார்கள். இயற்கை எப்பொழுதும் கவிஞனிடமும் கலைஞனிடமும் முறையிட்டுக்கொண்டிருக்கிறது. ஒருவன் இயற்கையின் தோற்றத்தை அழிக்கலாம். ஆனால் கவிஞனும் கலைஞனும் அதன் ஆத்மாவைப் பாதுகாக்கத் தயாராயிருக்கிறார்கள். அவர்களுடைய சிந்தனையிலும் உணர்ச்சியிலும் அழகுதான் ஜ்வலித்துக்கொண்டிருக்கிறது. அதற்கு அழிவு கிடையாது. நமது கண்களுக்குத் தெரியும் ஒரு காட்சியை நாம் ரஸிப்பதைவிட ஒரு கவிதையில் வர்ணிக்கப்படும் காட்சியை அதிக சந்தோஷத்தோடு ரஸிப்போம். வாழ்க்கையில் நம்மோடு பழகும் நண்பனைப் பற்றி நாம் ஊன்றி கவனிக்கமுடியாவிட்டாலும் அவனுடைய உருவ சித்திரத்தைப் பார்க்கும்போது அவனுடைய ஆத்மா முழுவதையும் நாம் அறியமுடிகிறதல்லவா?

மாதவ: ஆனால் அழகுக்கு ஏற்கனவே அமைந்துள்ள ஆயுதங்களோடு கலைஞனும் சேர்ந்துகொள்கிறானே?

ஹர்ஷ: அது கலைஞன் பொறுப்பல்ல. அவனுடைய சித்திரமும் கவிதையும் அவன் அனுபவித்த இன்பத்தின் பிம்பங்கள். அவன் வெளியிடும் உணர்ச்சிகளால் நாமும் அழகை சரியாக அனுபவிக்கக் கற்றுக்கொள்ளலாம்.

மாதவ: நீ சொல்வது ஒன்றுமே புரியவில்லை. முள் குத்தினால் நோகுமே என்றால், பிரசங்கம் செய்கிறாய். நோவுக்கு பிரசங்கம் பரிகாரமாகுமா?

ஹர்ஷ: சரியான உணர்ச்சி தாக்கப்பட்டால் முள்கூட நோய் கொடுக்காது. யுத்தகளத்தில் போர்புரியும் வீரன், தன் காயங்களால் ஏற்பட்ட நோவையா கவனிக்கிறான்? ஆபரணங்களை அணியும் பெண் அவைகளின் பாரத்தினால் வருந்துகிறாளா? முக்கியமான உணர்ச்சி ஒன்று இருக்கும்போது இடையில் ஏற்படும் சிறு தடைகளால் ரஸனைக்குப் பங்கம் ஏற்படாது. அந்த உணர்ச்சியை விருத்திசெய்வதற்காகத்தான் நாம் கலைக்கும், கவிதைக்கும் சேவைசெய்யவேண்டும்.

[பண்டியும் ராஜ்யவர்த்தனனும் வருகிறார்கள்.]

ரா. வ.: சேவையா? யாருக்கு? பயிற்சிக்களத்தில் சேவையைப்பற்றி ஆலோசித்துக்கொண்டிருக்கிறீர்களே!

மாதவ: ஹர்ஷன் வழக்கம்போல் கலைப்பிரசங்கம் செய்துகொண்டிருந்தான்.

பண்: பார்த்தாயா, கலா சேவையைப்பற்றி நான் சொன்னதெல்லாம் வெறும் பேச்சு என்று சொன்னுயே!

ரா. வ.: ஹர்ஷன் சொல்வதையெல்லாம் நீ நம்பிவிடுவாய்.

ஹர்ஷ: நம்பிக்கைதானே முதலில் அவசியம் அண்ணு? நீயே சொல்லியிருக்கிருயே.

ரா. வ.: ஆம், அழிவற்ற நிலையில் நம்பிக்கை அவசியம்தான். வெறும் தோற்றத்திலா?

ஹர்ஷ: அழகுதானே அழிவற்றது.

ரா. வ.: அழகு ஏது அதற்கு? வெறும் தோற்றத்தைத்தானே அழகு என்று சொல்கிருய்? தோற்றம் எப்பொழுதும் மறையும் குணமுடையது. வாழ்க்கையும் இயற்கையும் இருக்கும் வரைதானே நீ காணும் அழகு இருக்கமுடியும்?

ஹர்ஷ: அது இருக்கும்வரையிலாவது அதற்குச் சேவைசெய்தால்தான் அதனுடைய அழிவற்ற நிலையை உணரமுடியும்?

ரா. வ.: அவசியமில்லை. நீ சொல்லுகிறபடியே அழகு அழிவற்றது என்ருல் அதைப்பற்றி நாம் கவலைப்படுவானேன்?

ஹர்ஷ: என்ன அண்ணு, நம்முடைய பிரஜைகள் நல்ல குணமுடையவர்கள் என்பதற்காக நாம் அவர்களை ஆளாமல் இருக்கமுடியுமா?

ரா. வ.: ஆள்வது நாமல்ல; அவர்களேதான்.

ஹர்ஷ: நாம் கருவிகளல்லவா?

ரா. வ.: ஆம். கருவிகளுக்கு சிருஷ்டியைப்பற்றி என்ன?

ஹர்ஷ: சிருஷ்டியின் விளைவுக்கு சிருஷ்டியைப்பற்றிக் கவலையில்லாமல் இருக்கமுடியாது. உத்தம நிலையை அடைய அந்தக் கவலை வேண்டாமா?

ரா. வ.: அதற்கு ஞானம் இல்லையா? போலி சிருஷ்டியில் என்ன பயன்?

ஹர்ஷ: அவ்வளவு அறிவுபெற்றுவிட்டால் வாழ்க்கையே ஒன்றுமில்லாமல் போய்விடுமே.

ரா. வ.: வாழ்க்கையில் ஏதாவது இருக்கிறதாக நினைத்துக்கொண்டிருக்கிருயா?

ஹர்ஷ: ஆனுல், குடும்பம், பெற்ருேர், சகோதரர், என்பதெல்லாம் வெறும் பிரமைதானு?

ரா. வ.: அப்படிச் சொல்லிவிடலாமா? அன்பை மறக்க முடியுமா?

ஹர்ஷ: அந்த உணர்ச்சிக்குமாத்திரம் ஏன் சலுகை? ராஜ்யஸ்ரீ கன்னோசிக்குப் போய்விடுவாளென்று கவலைப்பட்டாயே. ஞானம் உதவிக்கு வரவில்லையே.

ரா. வ.: ஹர்ஷா, போதும். உன்னோடு வாதாடுவதே தப்பு. எப்படியாவது உணர்ச்சிகளைக் கிளறிவிடுகிறாய்.

மாதவ: அப்பா, நல்லவேளை. ஹர்ஷனுடைய கலைப் பிரசங்கம் நின்றதென்று நினைத்துக்கொண்டிருந்தேன். இருவரும் வேதாந்தம் பேச ஆரம்பித்துவிட்டார்கள்.

பண்: ராஜ்யவர்த்தனனுக்கு எப்படியாவது பௌத்தர்களோடு சேர்ந்துவிடவேண்டுமென்று. ஹர்ஷனுக்கு கவிதை புனைவதில் ஆசை. இரண்டுபேரும் சேர்ந்தால் கேட்கவேண்டுமா?

ஹர்ஷ: என்ன பண்டி, நாங்கள் பேசியது பிடிக்கவில்லையா?

பண்: ஏதாவது புரிந்தால்தானே பிடிப்பதற்கு.

ராஜ்ய: புரியவில்லையா! நமது வாழ்க்கையின் தத்துவமும் நோக்கமும் புரியவில்லையென்று சொல்லலாமா? கொஞ்சம் யோசனைசெய்துபார்த்தால்..................

பண்: இளவரசே! போதும் திரும்பவும் வேதாந்தம் ஆரம்பித்துவிடாதே.

மாதவ: இன்று பயிற்சிக்களம் பிரசங்கமேடையாகப் போய்விட்டது. கத்திகள் துருப்பிடித்துப்போய்விடும்போலிருக்கிறது.

ஹர்ஷ: ஆயுதங்கள் துருப்பிடித்தால் உணர்ச்சிகள் மழுங்குமா? கத்தியின் முனை மழுங்கலாம், நமது வீரம்?

[குமாரகுப்தன் வருகிறான்.]

குமார: என்ன, தபஸ்விகள்போல் உட்கார்ந்துகொண்டு இருக்கிறீர்களே? கத்தியும் கேடயமும் மோதும் சப்தம் கேட்கவில்லையே என்று நினைத்தேன்.

பண்: உணர்ச்சியும் அறிவும் மோதிக்கொண்டிருந்தன. நீ எங்கே போயிருந்தாய்?

குமார: கன்னோசி மன்னன் விடுதிக்கு. இன்று மாலை புறப்படுகிறாரே.

ஹர்ஷ: அண்ணா, மறந்துவிட்டேன். இன்று ராஜ்யஸ்ரீ புறப்படும் நாளாயிற்றே.

ராஜ்ய: அது சொல்லத்தான் இங்கு வந்தேன். தர்க்கத்திற்கு இழுத்துவிட்டாய். வா, போவோம்.

[போகிறார்கள்.]

## காட்சி 5

### உஜ்ஜயினி

தேவகுப்தன். சேவகன்.

*சேவகன் :* அரசே, கௌடமன்னன் அனுப்பிய தூதன் காத்துக்கொண்டிருக்கிறான்.

*தேவகுப்தன் :* சரி, வரச்சொல். நீ போய் ஒற்றர்படைத் தலைவனை அழைத்துவா.

[சேவகன் போகிறான்.]

*தேவ :* ஏது சசாங்கனே இவ்வளவு அவசரமாக நடந்து கொள்கிறான். இருந்தாலும் அவனுக்கு விசேஷ சமாசாரம் எதுவும் தெரியாமலிருக்காது.

[தூதன் வருகிறான்.]

*தூதன் :* நமஸ்காரம் மகராஜ்.

*தேவ :* கௌடம் அனுப்பிய செய்தி என்ன ?

*தூத :* என் அரசன் சொல்லியது கொஞ்சம்தான். இன்னுமா தூக்கம் என்று கேட்டுவரச்சொன்னார்.

*தேவ :* விழித்துக்கொண்டு செய்யவேண்டியது என்ன இருக்கிறது ?

*தூத :* அரசன் செவியாகிய கண்ணை உபயோகிக்கலாம்.

*தேவ:* ஆம், ஆனாலும் அப்படித் தெரியாதது ஒன்றுமில்லையே.

*தூத :* தோட்டக்காரன் இல்லாதபோதுதான் விழல் விதைக்கவேண்டும் என்று எமதரசர் சொல்லுகிறார்.

*தேவ :* தோட்டக்காரன்தானே முக்கியம். தோட்டத்தைப் பற்றிக் கவலையென்ன ?

*தூத :* காவல்காரன் கவனம் சிதறினால்தானே அவனைத் தாக்கமுடியும் ?

*தேவ:* இப்பொழுது என்னசெய்யவேண்டுமாம்.

[ஒற்றர்படைத் தலைவன் வருகிறான்.]

ஒ. த.: நமஸ்காரம் மகராஜ்.

தூத: உங்களுக்குத் தெரியாததா?

தேவ: சசாங்கன் ஒன்றும் சொல்லவில்லையா?

தூத: ராஜதந்திரத்தின் தீர்க்கதிருஷ்டியை உபயோகித்துக் கொள்ளச்சொன்னர்.

தேவ: இதோ அந்தத் தீர்க்கதிருஷ்டி. ஒற்றர் தலைவ, கன்னேசி செல்லவேண்டும். கிரஹவர்மன் வருவதற்குள் அங்கே அதிருப்தி ஏற்படவேண்டும்.

ஒ. த.: அப்படியே மகாராஜ். ஆனல் முதலில் இரண்டு கைகளிகள் வேண்டுமே!

தூத: கௌட ராஜதந்திரிகள் ஏற்கனவே அங்கே போயிருக்கிறார்கள்.

ஒ. த.: ஆனல் காரியம் சுலபம்தான்.

தேவ: ஒவ்வொரு நாளும் எனக்கு செய்தி வரவேண்டும்.

ஒ. த.: குதிரைப்படையில் ஒரு பாகம் கூடக் கொண்டு போகிறேன்.

தேவ: சசாங்கனுக்கு அடிக்கடி செய்தி அனுப்புகிறேன். மாளவம் தூங்கவில்லையென்று சொல்.

தூத: அப்படியே.

(போகிருன்.)

தேவ: எதற்கும், கௌட தேசதந்திரிகளிடம் ஜாக்கிரதையாயிருங்கள். சசாங்கன் தந்திரசாலி. நம்மை அவன் உபயோகித்துக் கொள்ளாமல் பார்த்துக்கொள்ளவேண்டும்.

ஒ. த.: நண்பனுனலும் எதிரியானலும் ஒரே கண்ணுடன் பார்ப்போம். அவர்கள் தந்திரம் நம்மிடம் பலிக்குமா?

தேவ: சரி, கன்னேசிக்குப் புறப்படு.

(போகிருர்கள்.)

## காட்சி 6

### தானேஸ்வரம். அரண்மனை.

[குமாரகுப்தன் தனியே உட்கார்ந்துகொண்டிருக்கிறான். மாதவ குப்தன் வருகிறான்.]

மாதவ: என்ன குமாரா, ஏதோ மாதிரி உட்கார்ந்துகொண்டிருக்கிறாய்? பண்டி எங்கே?

குமார: பண்டியா? எங்கே இருப்பான்? ஹர்ஷன் பின்னால்தான் சுற்றிக்கொண்டிருக்கிறான்.

மாதவ: நீ ஏன் ஏதோ பறிகொடுத்தவன் மாதிரி உட்கார்ந்துகொண்டிருக்கிறாய்?

குமார: ஒன்றும் தெரியாதவன் மாதிரிப் பேசுகிறாயே. யார் எப்படிப்போனாலென்ன? வாழ்க்கையிலேயே உனக்கு நம்பிக்கை கிடையாது.

மாதவ: அதற்கென்ன இப்பொழுது? ஏதாவது விபரீதம் நடந்துவிட்டதா?

குமார: உன்னிடத்தில் சொல்லி என்ன பயன்? ஒன்றும் ஓடவில்லை. பேசாமல் உட்கார்ந்துகொண்டிருக்கிறேன்.

மாதவ: ஒன்றும் ஓடவில்லையா? தெருக்களில் ரதங்கள் ஓடவில்லையா?

குமார: இப்பொழுதுதான் விளையாட்டுக்குச் சமயமோ?

மாதவ: ஒன்றும் ஓடவில்லை என்றாயே, விளையாடுவதற்குச் சௌகரியமாயிருக்காதா?

குமார: கொஞ்சமாவது உணர்ச்சியில்லாமல் உன்னைச் சிருஷ்டித்து என்னையும் உன்னோடு பிறக்கவைத்தானே, அந்தக் கடவுளை......

மாதவ: தண்டிக்கலாமா?

குமார: உணர்ச்சியற்ற உலர்ந்துபோன கட்டை நீ. இல்லாவிட்டால் இப்படி ஒரே அடியாய் இந்துமதியை மறந்திருப்பாயா?

மாதவ: ஹர்ஷன் மாதிரி எப்பொழுதும் சகோதரியைப் பற்றியே கவலைப்பட்டுக்கொண்டிருக்கவேண்டும். அதுதானே உன் உபதேசம்?

குமார: இளவரசி ராஜ்யஸ்ரீயாவது மணம் முடித்து ஊர் செல்கிறாள். அதற்கே ஹர்ஷன் கவலைப்படுகிறான். நமது தங்கை இந்துமதி பாவம். நீ அவளைப் பார்த்து இரண்டு நாட்களாகிறது.

மாதவ: வழக்கமான குற்றச்சாட்டுக்கு ஆரம்பித்துவிட்டாயா? அரண்மனைக் காரியங்களை விட்டுவிட்டு வீட்டில் என்ன செய்து கொண்டிருப்பேன்? நீதான் பார்த்துக்கொள்ளுகிறாயே.

குமார: இந்த ஆறுதலை நீயே இந்துமதிக்குச் சொல்லக் கூடாதா?

மாதவ: நீ ஹர்ஷனைவிட மோசம்.

குமார: ஹர்ஷனைப்பற்றித்தான் நினைத்துக்கொண்டிருக் கிறேன். ராஜ்யஸ்ரீ கன்னோசி போகிறாளென்று அவன் கவலை யுடன் திரிந்துகொண்டிருக்கிறான். அவன் முகத்தைப் பார்க்கவே பரிதாபமாயிருந்தது. அதனால்தான் தனியாய் உட்கார்ந்துகொண் டிருக்கிறேன்.

மாதவ: தெரிந்த விஷயம்தானே. ஹர்ஷன் கோழை......

(பண்டி வருகிறான்.)

பண்: ஹர்ஷன் கோழையா?

மாதவ: நண்பனுக்குப் பரிந்துகொண்டு வந்துவிட்டான். ஹர்ஷனிடமிருந்துதானே வருகிறாய்? அவன் என்ன தைரியமா யிருக்கிறானே? அவன் வீரத்தையா பழித்தேன் நான்?

பண்: இயற்கைதானே. தானேஸ்வரத்திற்கு மணிபோன்ற ஒரே பெண்; பிரபாகரவர்த்தனன் உயிர் இன்று பிரிந்துபோகிறா ளென்றால் கவலையிருக்காதோ?

மாதவ: எது இயற்கை? ராஜ்யஸ்ரீ போவது கடமைதானே. இதற்குக் கவலை ஏன்?

குமார: கடமைக்காக உணர்ச்சியில்லாமல் போய்விடுமோ?

மாதவ: எவ்வளவு காலம் உணர்ச்சிக்கு இடம்கொடுப்பது? ஹர்ஷனே கவலைப்பட்டால் ராஜ்யஸ்ரீ என்ன செய்வாள்? இதை அவன் அறியவேண்டாமா?

பண்: ராஜ்யவர்த்தனன் உபதேசம் உனக்கு ஊறிப்போய் இருக்கிறது. அவ்வளவு ஞானம் நினைத்தமாத்திரத்தில் வந்து விடுமா?

மாதவ: ராஜ்யவர்த்தனனுக்கு உணர்ச்சியில்லையா? இவ்வளவு மோசமா அவன்?

பண்: உனக்கென்ன தெரியும்? ஹர்ஷன் மலையருவிபோல் உணர்ச்சியைக் கொட்டிக்கொண்டிருப்பான். ராஜ்யவர்த்தனன் மூத்தவன். அறிவு, கௌரவம் என்ற அணைகளால் உணர்ச்சியை அடக்க முயல்கிறான். அந்த அணை உடைந்தால் வரும் பிரவாகம் மலையருவியை சிதறிய நிலையாகச் செய்துவிடும்.

மாதவ: எப்படியாவது உணர்ச்சிக்கு ஒரு எல்லை வேண்டாமா?

பண்: காலத்திற்கு எல்லை கட்டு. பிறகு உணர்ச்சிக்கு எல்லை காண்பது சுலபம். ஏதோ வெறும் வேதாந்தம் பேசுகிறாய். ராஜ்யஸ்ரீயின் மணம் ஏதோ சந்தோஷமாக நடந்துவிட்டது. அவள் பிரிவை சகோதரர்கள் இருவரும் எப்படியாவது சமாளித்துக்கொள்வார்கள். சக்கரவர்த்தியைப் பற்றித்தான் எனக்குக் கவலையாயிருக்கிறது. தன் அன்பின் உருவாகிய புத்திரியை விட்டுப் பிரிவதை அவர் சகிக்கமாட்டார்.

மாதவ: அவரும் ஹர்ஷனைப்போல் மனங்கலைந்து அலைகிறாரா?

பண்: இல்லை. தம்முடைய உணர்ச்சிப்பெருக்கை, அவ்வளவு வெளிப்படையாகக்காட்டிக்கொள்ளமாட்டார். பெற்றோரை விட்டுப் பிரியும் பெண்ணுக்குத் தைரியம் சொல்லவேண்டாமா? பிரிவின் பிந்திய பலனைப்பற்றித்தான் நான் கவலைப்படுகிறேன்.

மாதவ: ஏதோ எல்லாம் பைத்தியக்காரத்தனமாயிருக்கிறது.

குமார: போதும். நான் போகிறேன். உன் பிரசங்கத்தை நீயே வைத்துக்கொள்.

(போகிறான்.)

பண்: அப்பா, நீ கடும் சிந்தையுள்ளவன். உன் தம்பியின் மனம் நோகும்படி செய்துவிட்டாயே.

மாதவ: இளகிய மனத்தையுடையவனுக்குப் பிறர் நோகும்படி செய்யவேண்டுமா? சிறுவன்!

பண்: வா போவோம். கிரஹவர்மன் விடை பெற்றுக் கொள்ளும்போது உன் உணர்ச்சி என்ன செய்கிறதோ பார்ப்போம்.

(போகிறார்கள்.)

## காட்சி 7

### தானேஸ்வரம்

**ராஜ்யஸ்ரீ. இந்துமதி.**

இந்துமதி: ராஜ்யஸ்ரீ! நீ இந்தமாதிரிக் கவலைப்படுவது தவறு. ஊருக்குப் போகிற சமயத்தில் இப்படி இருக்கலாமா?

ராஜ்யஸ்ரீ: நீ சுலபமாய் சொல்லிவிட்டாய். நீ உன் சகோதரர்களோடு இங்கேயே இருக்கப்போகிறாய்? உனக்கும் விவாஹமாகி பிறந்த வீட்டைவிட்டுப் பிரியும்போது தெரியும்.

இந்து: ஆனால் இப்பொழுது கன்னோசிக்குப் போவதில் உனக்கு சந்தோஷமே இல்லையோ?...... மௌனம் சாதிக்கிறாயே.

ராஜ்ய: நீ எப்பொழுதும் விபரீதமாய் அர்த்தம் செய்து பேசுகிறாய். என்ன தான் இருந்தாலும், என்மேலே அவ்வளவு பிரியமாயிருக்கிற ஹர்ஷண்ணா, பெரியண்ணா இவர்களைவிட்டுப் பிரிந்து போவது என்றால்......

இந்து: இப்பொழுது அப்படித்தான் இருக்கும். கன்னோசி போனவுடன் எல்லாம் சரியாகப் போய்விடும்.

ராஜ்ய: என்னமோ என் மனம் கலங்கிவிட்டது. தாயார் தகப்பனாரிடம் எப்படி விடைபெற்றுக்கொள்ளப்போகிறேனென்று பயப்படுகிறேன்.

இந்து: போகும் சமயத்தில் சக்கரவர்த்தியின் மனம் கலங்கும்படி செய்துவிடாதே. அவர் நீ பிரியப்போவதை சமாளிக்க முயற்சிகள் செய்துகொண்டிருக்கிறார்.

ராஜ்ய: நீதான் அவருக்குச் சஞ்சலம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். உன்னையும் ஒரு புத்திரியாகவே நினைத்து வருகிறார். நான் போன பிறகு நீதான் தைரியம் சொல்லிக்கொண்டிருக்கவேண்டும்.

இந்து: என்னால் அது முடியுமானால் ரொம்ப சந்தோஷமாகச் செய்வேன்.

ராஜ்ய: நீ இங்கே இருப்பது அவருக்கு எவ்வளவோ ஆறுதல்.

இந்து: என் தந்தை யுத்தத்தில் இறந்தபின், எங்கள் மூவரையும் நீங்கள் தானே காப்பாற்றி வருகிறீர்கள். என்னால் அதற்கு நன்றி செலுத்தக்கூடுமானால், என் வாழ்க்கை முழுவதும் உங்களுக்கே செலவிடுகிறேன்.

ராஜ்ய: உன் வார்த்தைகளே எனக்கு தைரியங்கொடுக்கின்றன. சின்னண்ணு சொல்வதுபோல் நீ தைரியசாலிதான்.

இந்து: யார்? ஹர்ஷ ராஜாவா?

ராஜ்ய: நாங்கள் மூன்றுபேரும் இருப்பதைப்போல் நீ, குமாரகுப்தன், மாதவகுப்தன் மூன்றுபேரும் இருப்பதைப்பற்றி அடிக்கடி சொல்லியிருக்கிருன்.

இந்து: மாதவனு? அவனுக்கு எப்பொழுதும் வேலைதான். என்மேல் கவலையே கிடையாது.

ராஜ்ய: அப்படிச் சொல்லாதே. எங்க ராஜண்ணுவும் பார்ப்பதற்கு சிரத்தையில்லாததுபோலத்தான் இருப்பார். ஆனல் மனசு சின்னண்ணுவைவிட இளகியது.

இந்து: இருந்தாலும் ஹர்ஷராஜா அபிமானம் மாதிரி வராது. உயிரையே கொடுத்துவிடுவார்போலிருக்கு.

ராஜ்ய: இப்போதுதான் நினைவுவந்தது. ஹர்ஷண்ணு வரும் சமயம். அவர் வரும்போது சந்தோஷமாயிருக்கவேண்டும்.

இந்து: அதுதான் நல்லது. நமக்கு எவ்வளவு வருத்தமாயிருந்தாலும் வெளியில் காட்டக்கூடாது.

ராஜ்ய: அதற்கு நீதான் உதவிசெய்யவேண்டும்.

இந்து: நானு? எப்படி!

ராஜ்ய: உன்னுடைய பாட்டினுல்தான் எனக்கு மன சாந்தி வரவேண்டும்.

இந்து: சரிதான். ஹர்ஷராஜா உன் பாட்டை இனிமே எப்போ கேட்கப்போகிருர்? நீதான் பாடவேண்டும்.

ராஜ்ய: ஐயோ! நான் எப்படிப் பாடப்போகிறேன் இந்த நிலையில்? உன் பாட்டுதான் சின்னண்ணுவுக்கு ரொம்பப் பிடிக்கும்.

இந்து: இந்தமாதிரியெல்லாம் பரிகாசம் பண்ணிஞல்......

ராஜ்ய: அசடே, பரிகாசமா? நிஜமா சொல்றேன். எத்தனை நாள் நீ உன் அறையில் பாடிக்கொண்டிருந்தபோது சின்னண்ணு கொலுமண்டபத்திலே நின்று கேட்டுக்கொண்டிருந்தார் தெரியுமா?

இந்து: நிஜமாவா?

ராஜ்ய: பொய்யா சொல்றேன்?

இந்து: சரி, இதோ பாடுகிறேன்.

(பாடுகிருள்.)

## காட்சி 8

**கிரஹவர்மன். ராஜ்யவர்த்தனன்.**

ரா. வ.: இவ்வளவு சீக்கிரமாக நீங்கள் புறப்படுவீர்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. இன்னும் ஒரு மாதம் கழித்துப் போகக்கூடாதா?

கிரஹ: ராஜ்யவர்த்தனா, உன் சகோதரிமீது உனக்கிருக்கும் அன்பு எனக்குத் தெரியாதா? இருந்தாலும் நான் அதிக நாள் ராஜ்யத்தைவிட்டுப் பிரிந்திருக்கமுடியாது.

(ஹர்ஷன் வருகிறன்.)

ஹர்ஷ: ராஜ்யத்தையா? ராஜ்யஸ்ரீயையா?

கிரஹ: ஹர்ஷா, நீ ஏதோ கவலையுடனிருக்கிறாய் என்று நினைத்தேன். பரிகாசம் செய்கிறாயே.

ஹர்ஷ: பரிகாசமா? உண்மையான சந்தேகம் தானே கேட்டேன்.

ரா. வ.: நீங்கள் இங்கிருக்கும்பொழுதே ராஜதந்திர விஷயங்களில் உங்களிடம் பிக்ஷைபெறலாமென்றிருந்தேன்.

கிரஹ: பேஷ். ராஜதந்திரம் உனக்குக் கற்றுக்கொடுக்க வேண்டுமா? சக்கரவர்த்தியின் ஆளுகை உன் சாமர்த்தியத்தினால் அப்பொ சிறப்பாக இருக்கிறது. ஹர்ஷனுக்கும் உனக்கும் தெரியாத ராஜதந்திரம் எனக்கு என்ன தெரியும்?

ஹர்ஷ: இப்பொழுது பரிகாசம் செய்வது யார்? எனக்கென்ன தெரியும்? அண்ணாவைச் சொன்னது சரி. நான் வெறும் கனவுகாண்பவன் என்று அண்ணாவே சொல்வாரே.

ரா. வ.: ஹர்ஷனுடைய கலாசேவை எனக்குப் புரிவதில்லை. அதற்காக அப்படிச் சொல்லுகிறான்.

கிரஹ: எது எப்படி இருந்தாலும் உங்களுடைய வாஞ்சையும் வீரமும் போதுமே உலகத்தை பிரமிக்கச்செய்ய. ராஜதந்திரமும் மந்திரமும் எதற்கு?

ரா. வ.: என்ன பிரமாத வாஞ்சை? சகோதரர்களுக்குள் பிரியமிருப்பது இயற்கைதானே?

கிரஹ: ஆம். ஆனால் உலகத்தில் அப்படி இருக்கிறதா? உங்களுடைய நடத்தைதான் மற்றவர்களுக்குப் படிப்பினையாயிருக்கும்.

ஹர்ஷ: ரொம்ப புகழ்கிறீர்களே. குமாரனும் மாதவனும் இருப்பதைக்காட்டிலுமா?

கிரஹ: உங்களோடு வளர்ந்ததனால்தான் அந்த குப்த சகோதரர்களுக்குள் அவ்வளவு வாஞ்சை.

ஹர்ஷ: என்ன இருந்தாலும் அவர்கள் அதிருஷ்டசாலிகள்.

கிரஹ: ஏன்?

ஹர்ஷ: அவர்கள் கண்போல் பாதுகாக்கும் சகோதரியை விட்டுப் பிரிய நேரிட்டதா?

ரா. வ.: ஹர்ஷா, ஆரம்பித்துவிட்டாயா? மனதை தைரியப்படுத்திக்கொண்டாயென்று நினைத்திருந்தேன். போகும்போது கிரஹவர்மனுக்குக் கலக்கம் உண்டாகும்படி செய்யலாமா?

ஹர்ஷ: மன்னிக்கவேண்டும் அண்ணா. நான் என்ன செய்வேன்!

கிரஹ: அதற்கென்ன ஹர்ஷா. இந்துமதியும் தன் சகோதரர்களை விட்டுப் பிரியவேண்டிய காலம் வராமல்போகுமா? உலக இயற்கையைத் தெரிந்துகொண்டு தேறவேண்டாமா?

ஹர்ஷ: ஆம். அதுதான் கஷ்டமாயிருக்கிறது. இருந்தாலும் ஒன்று கேட்கிறேன். நீங்கள் இங்கிருந்துகொண்டே சிலகாலம் ராஜகாரியங்களைப் பார்த்துக்கொள்ளக்கூடாதா?

கிரஹ: அது பிரமாதமில்லை. ஆனால் தேவகுப்தனைப்பற்றி எனக்கு சந்தேகமாயிருக்கிறது. நான் கன்னோசியில் இல்லாத சமயத்தில் அவனுக்கு சந்தர்ப்பம் கிடைத்துவிடக்கூடாது. அதற்காகத்தான் அவசரப்படுகிறேன்.

ரா. வ.: வாஸ்தவம். அது முக்கியம்தான்.

ஹர்ஷ: தேவகுப்தன் என்ன செய்துவிடுவான்? கன்னோசியைத் தாக்க அவனுக்கு முந்தியில்லாத தைரியம் இப்பொழுது வந்துவிட்டதா?

கிரஹ: அப்படியல்ல. அவன் தந்திரசாலி. நேரே நின்று போர்புரியமாட்டான். கன்னோசிக்கு உங்கள் உதவி கிடைக்கும் என்பதுதான் அவன் பொறுமைக்குக் காரணம்.

ரா. வ.: பார்த்தாயா ஹர்ஷா, தைரியம் வேறு, தந்திரம் வேறு. ராஜதந்திரத்தின் முதல் பாடம் இன்று கற்றுக்கொண்டோம்.

(ஒரு சேவகன் வருகிறான்.)

சேவ: சக்கரவர்த்தி உங்களை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்.

(போகிறார்கள்.)

## காட்சி 9

[பிரபாகரவர்த்தனன், யசோமதி, கிரஹவர்மன், ராஜ்யஸ்ரீ, ராஜ்யவர்த்தனன், ஹர்ஷன். ஒரு மூலையில் குப்தர்களும், பண்டியும். இந்துமதி ராஜ்யஸ்ரீ பக்கத்தில் நிற்கிருள்.]

(ராஜ்யஸ்ரீ நமஸ்கரிக்கிருள்.)

யசோ : கண்ணே, நான் உனக்கு என்ன சொல்லப்போகிறேன். கன்னேசிக் குடிகளை உன் குழந்தைகள்போலக் காப்பாற்றிவா. கடவுள் உனக்கு உதவிசெய்வார்.

பிரபா : ஆம் குழந்தாய். நாங்கள் உன்னைவிட்டுப் பிரிந்துவிட்டாலும், கன்னேசி மக்களுக்கு உன் வரவால் சந்தோஷம் உண்டாகட்டும். கிரஹவர்மா! என் குழந்தை மௌகரி வம்சத்திற்கு உரியவளாவதற்கு நீதான் உதவிசெய்யவேண்டும்.

கிரஹ : அரசே, பழைய பெருமைகொண்ட புஷ்பபூதி வம்சத்திற்கு நானல்லவோ உரியவனுகவேண்டும். உங்கள் புத்திரியின் வரவால் கன்னேசி என்றுமில்லாத பெருமையடையப்போகிறது.

யசோ : ராஜ்யம் இன்னும் சிறு குழந்தைதான். செல்வமாக வளர்ந்துவிட்டாள்.

பிரபா : அதற்கென்ன ராணி ஸ்தானத்தில் அமர்ந்துவிட்டால் எவ்வளவோ சீக்கிரம் அனுபவமடைந்துவிடுவாள்.

கிரஹ : ராஜ்யஸ்ரீ வருகையினுல் மாத்திரமல்ல, ராஜ்யஸ்ரீ கன்னேசி ராணியென்ருல் புஷ்பபூதியின் ரத்தினங்களாகிய ஹர்ஷனும், ராஜ்யவர்த்தனனும் கன்னேசிக்கு வருவார்களாதலால் என் ராஜ்யத்திற்கு எவ்வளவு பாக்கியம்!

ஹர்ஷ : ராஜ்யம் எங்களுடன் பிறந்தது எங்கள் பாக்கியம்.

கிரஹ : இல்லை. கன்னேசியைக் குறிப்பிட்டேன்.

ரா. வ. : அம்மா,......தந்தையே......

பிரபா : என்ன ராஜா!

யசோ : என்னப்பா!

ராஜ்ய : அண்ணு, ஏதோ சொல்ல வந்து திடீரென்று நிறுத்திவிட்டாயே.

ஹர்ஷ : புறப்படுவதற்கு நேரமாய்விட்டது. அதைச் சொல்வதற்கே அண்ணுவுக்குப் பிடிக்கவில்லை.

பிரபா : ஆம், கிரஹவர்மா, சமயம் தவறக்கூடாது. பிரிவு கஷ்டம்தான். என்ன செய்வது?

(கிரஹவர்மன் நமஸ்கரிக்கிருன்.)

பிரபா : } க்ஷேமமாகப் போய்வாருங்கள்.
யசோ : }

ராஜ்ய : அண்ணு!

(போகிருர்கள்.)

ஹர்ஷ : } அம்மா ராஜ்யா, போய்வா.
ராஜ்ய : }

(சட்டென்று முகத்தைத் திருப்பிக்கொள்ளுகிருர்கள்.)

## காட்சி 10

[ஹர்ஷன் பேசாமல் உட்கார்ந்துகொண்டிருக்கிருன். யசோமதி வருகிருள். ஹர்ஷன் எழுந்து நிற்கிருன்.]

ஹர்ஷ : அம்மா, என்ன என்னைத் தேடிக்கொண்டுவந்தாய் ?

யசோ : ஹர்ஷா, ராஜ்யமும் இல்லை. ராஜா எப்பொழுதும் கொலுமண்டபத்திலேயே இருக்கிருன். உன்னைத் தேடிக்கொண்டு வராமல் என்ன செய்வேன் ? நீ நேற்றுமுதல் ஆகாரமே தொட-வில்லையாமே.

ஹர்ஷ : இல்லை அம்மா. எனக்கு ஒன்றுமே பிடிக்கவில்லை.

யசோ : பொய் சொல்லாதே. எவ்வளவு காலம் ராஜ்யத்தையே நினைத்துக்கொண்டிருப்பாய் ! எனக்கும் மனம் சஞ்சலமாய்த்தான் இருக்கிறது. இதற்காக எப்பொழுதும் இப்படியே இருப்பதா ? இனிமேல் ராஜ்யத்தைப் பார்க்காமலே இருக்கப் போகிருேமா ? நீயும் இப்படி இருந்தால் என் மனம் எப்படி இருக்கும் ? உன் தந்தையும் பித்துப்பிடித்தவர்போல் இருக்கிருர்.

ஹர்ஷ : அதனுல்தான் அம்மா எனக்கு அதிக வருத்தமாய் இருக்கிறது. அவருடைய தேகநிலைக்கு இப்படி வருத்தப்படுகிருர்.

யசோ : நீயாவது தைரியம் சொன்னுல்தானே மனம் சாந்தியடையும்.

(மாதவகுப்தன் வருகிருன்.)

யசோ : இதோ மாதவன் வந்துவிட்டான். மாதவா, நீயாவது ஹர்ஷனுக்கு ஆறுதல் சொல். நான் போகிறேன். சக்கரவர்த்தி தனியாயிருப்பார்.

(போகிருள்.)

மாதவ : என்ன ஹர்ஷா, நீகூட தாயார் வார்த்தையை மீறுகிருயா என்ன ?

ஹர்ஷ : இல்லையப்பா. மனதில் சாந்தியே இல்லை. எல்லாம் ஒரே மந்தமாயிருக்கிறது. சந்திரகிரஹணம் பார்த்திருக்கிருயா— அதுமாதிரி இருக்கிறது.

மாதவ : உளருதே. பேசாமல் உட்கார்ந்துகொண்டிருந்தால் இப்படித்தான். எப்பொழுதும் இதே நினைவுதானு ராஜ்யவர்த்தனனைப் பார்.

ஹர்ஷ : உனக்கென்ன தெரியும்? நானுவது தைரியமாயிருக்கிறேன். அண்ணு தன் உணர்ச்சியை மறைப்பதற்காக ஏதோ பிரமாத வேலைசெய்வதுபோல் காட்டிக்கொள்ளுகிருன்.

மாதவ : அதுபோகட்டும். மகாராணி ஏன் அப்படிச் சொன்ஞர்கள் ?

ஹர்ஷ : என் தாயாருக்கும் மனக்கவலைதான். நானுவது தைரியமாயிருக்கவேண்டுமென்று சொன்னுள்.

மாதவ : நீ ஏன், மற்றவர் மனமெல்லாம் சஞ்சலமடையும்படி நடந்துகொள்கிருய் ?

(பூங்காவிலிருந்து ஒரு குரல்.)

ஹர்ஷ: (எட்டிப்பார்த்து) அதோ பார் இந்துமதி உன்னைக் கூப்பிடுகிருள்.

மாதவ: அவளுக்கென்ன வேலை. இளவரசி போனதிலிருந்து தனிமையாயிருக்கிறதாம். என் வேலைகளை விட்டுவிட்டு நான் அவளருகிலேயே இருக்கமுடியுமா?

ஹர்ஷ: மாதவா, நீ சொல்வது தப்பு அவளுடைய தனிமையில் சகோதரர்கள்தானே ஆறுதல் சொல்லவேண்டும். ராஜ்யஸ்ரீ எங்களைவிட்டுப் பிரிந்தமாதிரி இந்துமதியும் ஒருகாலத்தில் உங்களை விட்டுப் பிரிய நேரிடுமே. சகோதர வாஞ்சையைவிட உலகத்தில் சிறந்த பொக்கிஷம் என்ன இருக்கிறது? கணவன் வீடு செல்லும் பெண் தன் சகோதரர்களின் அன்பைத்தான் பெரிய துணையாக எடுத்துச் செல்வாள். தாய் தந்தையற்ற இந்துமதிக்கு நீங்களிருவரும்தானே கதி. அதோ திரும்பவும் கூப்பிடுகிருள்.

மாதவ: மகாராணி உனக்கு ஆறுதல் சொல்லச் சொன்னுர்கள். இப்பொழுது நீயே எனக்கு உபதேசம் செய்கிருய். சரி, போகிறேன். நீ உன்மத்தமான நிலையைவிட்டு உற்சாகத்தைக் கைக்கொள்.

ஹர்ஷ: சரி, இருவரும் ஒருவர் உபதேசத்தை மற்றவர் பின்பற்றுவோம்.

(மாதவன் போகிருன்.)

[ஹர்ஷன் ஜன்னல் வழியே இந்துமதியைப் பார்த்துக்கொண்டே இருக்கிருன். மாதவகுப்தனும் இந்துமதியும் ஏதோ பேசிக்கொண்டிருக்கிருர்கள்.]

[ராஜ்யவர்த்தனன் வருகிருன்; ஹர்ஷன் சட்டென்று எழுந்திருக்கிருன்.]

ரா. வ.: (ஜன்னல் வழியே பார்த்துவிட்டு) அதிருஷ்டசாலிகள் குமாரனும் மாதவனும்.

ஹர்ஷ: ஆம். இந்துமதியைப் பார்க்கும்போதெல்லாம் ராஜ்யம் நினைவுதான் வருகிறது.

ரா. வ.: சரி. நீ ஒன்றுமே சாப்பிடாமல் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிருயாமே. அம்மா சொல்லுகிருள்.

ஹர்ஷ: இல்லை அண்ணு. இப்பொழுதுதான் புறப்பட்டுக் கொண்டிருந்தேன். அதற்குள் நீயும் வந்துவிட்டாய். காலை முழுவதும் என்ன செய்துகொண்டிருந்தாய்?

ரா. வ.: வா, போவோம். காலையில் சில தூதர்கள் வந்திருந்தார்கள். ஹூணர்கள் மலைச்சாரலில் கூடாரம் போட்டிருப்பதாக ஒற்றர்கள் செய்தி கொண்டுவந்தார்களாம். அதைப்பற்றி சேனுபதி ஸிம்ஹநாதனிடம் பேசிக்கொண்டிருந்தேன்.

(போகிருர்கள்)

## காட்சி 11

### பூங்கா.

[இந்துமதி பூக்கொய்கிருள்.]

[மற்ருெரு பக்கம் மாடியில் பிரபாகரவர்த்தனனும் யசோமதியும் ஜன்னல் வழியாக இந்துமதியைப் பார்க்கிருர்கள்.]

யசோ : இந்துமதியைப் பார்க்கும்போதெல்லாம் எனக்கு ராஜ்யம் நினைவே வருகிறது. அதே நடை. அதே சாயல்.

பிரபா : ஆம், ராஜா, ஹர்ஷன் இவர்களைப்போல் மாதவனும் குமாரனும் அவளுக்கு சகோதரர்களாக வாய்த்திருக்கிருர்கள்.

யசோ : எல்லாவிதத்திலும் ஒற்றுமைதான். ஆனல் பாவம், பெற்ருேரில்லை.

பிரபா : அந்தக் குறையை நிவர்த்தி செய்வதற்குத்தானே நாம் முயன்றுகொண்டிருக்கிருேம்.

யசோ : அவளும், ராஜ்யம் நம்மருகிலில்லாத குறையை நிவர்த்திசெய்கிருள். அவளுடைய நடமாட்டமும், பாட்டும்தான் எனக்கும் சாந்தியை அளிக்கின்றன.

பிரபா : தேவி, எனக்கொரு எண்ணம் தோன்றுகிறது. இந்துமதியும் நம்மைவிட்டுப் பிரியும் சமயம் வருமே. அதற்கு என்ன செய்வது? அவளை அரண்மனையிலேயே இருக்கும்படி செய்யவேண்டும்.

யசோ : என்ன யோசனை தோன்றுகிறது ?

பிரபா : இந்துமதியை நம் குழந்தையாகவே பாவித்துவருகிருேம். அவள் நம் குடும்பத்திற்கே ஒரு ஆபரணமாய்விட்டால் எவ்வளவு சந்தோஷமாயிருக்கும் !

யசோ : இப்பொழுதும் அவள் அரண்மனையின் ஜோதியாகத்தானே இருக்கிருள்.

பிரபா : தானேஸ்வரத்தின் இளவரசி கன்ேனாசி ராணியாகி விட்டாள். இளவரசி ஸ்தானத்தை இந்துமதி வகிக்கும்படி செய்தால் ?

யசோ : நான் நினைத்ததையே நீங்களும் சொல்கிறீர்கள். ராஜ்யவர்த்தனனுக்கு இந்துமதி சிறந்த மனைவியாவாள்.

(ராஜ்யவர்த்தனன் வருகிருன்.)

ரா. வ. : இல்லை. நான் மறுப்பதற்கு மன்னிக்கவேண்டும்.

யசோ : (திடுக்கிட்டு) ராஜா, ஏன் அப்படி திடீரென்று சொல்கிருய் ?

பிரபா : ராஜா, இந்துமதியை புஷ்பபூதி வம்சத்தின் புஷ்பமாக வைத்துக் காப்பாற்றுவது நம் கடமை. நீ மறுத்துவிட்டால்...

ராஜ்ய : உண்மை. அந்த எண்ணம் எனக்கும் இருந்தது. தாங்களே சொல்வதில் எனக்கு நிரம்ப சந்தோஷம். நான் மறுப்பதனல் அந்த எண்ணம் தடைப்படாது. ஹர்ஷனுக்குத்தான் இந்துமதி உரியவள். ஹர்ஷன் மனேநிலையில் அவனுக்கு சந்தோஷம் கொடுப்பவர் உதவி தேவை.

யசோ: ராஜா, நீ சொல்வதும் சரிதான். ஆனால் உன் விஷயம் என்ன?

பிரபா: ஆம் ராஜா, ஹர்ஷன் சிறுவன்தானே. மூத்த குமாரனுன உன் விவாகத்தை முதலில் தீர்மானிக்கவேண்டாமா?

ரா. வ.: ஹர்ஷனுக்கும் இந்துமதிக்கும் உடனே விவாஹம் நடக்கவேண்டுமென்று சொல்லவில்லை நான். அவர்களிருவருக்கும் பொருந்தும் என்று சொன்னேன். என்னைப்பற்றி நான் அதிகமாக யோசிக்கவில்லை.

பிரபா: எப்பொழுதாவது யோசிக்கவேண்டுமே.

ரா. வ.: அப்பா, உங்களிடம் ஒரு வேண்டுகோள் சமர்ப்பிக்கவேண்டும்.

பிரபா: என்னப்பா?

ரா. வ.: ஹூணர்கள் ஹிம்சை வரவர அதிகமாகிறதாம். அவர்களை அடக்கச் செல்ல எனக்கு உத்தரவு கொடுக்கவேண்டும்.

பிரபா: உன் விவாகத்தைப்பற்றியல்லவா பேசிக்கொண்டிருந்தோம். ஹூணர்களைப்பற்றி இப்பொழுது என்ன கவலை? அதற்குத்தான் சிம்ஹநாதன் போகப்போகிறுனே.

யசோ: என்ன ராஜா, யுத்தத்திற்கு நீயா போவது?

ரா. வ.: ஏன் அம்மா, அப்பா, சிம்ஹநாதனுக்கு வயதாய் விட்டது. எனக்கு விவாஹத்தின்மேல் அதிகமாக மனம் செல்லவில்லை. நமது நாட்டிற்குத் தொண்டுசெய்து ஜனங்களுக்கு நன்மை செய்வதில்தான் எனக்கு அதிக ஆவலாயிருக்கிறது.

பிரபா: அது உன்னத எண்ணம்தான் ராஜா. ஆனால் நீ சிறுவன். இப்பொழுதே உனக்கு அவ்வளவு பொறுப்பு ஏற்படக்கூடாது.

ரா. வ.: ராஜ்ய காரியங்களின் முறையை நான் எப்பொழுதாவது கற்றுக்கொள்ளவேண்டுமே!

யசோ: ராஜா, நீ விவாகமே செய்துகொள்ளமாட்டாயா?

ரா. வ.: அம்மா, அதைப்பற்றி நான் இன்னும் நினைக்கவே இல்லை. உங்களுடைய உத்தரவு கிடைத்தால், அதைப்பற்றி நினைக்கும் அவசியமே இல்லாமலிருக்கும்.

யசோ: ராஜா, உன்னிஷ்டத்திற்கு மாருக நான் என்ன சொல்லப்போகிறேன். ராஜ்யம் இல்லாத நமது வீட்டிற்கு ஒரு இளவரசியைக் கொண்டுவருவாய் என்று நினைத்துச் சொன்னேன்.

ரா. வ.: (ஜன்னலருகில்) அதற்கு ஹர்ஷனே பொருத்தமானவன். உங்களுடைய விருப்பம் சிறந்த முறையில் ஈடேறச் செய்வான். அதோ பாருங்கள்.

(ஜன்னல் வழியாகக் காட்சி. இந்துமதி பூக்கொய்கிருள், ஹர்ஷன் அவளைப் பார்த்துக்கொண்டு சற்று தூரத்தில் நிற்கிருன்.)

பிரபா: ராஜா, நீ சொல்வது உண்மையாக இருக்கவேண்டுமென்று விரும்புகிறேன். சிம்ஹநாதன் வந்திருப்பான். நான் போகிறேன்.

(எல்லோரும் போகிருர்கள்)

## காட்சி 12

### பூங்காவில்.

### இந்துமதி. ஹர்ஷன் வருகிருன்.

[இருவரும் ஒருவர் வருவதை மற்றவர் அறியாமல் ஒரு செடியைச் சுற்றிவரும்போது சந்திக்கின்றனர்.]

ஹர்ஷ: இந்துமதி! என்ன, தனியாக உலாவுகிருய்?

இந்து: அரண்மனையில் தனிமையாயிருந்தது. பூங்காவுக்கு வந்தேன்.

ஹர்ஷ: என்ன, அரண்மனையிலா தனிமை? தோழிகள் எத்தனையோ பேர் இருக்கும்போது தனிமையா?

இந்து: இளவரசி போனதுமுதல் அரண்மனை பாலைவனம் போல் இருக்கிறது.

ஹர்ஷ: பூங்காவில் அதைவிடத் தனிமையாயிருக்காதா?

இந்து: ஆம். ஆனல் இதோ இந்தச் செடிகளும் கொடிகளும் எவ்வளவோ ஆறுதல் கொடுக்கின்றன. இந்தப் பூங்காவின் அழகாவது மனதை மாற்றும் என்று வந்தேன்.

ஹர்ஷ: இயற்கையின் அழகைப் பருகும் ஆவல் உனக்கும் இருக்கிறதா?

இந்து: அப்படி ஒன்றுமில்லை. இளவரசியும் நானும் சேர்ந்து உலாவிய பூங்கா இது. இங்கு வரும்போதெல்லாம், ஒவ்வொரு புஷ்பமும் செடியும் என்னேடு இளவரசியைப்பற்றிப் பேசுவது போல் இருக்கிறது.

ஹர்ஷ: சரிதான். நீ பேசுவது கவிதையாக இருக்கிறது. ஒன்றும் தெரியாது என்கிருயே. இயற்கையுடன் சம்பாஷிக்கும் அவ்வளவு ரஸனையும் திறமையும் அடைந்திருக்கிருயே.

இந்து: எல்லாம் உங்கள் சிக்ஷைதான்.

ஹர்ஷ: என் சிக்ஷையா?

இந்து: ஆம்.

ஹர்ஷ: பரிகாசமா?

இந்து: நிஜமாகத்தான்.

ஹர்ஷ: விளையாடுகிருய். இதற்குமுன்னல் நான் உன்னேடு பேசியதே இல்லையே.

இந்து: இளவரசியோடு பேசிக்கொண்டிருந்ததில்லையா? மாதவனேடு எத்தனையோ தடவை தர்க்கம் செய்திருக்கிறீர்களே?

ஹர்ஷ: ஓஹோ, அவர்கள்மூலம் கற்றுக்கொண்டாயோ? மாதவனுக்குத்தான் இந்த விஷயங்களில் நம்பிக்கை கிடையாதே.

இந்து: அவனுடைய நம்பிக்கையின்மைதான் எனக்கு அதிருஷ்டம்.

ஹர்ஷ: அதெப்படி?

இந்து: என்னோடு வாதிப்பான். நான் கலை உண்மை என்றால் என்னை உலகமறியாதவள் என்பான்.

ஹர்ஷ: என் சார்பாக வாதிப்பதற்கு நீ இருப்பது எனக்கு இத்தனை நாள் தெரியாதே.

இந்து: நான் வாதிக்கவில்லை. உங்களுடைய வார்த்தைகளில் எனக்கு நம்பிக்கை இருந்தது.

ஹர்ஷ: அப்படியானால், எப்போதுமே உனக்குக் கலாரஸனை அதிகம் என்று தெரிகிறது.

இந்து: கலாநிபுணர்களின் வார்த்தைகள் செவியில் பட்டதின் பலன்தான்.

ஹர்ஷ: ஏற்கனவே ரஸனை இல்லாவிட்டால் பலன் ஏற்பட்டு விடுமா? மாதவனும் நானும் எத்தனையோ நாட்கள் பேசிக் கொண்டிருந்திருக்கிறோம். அவனுடைய நம்பிக்கையின்மை நாளுக்கு நாள் வலுக்கிறதே தவிர வேறில்லை.

இந்து: அண்ணா வேண்டுமென்றுகூட வாதிப்பான். உங்களோடு பேசிய பிறகு அழகின் ரகசியத்தை அறிய ஆவலில்லை என்றால் எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது.

ஹர்ஷ: அப்படிச் சொல்லாதே. அவனுடைய ரஸனை வஸ்துக்களின் உபயோகத்தைத்தான் பொறுத்திருக்கிறது. எளிதில் புலப்படாத கலையின் ரகசியத்தைவிட தினசரி உண்மைகள்தான் அவனுக்கு முக்கியமாகப்படுகின்றன.

இந்து: ஆனால் இதோ மலர்ந்திருக்கும் புஷ்பங்கள் உண்மையில் சேரவில்லையா? அந்தப் பக்ஷிகளின் கானம் பொய்தானா? இளவரசியின் முகம்போல் தெரியும் அந்த சந்திரன் வெறும் தோற்றமா?

ஹர்ஷ: அவைகளால் ரொம்ப முக்கியமான உபயோகம் ஒன்றுமில்லையே.

இந்து: ஏன் இல்லை? இந்தப் பூங்காவும், பக்ஷிகளும், சந்திரிகையும் இங்கே இல்லையென்று நினைத்துக்கொள்வோம். உபயோகமுள்ள மற்ற விஷயங்களால் மட்டும் நாம் வாழ்ந்துவிடமுடியுமா?

ஹர்ஷ: இந்துமதி, நான் மாதவன் கருத்தை விளக்க முயன்றேன். நீ என் சார்பாக வாதாட ஆரம்பித்துவிட்டாயே என் முன்னிலையிலேயே.

இந்து: என் உணர்ச்சியில் பட்டதைச் சொன்னேன். தர்க்கம் செய்ய எனக்கென்ன திறமை இருக்கிறது?

ஹர்ஷ: மறுபடியும் அந்த அடக்கம்! இந்துமதி, ராஜ்யம் கன்னோசி சென்றதிலிருந்து எனக்கும் ஒன்றும் ஓடவில்லை. அதே காரணத்தினால்தான் நானும் இங்கு வந்தேன். உன்னோடு பேசியதில் ராஜ்யத்தோடு பேசிக்கொண்டிருந்ததுபோலவே தோன்றுகிறது.

இந்து: என்னையா இளவரசிக்கு ஒப்பிடுகிறீர்கள். மின்மினிப்பூச்சியை நக்ஷத்திரம் என்று சொல்லலாமா?

ஹர்ஷ: தப்பு, இந்துமதி. உன்னுடைய மதிப்பைக் குறைத்துக்கொள்வதோடு என் ரஸனையிலும் குற்றம் காண்கிறாய்.

இந்து: இல்லை. உங்களுடைய கவிதை உணர்ச்சியைப் பாராட்டுகிறேன். மிகைச்சொல்தானே கவிதையின் உயிர்.

ஹர்ஷ: குறைச்சொல் அடக்கத்தின் அழகு. அதோ, பார் அந்த சூரியகாந்திப் புஷ்பம் நேற்றெல்லாம் வாடியிருந்தது. உன்னைக் கண்டதும் தலை நிமிர்த்தி சிரிக்கிறது.

இந்து: ஆமாம், சூரியனைப்போல் அவ்வளவு வெப்பம் என் பிரசன்னம், இல்லையா? அப்படி இருக்கும்போது என்னை இளவரசிக்கு ஒப்பிட்டீர்களே.

ஹர்ஷ: நீதானே ராஜ்யத்தை சந்திரனுக்கு ஒப்பிட்டாய்.

இந்து: அதிலென்ன தப்பு? இளவரசியின் முகத்தினுடைய பிரகாசத்திற்கு வேறு எது ஈடு?

ஹர்ஷ: ஆம், அந்த நிலவொளி சூரியன் உதவியில்லாமல் வந்துவிட்டதா?

இந்து: அப்பா! கவிஞர்களோடு பேசுவதே கஷ்டம்.

ஹர்ஷ: நான் கவிதையா கட்டுகிறேன்? விஞ்ஞான உண்மையைச் சொன்னேன்.

இந்து: இன்று நீங்கள் கவலையற்று இருப்பதே சந்தோஷமாயிருக்கிறது. அதை உத்தேசித்து உங்களுடைய கற்பனையை நான் ஆக்ஷேபிக்கக்கூடாது. நேற்று முழுவதும் மகாராணி உங்களைப் பற்றிக் கவலைப்பட்டுக்கொண்டிருந்தார்.

ஹர்ஷ: இனிமேல் அந்தக் கவலைக்கு இடமிருக்காதென்று நம்புகிறேன். அதாவது நீ உதவி செய்தால்.

இந்து: என்னால் என்ன உதவி வேண்டும்?

ஹர்ஷ: ராஜ்யம் இல்லாத குறையை நீ நிவர்த்திக்கவேண்டும்.

இந்து: அவ்வளவு பொறுப்பை நான் எப்படி ஏற்றுக்கொள்ளுவேன்? கைவிளக்கு கப்பலுக்கு வழிகாட்டமுடியுமா?

ஹர்ஷ: முடியுமென்று நான் நம்புகிறேன்.

இந்து: வெறும் கற்பனை.

ஹர்ஷ : மந்தமடைந்த மனதுக்கு வேறு என்ன வேண்டும்?

இந்து : கற்பனை எவ்வளவு காலம் நிலைக்கும்?

ஹர்ஷ : கருத்து உள்ளவரையில். இந்துமதி, இன்று உன்னை சந்தித்துப் பேசியதில் எவ்வளவோ ஆறுதல் அடைந்தேன். இந்த சந்தர்ப்பங்கள் அடிக்கடி வாய்க்குமென்று நான் நம்பலாமா?

இந்து : நம்பிக்கை அவசியமில்லை. உத்தரவுக்குக் காத்திருக்கின்றேன்.

ஹர்ஷ : உன்னுடைய உதவிக்கு நன்றி பாராட்டுகிறேன்.

இந்து : வேண்டாம். உங்களுக்கு ஆறுதல் சொல்லக்கூடுமானால் அது என் கடமையென்று இளவரசியின் கடைசி உத்திரவு. அதைத்தான் நிறைவேற்ற முயற்சிக்கிறேன்.

ஹர்ஷ : ஆம், ராஜ்யத்தின் முன்யோசனை என் அதிருஷ்டம். உன்னுடைய உற்சாகம் இனி எனக்கு ஊக்கம் அளிக்கும். என்னை மன்னிக்கவேண்டும். பயிற்சிக் களத்துக்குப் போகவேண்டும்.

இந்து : மன்னிக்கமுடியாது. பொறுத்துக்கொள்ள முயற்சிக்கிறேன்.

ஹர்ஷ : ஆனால் நாளை தண்டனைக்குத் தயாராக வருகிறேன்.

(போகிறான்)

## காட்சி 13

### பயிற்சிக்களம்

[பண்டியும் குமாரகுப்தனும் வில்வித்தை பயில்கிறார்கள். மாதவ குப்தன் கையில் ஒரு கத்தியுடன் நின்றுகொண்டிருக்கிறான்.]

பண் : எங்கே ராஜகுமாரர்களை இன்னும் காணோம்?

மாதவ : ஹர்ஷன் மூலையில் மௌனமாய் உட்கார்ந்திருப்பான். ராஜ்யவர்த்தனன் மந்திராலோசனையில் ஈடுபட்டிருப்பான். ராஜகுமாரி கன்னோசி போனதும் போதும். இவர்களுடைய முகத்தைப் பார்க்க சகிக்கவில்லை.

குமார : என்ன செய்வது? பிரிவினால் ஏற்பட்ட துயரம் ஆறவேண்டாமா?

பண் : ராஜ்யவர்த்தனனாவது கவலையை மறக்க வேலையில் ஈடுபடுகிறான். ஹர்ஷன் நினைத்து நினைத்து மனமுருகுகிறான்.

மாதவ : ராஜ்யவர்த்தனன் ஹூணர்கள்மீது படையெடுத்துப் போவதில் கருத்தாகவே இருக்கிறான். அவனும் போய்விட்டால் ஹர்ஷன் நிலைமை சொல்லவேண்டியதில்லை.

பண் : ராஜ்யவர்த்தனன் போவதற்கு அவ்வளவு எளிதில் சக்கரவர்த்தி சம்மதப்பட்டுவிடுவாரா?

குமார : ஹர்ஷன்தான் பேசாமல் பின்தங்குவானா? அண்ணனுக்கு முன்னால் அவன் புறப்பட்டுவிடுவான்.

பண் : அதனால்தான் சக்கரவர்த்தி உத்தரவு கொடுக்கமாட்டார் என்றேன்.

மாதவ : அப்படி நினைக்காதே. ராஜ்யவர்த்தனன் எப்படியாவது அனுமதிபெற்றுவிடுவான். ஒருவிதமாய் சிம்ஹநாதன் சம்மதத்தைப் பெற்றுவிட்டான். ...இதோ ஹர்ஷன் இந்த விஷயம் அவனுக்குத் தெரியாது.

(ஹர்ஷன் வருகிறான்)

ஹர்ஷ : என்ன? ஏதோ சதிசெய்பவர்கள்போல் உட்கார்ந்துகொண்டிருக்கிறீர்கள் ?

குமார : உன்னுடைய கவலை குவிந்த நிலையைத் தவிர்ப்பதற்குத்தான் சதிசெய்துகொண்டிருக்கிறோம்.

ஹர்ஷ : ஆனால் நானும் சேருகிறேன்.

பண் : ஏது என்றுமில்லாத உற்சாகம் சதிக்கே இடமிருக்காதுபோல் தோன்றுகிறதே.

ஹர்ஷ : என்னை அவ்வளவு மோசமாக நினைத்துவிட்டாயா ? இனிமேல் அவ்வளவு கவலையுடன் இருக்கமாட்டேன்.

குமார : இவ்வளவு சீக்கிரம் நீ ஆறுதலடைந்ததற்கு சந்தோஷம்.

ஹர்ஷ : பூங்காவில் உலாவிக்கொண்டிருந்தேன்......

மாதவ : அப்பொழுது அந்தப் புஷ்பங்களின் ஆத்மா வந்து ஆறுதல் சொல்லிற்றோ ? பழைய கலைக்கதையை ஆரம்பிப்பாய் போலிருக்கிறதே.

ஹர்ஷ : அப்பா, நீ ரொம்ப மோசமான அனுபவசாத்தியவாதி...... ஒருவகையில் அந்தப் பூங்காவின் ஆத்மாதான் என்னைத் தேற்றிற்று என்று சொல்லவேண்டும்.

பண் : எப்படியாவது போகட்டும். நீ உற்சாகத்துடனிருப்பதுதான் முக்கியம். கலையைப்பற்றித் தர்க்கம் வேண்டாம். இந்த ஆயுதங்கள் உன் ஸ்பரிசத்திற்காக ஏங்கிக்கிடக்கின்றன.

ஹர்ஷ : ராஜா எங்கே ?

குமார : உன்போல்தான் உங்கண்ணாவும் இந்தப் பக்கமே வரவில்லை.

ஹர்ஷ : எப்பொழுது பார்த்தாலுமா மந்திராலோசனை ? இதோ நான் போய் அழைத்துவருகிறேன்.

(போகிறான்)

மாதவ : இனி ஆயுதப் பயிற்சி நடந்தாற்போல்தான்.

பண் : ஹர்ஷன் உற்சாகத்தைப்பற்றி எனக்கு சந்தோஷமும் ஆச்சரியமும் உண்டாகிறது.

குமார : ஆச்சரியமென்ன ? அவன் உணர்ச்சிகளின் விளையாட்டுக்கருவி. நிமிஷத்திற்கு நிமிஷம் மாறுவான். அவனுக்கு ராஜ்யஸ்ரீ இங்கில்லாததுபற்றி நினைவு வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

(போகிறார்கள்)

## காட்சி 14

**கன்னேசி. கிரஹவர்மன்.**

[மந்திரி வருகிருன்.]

மந்திரி: அரசே, உத்தரவுப்படி கைதுசெய்யப்பட்ட நாற்பது பேர்களையும் என்ன செய்வது?

கிரஹ: அவர்களில் நமது நாட்டினர் எத்தனைபேர்?

மந்: இருபத்திரண்டுபேர் கன்னேசி வாசிகள். பத்துப்பேர் மாளவிகள். மீதி எட்டும் கௌட தேசத்தைச் சேர்ந்தவர்கள்.

கிரஹ: கன்னேசிவாசிகளுக்குக் கடும் தண்டனை இடச் சொல். மாளவிகளையும் கௌடர்களையும் அவரவர் நாடுகளுக்கு அனுப்பிவிடச்சொல்.

மந்: அரசே, அவ்வளவு சுலபமாய் இவர்களை விட்டுவிடுவதா? அவர்களுக்குத்தானே கடும் தண்டனை கொடுக்கவேண்டும். பாவம் நமது நாட்டினர்களை அவர்கள்தானே கெடுத்தனர்.

கிரஹ: மந்திரி, நீ சொல்வது ஆச்சரியமாகயிருக்கிறது. கன்னேசிவாசிகளில் குற்றம் செய்தவர்கள் தெரிந்தே சதிசெய்திருக்கிருர்கள். அவர்களுடைய தேசாபிமானம் உண்மையாக இருந்தால் ஏமாற்றத்திற்கு இடம்கொடுத்திருக்காது.

மந்: ஆனல் அயல்நாட்டிலிருந்து வந்து இங்கே துரோகம் செய்ய முயற்சிப்பவர்களை அதேமாதிரி தண்டிக்கவேண்டாமா?

கிரஹ: அந்த விஷயத்திலும் குற்றம் நம்முடையதுதான். நாம் ஜாக்கிரதையாக இருந்திருக்கவேண்டும். தவிர, தேவகுப்தனும் சசாங்கனும் கேவலம் மறைமுகமாக நம்மைத் தாக்குகிருர்கள்.

மந்: குற்றவாளிகளை அவர்களுடைய தேசங்களுக்கு அனுப்பிவிட்டால், அந்த அரசர்கள் ஜாக்கிரதையாகிவிடுவார்களே.

கிரஹ: அதற்காகத்தான் அவர்கள் தந்திரத்தினல் தாக்குகிருர்கள். நாம் வெளிப்படையாக பதில் கூறுவோம். அவர்களுடைய சதி நம்முடைய கவனத்திற்குத் தப்பவில்லை என்று தெரிவிப்போம்.

மந்: மறுபடியும் இதே முறையைக் கைக்கொண்டால்?

கிரஹ: மாட்டார்கள். அந்நியர் பிரவேசத்தைத் தடுக்கக் கடுமையான விதிகள் பிறப்பிக்கவேண்டும். நம் நாட்டு துரோகிகளுக்குக் கொடுக்கப்படும் தண்டனை மற்றவர்களுக்கு எச்சரிக்கையாயிருக்கும்.

மந்: உத்தரவு.

(ராஜ்யஸ்ரீ வருகிருள்)

ராஜ்ய: என்ன கோபம்? யார்மீது?

கிரஹ: ராஜ்யத்தின் அமைதிக்குலைவைக் குறித்துத்தான்.

ராஜ்: எனக்கென்ன, அமைதி இல்லையா?

கிரஹ: உன்னையா சொன்னேன்? என்னுடைய—நம்முடைய கன்னோசியில் சிலதினங்களாக நடக்கும் குற்றங்களுக்குத் தண்டனை விதிப்பதைப்பற்றி பேசிக்கொண்டிருந்தேன்.

ராஜ்ய: சசாங்கன் ஏவுதலால் சதிசெய்கிறார்களென்று சொன்னீர்களே அவர்களா?

கிரஹ: ஆம்.

ராஜ்ய: தானேஸ்வரத்திற்கு செய்தியனுப்பி அவர்கள்மேல் படையெடுத்துச் செல்லக்கூடாதா?

கிரஹ: அது அவசியமில்லை.

ராஜ்ய: அப்படி விட்டுவிடலாமா? நமக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்தால் எங்கள் அண்ணாவை வரச்சொல்லுங்கள். நானும் பார்த்தாற்போலிருக்கும்.

கிரஹ: அதற்குள் அண்ணா நினைவு. அதற்குப் படையெடுப்பது சாக்கு.

ராஜ்ய: ஒன்றுமில்லை. நிஜமாகவே சொன்னேன். ஏன்? அண்ணாவைப் பார்க்கவேண்டுமென்றிருக்காதோ? இங்கு வந்து ஒரு வருஷமாகப்போகிறதே!

கிரஹ: கன்னோசிமேல் சலிப்பு ஏற்பட்டுவிட்டதோ?

ராஜ்ய: அப்படிச் சொன்னேனா? கன்னோசியைவிட்டுப் போகவேண்டுமென்று சொல்லவில்லையே. அண்ணா இங்கே வரக் கூடாது என்ற எண்ணமோ?

கிரஹ: அப்பா! எவ்வளவு சாமர்த்தியமாய் என்மீது திரும்பிவிட்டாய்!

ராஜ்ய: நீங்கள்தானே முதலில் வம்புக்கு வந்தீர்கள்.

கிரஹ: சரி, மன்னிக்கவேண்டும்.

ராஜ்ய: அண்ணாவுக்குக் கடிதம் அனுப்புகிறீர்களா?

கிரஹ: அப்படித்தான் நினைத்துக்கொண்டிருந்தேன். ஆனால் ஹூணர்கள் தொந்திரவைப்பற்றி தானேஸ்வரத்தில் முக்கியமான வேலை இருப்பதாகத் தெரிகிறது. இப்பொழுது உன் சகோதரர்களைத் தொந்தரவு செய்யவேண்டாம் என்று நினைக்கிறேன்.

ராஜ்ய: ஹூணர்களா? அவர்கள் யார், சசாங்கனைச் சேர்ந்தவர்களா?

கிரஹ: இல்லை. மேருவுக்கு அப்பாலிருந்துவந்த அன்னியர்கள். முரடர்கள். இரக்கமற்ற காட்டுமிராண்டிகள்.

ராஜ்ய: ஐயையோ, தானேஸ்வரத்தின்மீது படையெடுத்துவிட்டார்களா?

கிரஹ: இல்லை. இன்னும் அவ்வளவு தைரியம் வரவில்லை. எல்லைப்புறத்தில்தான் அவர்கள் தொல்லை அதிகமாயிருக்கிறது.

ராஜ்ய: அதற்கு இப்பொழுதே என்ன கவலை?

கிரஹ: அவர்களை இப்பொழுதே அடக்கவேண்டாமா? அதற்கு ராஜ்யவர்த்தனன் போகப்போகிறானும்.

ராஜ்ய: ஐயோ, ராஜண்ணாவா? சேனாபதி போனால் போதாதோ? பாவம், அந்தக் காட்டுமிராண்டிகளோடு......

கிரஹ: உங்கள் அண்ணாவின் வீரத்தைப்பற்றிப் பிரமாதமாகப் பேசினாயே, இப்பொழுது என்ன பயம்?

ராஜ்ய: அதற்காக அவர்களைப் பலிகொடுத்துவிடுவதா?

கிரஹ: ஹூணர்களையல்லவா இருவரும் பலியிடப் போகிறார்கள். உன் சகோதரர்களிடம் தோல்வியடையாத எதிரி எங்கும் கிடையாது.

ராஜ்ய: சின்னண்ணாவுமா போகிறார்.

கிரஹ: ராஜ்யவர்த்தனன் போகும்போது ஹர்ஷன் பேசாமல் இருப்பானா? அவனும் போவானென்றுதான் நினைக்கிறேன்.

ராஜ்ய: ஐயோ, அப்பா தனியா இருப்பாரே.

ஹர்ஷ: வீண் கவலைப்படாதே. சக்கரவர்த்தியின் அனுமதி இல்லாமலா அவர்கள் போகப்போகிறார்கள்?

ராஜ்ய; எனக்குக் கவலையாயிருக்கிறது.

கிரஹ: ஒருவேளை சிம்ஹநாதன் மட்டுமே போகலாம். எதற்கும் இன்னும் சில நாட்களில் நிச்சயமாய்த் தெரியும். நீ கவலைப்படாதே. அவர்களைக் கடவுள் காப்பாற்றுவார். அவர்களுடைய தைரியத்தைப்பற்றி நீயே சந்தேகப்பட்டால்! அதோ ஆராய்ச்சி மணி. நான் போகவேண்டும்.

(போகிறான்)

ராஜ்ய: ஐயோ, ஹூணர்கள், ஹீனர்கள், என்னென்ன சங்கடங்கள். தேவி, கவலையில்லாமல் வாழமுடியாதா? என் அண்ணா ரெண்டுபேரையும் நீதான் காப்பாற்றவேண்டும்.

(பிரார்த்திக்கிறாள்)

(தொடரும்)

## காட்சி 15

### தானேஸ்வரம்

### கொலுமண்டபம்

[சிம்மாஸனத்தில் பிரபாகரவர்த்தனன் அருகில் ராஜ்யவர்த்தனன், தூதர்கள்.]

ரா. வ.: அப்பா, எல்லைப்புறத்திலிருந்து வந்த தூதர்கள்.

தூத: நமஸ்காரம் சக்கரவர்த்தி.

பிரபா: வாருங்கள். ஏன் இவ்வளவு அவசரமாக வந்தீர்கள்? சிம்ஹநாதன் புறப்பட்டுக்கொண்டிருந்தானே.

தூத: மகாராஜ்! அந்த முரட்டு ஹூணர்கள் செய்யும் கொடுமையை எங்களால் விவரிக்கமுடியாது.

பிரபா: சீக்கிரத்தில் தீர்ந்துவிடும் அந்தக் கொடுமை.

தூத: மன்னிக்கவேண்டும், மகாராஜ். ஏற்கனவே ஐந்து நகரங்களைப் பாழாக்கிவிட்டார்கள். புயல்வாய்ப்பட்ட பயிர்போல் வயல்களெல்லாம் தியங்துகிடக்கின்றன.

பிரபா: சிம்ஹநாதன் தகுந்த சிக்ஷை செய்வான்.

தூத: சந்தேகமில்லை, அரசே. ஆனால் ஊக்கமிழந்த எல்லை வாசிகளுக்கு ராஜகுடும்பத்தை தரிசித்தால் தைரியம் உண்டாகும். இளவரசர்கள் எல்லை வந்தால் இறந்த வீரர்கூட எழுந்து போராடுவார்கள்.

ரா. வ.: அரசே, நான் அச்சேவைக்குத் தயாராயிருப்பது உங்களுக்குத் தெரியும்.

பிரபா: (சிரித்து) ராஜா, நீ என் மைந்தனுயில்லாவிட்டால் இது நீ செய்த சதி என்று சந்தேகப்பட்டிருப்பேன். ......தூதர்களே, என் குமாரனை இவ்வளவு இளம் வயதிலேயே போர்க்களம் அழைக்கிறீர்களே. சிம்ஹநாதன் திறமைக்கு ஹூணர் கொடுமை எம்மாத்திரம்.

தூத: உண்மை, மகராஜ். எங்களுடைய ஆவலைத் தெரிவித்தோம். தங்களுடைய சித்தம். எலிகளைப்போல் எல்லையில் சுரண்டும் ஹூணர்களை தானேஸ்வரப் படைகள் வெல்வது கஷ்டமல்ல. உற்சாகமும் ஊக்கமும் கொடுக்க தலைமைதான் தேவை.

பிர: சரி, இந்த விஷயத்தை நாம் ஆலோசித்துக் கூறுவோம்.

தூத: உத்திரவு, மகாராஜ்.

(போகிறார்கள்)

ரா. வ.: அப்பா, இவ்வளவு தூரம் வந்தவர்களை ஏமாற்றத்துடன் அனுப்பலாமா? நான் சென்று என்னுலான உதவியைச் செய்ய அனுமதிவேண்டும்.

ஹர்ஷ: ஆம், அப்பா, நாங்கள் இருவரும் போனுல்தான் குடிகள் உங்களுடைய அன்பை அறிந்து ஊக்கமடைவார்கள்.

பிரபா: (திடுக்கிட்டு) ஹர்ஷா, என்ன நீயுமா?

ஹர்ஷ: ஏன் அப்பா, ராஜா தனியாகப் போவதா?

ரா. வ.: தனிமையா? சிம்ஹநாதன்கூட வருகிருனே ஹர்ஷா.

பிரபா: ஹர்ஷா, ராஜா போவதே எனக்கு இஷ்டமில்லை. நீயுமா புறப்பட்டுவிட்டாய்?

ஹர்ஷ: அப்பா, நான்மாத்திரம் சோம்பேறிபோல் உட்கார்ந்துகொண்டிருப்பதா?

பிரபா: என்ன ஹர்ஷா, யுத்தத்திற்குப் போனுல்தான் வேலை என்று அர்த்தமா?

ஹர்ஷ: அப்பா, உம்முடைய அரசாட்சியில் நான் யுத்தமே பார்த்ததில்லை. இப்பொழுதும் நான் போகாவிட்டால் இனி யுத்தம் ஏது?

ரா. வ.: சரிதான், யுத்தமே ஒரு விளையாட்டு என்று நினைத்துவிட்டாயா? எதிரிகளைக் கொன்று வெல்வது யுத்தமல்ல ஹர்ஷா, அவர்களை அடக்குவதுதான் திறமை.

ஹர்ஷ: அப்பா, அண்ணுவின் இரக்கம் ஹூணர்களுடைய அதிருஷ்டமாய்விடும். அவர்களை நம்பவேகூடாது.

பிரபா: அப்படி நினைத்துவிடாதே ஹர்ஷா. சிம்ஹநாதன் பார்த்துக்கொள்வான். நீயும் போய்விட்டால் நான் தனிமையில் வருந்துவேன். கடமையைச் செலுத்தும் முதல் உரிமையை ராஜா அடையட்டும்.

ஹர்ஷ: உங்கள் சித்தம் அப்பா.

பிரபா: சரி. ராஜா, நீ ஜெயித்துவிட்டாய். போரிலும் ஜெயம் உண்டாகட்டும். சிம்ஹநாதனைக் கலந்து புறப்பட ஏற்பாடு செய்.

(போகிருர்கள்)

## காட்சி 16

[இந்துமதி சந்தோஷமாய் பூக்கோத்துக்கொண்டிருக்கிறுள். யசோமதி வருகிறுள்.]

இந்து: (அவளிடம் ஓடி) மகாராணி, என்ன கவலேயோடிருக்கிறீர்கள்!

யசோ: இந்து, என்னே மகாராணியென்று அழைக்காதே என்று எத்தனே தடவை சொல்லியிருக்கிறேன்.

இந்து: என் தாயார்போல் இருக்கிறீர்கள். ஆனுல் உங்களே அம்மா என்றழைக்கும் உரிமையை நான் கொண்டாட மனம் இல்லே. அதனுலா கவலே?

யசோ: நன்ருய்ச் சொன்னுய். அதனுலல்ல. ராஜ்யவர்த்தனன் போர்க்களம் போகிருன். இப்பொழுதுதான் விடைபெற்ருன்.

இந்து: (திடுக்கிட்டு) ஹர்ஷருமா?

யசோ: இல்லே. அவனும் போகவேண்டுமென்று மன்ருடுகிருன். அவனேடு வாதாடி தப்பிப்பதே கஷ்டம்.

இந்து: ஐயோ! ஹர்ஷரையும் அனுப்பிவிடாதீர்கள்.

யசோ: கண்ணே, உன் சிரத்தை எனக்குத் தெரியும். இருவரையும் அனுப்பிவிட நாங்கள் சகிப்போமா? இருந்தாலும்......

இந்து: இருந்தாலும்?

யசோ: ஹர்ஷன் சளேக்கவேமாட்டான். திரும்பவும் சக்ரவர்த்தியிடம் விடைபெறப் போயிருக்கிருன்.

இந்து: சக்ரவர்த்தி அனுமதி கொடுக்கமாட்டார்.

யசோ: குழந்தாய்! உன்னுடைய நம்பிக்கை எனக்கிருந்தால்......

இந்து: சக்ரவர்த்தி அனுமதி கொடுத்துவிடுவாரா?

யசோ: மனமிசைந்து கொடுக்கமாட்டார். ஆனுல் ஹர்ஷன் சமர்த்தன். நம்பிக்கை ஏற்படும்படி வாதாடுவான்.

இந்து: ஆம்.

யசோ: உனக்குத்தான் தெரியுமே. ஹர்ஷன்மீது வாஞ்சை அதிகம். மறந்துபோய் விடைகொடுத்துவிடுவார். பிறகு வருத்தப்படுவார்.

இந்து: ஹர்ஷர், அவ்வளவு கல்நெஞ்சமுடையவரா? உங்களே தனியே தவிக்கவிட்டுப் போய்விடுவாரா?

யசோ: அப்படியல்ல. ராஜா தனியாகப்போய் கஷ்டப்படுவானே என்பதுதான் ஹர்ஷன் கவலே. ராஜா எதிரிகளே சரியாக

தண்டிக்காமல் இரக்கங் காட்டுவான் என்று ஹர்ஷன்நினைக்கிறுன். அது என்னவோ உண்மைதான்.

இந்து : அதற்காக உங்களை தனிமையில் விட்டுப் போவதோ ?

யசோ : அண்ணனைப் பின்பற்றுவது தன் கடமை என்கிறுன்.

இந்து : அவரைத் தடுக்க ஒரு வழியும் இல்லையா ?

யசோ : அதற்காகத்தான் உன்னிடம் வந்தேன்.

இந்து : நான் என்ன செய்யமுடியும் ?

யசோ : ஹர்ஷன் போர்க்களம் போகக்கூடாதென்பது உன் விருப்பமில்லையா ?

இந்து : (மௌனம்.)

யசோ : எனக்குத் தெரியும். அந்த விருப்பம் உனக்குச் சக்தி கொடுக்கும். நீதான் அவனைத் தடுக்கவேண்டும்.

இந்து : நீங்கள் சொல்வதைப்பார்த்தால் எனக்குத் தயக்கமாயிருக்கிறது.

யசோ : தயக்கம் பெண்மையின் இயற்கை. அதைத் தவிர்க்க நம்பிக்கை இல்லையா ?

இந்து : இருந்தாலும் முயற்சிசெய்கிறேன்.

யசோ : நீ உதவிசெய்வாய் என்று எனக்குத்தெரியும். அவன் சக்ரவர்த்தியிடம் போயிருக்கிறுன்.

இந்து : வந்தவுடன் சந்திக்கிறேன்.

யசோ : உனக்கு வெற்றி கிடைக்கட்டும்.

(போகிருள்)

## காட்சி 17

**ராஜ்யவர்த்தனன். பண்டி.**

ரா. வ.: பண்டி, சிம்ஹநாதனிடம் ஒன்று சொல்ல மறந்து விட்டேன். காலாட்படை அதிகம் வேண்டாம். குதிரைப்படை யில் இன்னும் இரண்டாயிரம் தயார்செய்யவேண்டும்.

பண்: நான் போய் சொல்லுகிறேன்.

ரா. வ.: ஆம், ஹர்ஷன் எங்கே?

பண்: சக்ரவர்த்தியோடு பேசிக்கொண்டிருந்ததாக மாதவன் சொன்னான்.

ரா. வ.: ஓஹோ, திரும்பவும் அப்பாவிடம் வாதாடச் சென் றிருப்பான். ஒரே பிடிவாதமாயிருக்கிறானே.

பண்: பிடிவாதமா? உன்னோடு இருக்கவேண்டுமென்று விருப்பம்.

ரா. வ.: அது சரி. சக்ரவர்த்தியருகில் இருக்கவேண்டாமா? அவர் உத்தரவு கொடுக்கமாட்டாரென்று நம்புகிறேன். நான் போனபின் நீ அவனை எப்படியாவது தேற்றி சமாளிக்கவேண்டும்.

பண்: என்ன, என்னையும் விட்டுவிட்டுப் போகிறாயா?

ரா. வ.: நான் என்ன செய்வேன்? நான் புறப்படுவது தெரிந்த நிமிஷமே, மாதவனும் குமாரனும் போட்டிபோட்டுக் கொண்டு கோட்டை வாயிலில் போய் முகாம் போட்டுக்கொண் டிருக்கிறார்கள்.

பண்: அதிருஷ்டசாலிகள், காரியவாதிகள்.

ரா. வ.: நீயும் வந்துவிட்டால் ஹர்ஷன் கஷ்டப்படுவான்.

பண்: சரி. உன்னிஷ்டம்.

ரா. வ.: நீ சிம்ஹநாதனை அழைத்து வா.

(பண்டி போகிறான்)

[ராஜ்யவர்த்தனன் மறுபுறம் போகும்போது ஹர்ஷன் எதிர்ப்படு கிறான்.]

ரா. வ.: (திடுக்கிட்டு) ஹர்ஷா, இதென்ன கோலம்! ஆயுத பாணியாய்!

ஹர்ஷ: அண்ணா, உன் உத்தரவுதான் தேவை.

ரா. வ.: எதற்கு?

ஹர்ஷ: உன்னைப் பின்பற்ற.

ரா. வ.: என்ன ஹர்ஷா விளையாடுகிறாய்?

ஹர்ஷ: அப்பாவைக் கேட்டேன். நீ சம்மதித்தால் போகலாம் என்று சொன்னார்.

ரா. வ.: எனக்குத் தெரியும் அவரிடமிருந்து உத்தரவு வாங்கி விடுவாயென்று.

ஹர்ஷ: நீயும் உத்தரவு கொடுப்பாயென்று எனக்குத் தெரியும்.

ரா. வ.: அதுதான் தப்பு. நீ சிறுவன். இப்பொழுதே போர்க்களத்திற்கு......

ஹர்ஷ: நான் சிறுவன்தான். எனக்கு ஹூணர்கள் வேண்டும் விளையாட.

ரா. வ.: அந்த விளையாட்டுக்கருவிகளால் அபாயம் ஏற்படும்.

ஹர்ஷ: உனக்கு?

ரா. வ.: நான் விளையாடப் போகவில்லையே.

ஹர்ஷ: போராடப் போகிறாய். அதனால்தான் உனக்கு உதவி அவசியம்.

ரா. வ.: நம் பெற்றோருக்கு உன் உதவி அதைவிட அவசியம்.

ஹர்ஷ: அப்பா போகச்சொன்னாரே.

ரா. வ.: நீ வற்புறுத்தினால் என்ன செய்வார்?

ஹர்ஷ: ஆனால் நீ மறுக்கிறாயா?

ரா. வ.: ஆம்! ......ஹர்ஷா, உன் அண்ணா என்னும் முறையில் நான் சொல்வதைக் கேட்கமாட்டாயா? நான் போவது கடமை. நீயும் வந்துவிட்டால் அம்மா எவ்வளவு கவலைப்படுவாள்?

ஹர்ஷ: அண்ணா, நான் வரக்கூடாதென்பது உன் உத்தரவானால் கீழ்ப்படிகிறேன்.

ரா. வ.: உத்திரவல்ல ஹர்ஷா! வேண்டுகோள். இசைய வேண்டும். ......மாட்டாயா?

ஹர்ஷ: சரி, அண்ணா.

ரா. வ.: வருத்தப்படாதே. பெற்றோரைப் பார்த்துக்கொள்.

ஹர்ஷ: எதிரிகளுக்கு இரங்காதே அண்ணா. உனக்கு வெற்றியுண்டாகட்டும்.

ரா. வ.: உன் வார்த்தைகளால் ஊக்கமடைவேன். வரு கிறேன்.

(ராஜ்யவர்த்தனன் போகிறான்)

[ஹர்ஷன் ஏமாற்றத்துடன் ஒரு நாற்காலியில் சாய்கிறான். சில விநாடிகள் கழித்து இந்துமதி மெல்ல வருகிறாள். ஹர்ஷன் அவள் வரவை அறியாமல் ஜன்னல் வழியே வெளியே பார்த்தவண்ணம் இருக்கிறான். இந்துமதி சட்டென்று நின்று யோசிக்கிறாள். பிறகு மெல்லப் பாடுகிறாள். அவள் பாட ஆரம்பித்ததும் ஹர்ஷன் திரும்புகிறான். அவள் முகத்தைத் திருப்பிக்கொண்டு அவனைப் பார்க்காததுபோல் பாடுகிறாள். ஹர்ஷன் அருகில் பாட்டு முடியும் வரை காத்திருக்கிறான். பாட்டு முடிந்ததும்.]

ஹர்ஷ: என்ன கானம்! நான் கேட்டால் பாடுவதில்லை. இஷ்டமிருந்தால்தான் பாடுகிறாய்.

இந்து: (பாசாங்குடன் திடுக்கிட்டு எழுந்து) நீங்கள் எங்கே இருந் தீர்கள்? நான் கவனிக்கவே இல்லையே.

ஹர்ஷ: வாஸ்தவம். அதனால்தான் பாடினாய். நான் இருப் பது தெரிந்தால் பாடமாட்டாய். அப்படித்தானே?

இந்து: என் பாட்டில் ரொம்ப சிரத்தையிருப்பதுபோல்தான் பேச்சு!

ஹர்ஷ: இந்துமதி, அபாண்டமாகப் பேசுகிறாயே. எத்தனை நாள் நான் உன்னைப் பாடச்சொல்லி மன்றாடினேன்? நீதானே மறுத்து......

இந்து: இஷ்டமில்லாமல் மறுத்தேனா? உங்கள் பேச்சைக் கேட்பதில் இருந்த ஆனந்தத்தில்தான் பாடவில்லை.

ஹர்ஷ: நானென்ன அவ்வளவு வாயாடியா? இப்பொழுது நான் இல்லையென்று நினைத்துத்தானே நீ பாடினாய்?

இந்து: நினைப்பதென்ன? நீங்கள் இங்கேயே இருக்கப் போகிறீர்களோ?

ஹர்ஷ: ஏன், இல்லாமலென்ன?

இந்து: அப்பா! ஒன்றுமே தெரியாததுபோல்தான் பேசுவது. யுத்தகளம் போவதற்காக பிரம்மப்பிரயத்தனம் செய்தீர்களே!

ஹர்ஷ: சரிதான். உனக்கு எல்லாம் தெரிந்திருக்கிறதே. என்னுடைய தோல்வியில் சந்தோஷமா?

இந்து: எனக்கென்ன சந்தோஷம்? நீங்கள் இஷ்டப்பட்டுப் போகும்போது.

ஹர்ஷ : நான்தான் போகவில்லையே!

இந்து : என்ன நிச்சயம்?

ஹர்ஷ : என் வார்த்தையில் நம்பிக்கையில்லையா? நான் போகக்கூடாதென்று ராஜாவின் உத்தரவு.

இந்து : கீழ்ப்படிவீர்களா?

ஹர்ஷ : ராஜா சொல்வதுதான் சட்டம். அவன் சம்மதம் இல்லாமல் போகமாட்டேன்.

இந்து : நல்லவேளை. மாதவன், குமாரன் இருவரும் போய் விட்டார்கள். நீங்களும் போயிருந்தால்....நான் தனியாய்த்தானே இருப்பேன்?

ஹர்ஷ : எப்பொழுதும்போல் அவர்கள் அதிருஷ்டசாலிகள். அவர்கள் போர்க்களம் செல்ல நான் பெண்ணைப் பார்த்துக்கொண்டிருக்கவேண்டும்.

இந்து : ஆம். என்னோடு இருப்பது துரதிர்ஷ்டம். என்னைக் கண்டாலே பிடிக்கவில்லை என்று சொல்லுகிறதுதானே...(கோபத்துடன்)

ஹர்ஷ : இந்துமதி, கோபம் வேண்டாம். அப்படிச் சொல்லவில்லை. உன்னோடு பிறந்ததனால்தானே அவர்களுக்கு அதிருஷ்டம். அந்த பாக்கியம் எனக்கில்லையே என்று வருந்தினேன்.

இந்து : போதுமே பாக்கியம். அவர்களோடு பிறந்து நான் தனியாயிருக்கிறேனே.

ஹர்ஷ : உனக்கா தனிமை? என் தனிமையை நீ தவிர்க்கும் பொழுது உனக்குத் தனிமையேது?

இந்து : தனிமை வேண்டுமென்றுதானே போகப் புறப்பட்டீர்கள்?

ஹர்ஷ : நான் போகவில்லை என்றுதான் சொன்னேனே.

இந்து : நிஜமாகவா?

ஹர்ஷ : அண்ணா உத்திரவோடு உன் கட்டளையும்.

இந்து : சரி. என்மேல் சாக்குப்போடவேண்டாம். மகாராணி மகிழ்ச்சியடைவார். சொல்லவேண்டும். வாருங்கள்.

(போகிறார்கள்)

## காட்சி 18

### உஜ்ஜேனி

**தேவகுப்தன். ஒற்றர் தலைவன்.**

தேவ: திறமையில்லாத மடையன்! திரும்பிவர வெட்கமில்லையா?

ஒ. த.: மகாராஜ், நான் என்ன செய்வேன்? எங்களுடைய காரியங்கள் பூர்த்தியாகும் சமயத்தில் எப்படியோ அரசனுக்குத் தெரிந்துவிட்டது.

தேவ: நீ ஜாக்கிரதையாக இருந்திருந்தால் எப்படித் தெரியும்?

ஒ. த.: முதலிலிருந்தே கன்னேசி அரசனுக்குச் சந்தேகம் ஏற்பட்டுவிட்டது. நல்லவேளை, எங்களை உயிரோடு விட்டார்கள்.

தேவ: இல்லாமல் என்ன செய்துவிடுவான்? மாளவநாட்டார்களை தண்டிக்க கன்னேசிக்கு தெரியுமா?

ஒ. த.: இல்லை, அரசே! இருந்தாலும் எங்களுடைய வேலையைப்பற்றித் தெரிந்த பிறகும் தண்டிக்காமல் சொந்த நாட்டிற்கு அனுப்பிவைத்து......

தேவ: துரோகி. என்னெதிரில் கன்னேசியரசனைப் புகழவா இங்கு வந்தாய்?

ஒ. த.: மகாராஜ்! மன்னிக்கவேண்டும்.

தேவ: உன் கடமையைச் சரிவரச் செய்பவனாயிருந்தால் நீ திரும்பவும் கன்னேசி சென்று......

ஒ. த.: அது முடியாது, அரசே.

தேவ: முடியாதா? என்ன திமிர் உனக்கு. கன்னேசி கொடுக்கத் தவறிய கொடும் தண்டனையை நான் கொடுக்கவேண்டியதுதான்.

ஒ. த.: சித்தம், மகாராஜ். கன்னேசியில் சரியான காரணமின்றி அன்னியர் பிரவேசிக்கமுடியாது. மாளவிகள் என்றால் கண்காணிப்பு பலமாயிருக்கிறது.

தேவ: முட்டாள்! என்னுடைய எண்ணங்களையெல்லாம் பாழாக்கினாய். கன்னேசிக்கு நான் விரோதியென்பதையும் காட்டிவிட்டாய்.

ஒ. த.: மகாராஜ், தாங்கள் இப்படித் தயங்கலாமா? கன்னேசிக்கு பயப்படலாமா?

தேவ: சீ! நன்றிகெட்ட துரோகி. என்முன் நில்லாதே! கன்னேசி! அந்த கிரஹவர்மனுக்கா நான் பயப்படுகிறேன்? வர்த்தனர்களுக்கு சந்தேகம் ஏற்பட்டுவிடுமே.

ஒ. த.: அந்த விஷயத்தில் தாங்கள் கவலைப்படவேண்டாம். ஒரு முக்கியமான செய்தி இப்பொழுதுதான் கிடைத்தது.

தேவ: வாயை மூடு. உன் செய்திகளும் சங்கதிகளும் எனக்கு வேண்டாம்.

ஒ. த.: அரசே, ராஜ்யவர்த்தனன் ஹூணர்களைக் கண்டிக்க பாஞ்சாலம் சென்றிருக்கிறார்.

தேவ: (ஆச்சரியத்துடன்) உண்மையாகவா?

ஒ. த.: ஆம். சேனாபதியும் போயிருக்கிறான்.

தேவ: நல்ல சந்தர்ப்பம்.

ஒ. த.: கன்னோசியைத் தாக்கவா?

தேவ: இல்லை. முதலில் கன்னோசிக்கு உதவி கிடைக்காமல் செய்யவேண்டும்.

ஒ. த.: தானேஸ்வர படையில் பெரும் பாகம் பாஞ்சாலம் போய்விட்டதே.

தேவ: ஆம். ஆனால் ஹர்ஷன் இருக்கும்வரை ஒன்றும் முடியாது.

ஒ. த.: நான் தானேஸ்வரம் செல்லட்டுமா?

தேவ: வேண்டாம். அங்கும் போய் ஏதாவது மடத்தனமாய் நடந்துகொள்வாய்.

ஒ. த.: அரசே, நான் ஒருமுறை தவறியது உண்மை. என் திறமையை நிரூபிக்க மற்றொரு சந்தர்ப்பம் கொடுக்கமாட்டீர்களா?

தேவ: இன்னுமா உன்னை நம்புவது?......சரி, நீ உடனே பாஞ்சால எல்லைக்குப் போ. ராஜ்யவர்த்தனனிடமிருந்து தானேஸ்வரத்திற்கு ஒரு செய்தியும் போகாமல் தடுத்துவிடவேண்டும். அதேமாதிரி தானேஸ்வரத்திலிருந்து போகும் செய்தியையும் தடுக்க வேண்டும்.

ஒ. த.: அப்படியே செய்கிறேன் அரசே. இனி ராஜ்யவர்த்தனனுக்கும் தானேஸ்வரத்திற்கும் நடுவில் தாண்டமுடியாத பிளவை ஏற்படுத்திவிடுகிறேன்.

தேவ: சரி, போ. ஆனால் இந்த முறை தவறினால் உன் உயிர் தப்பாது. ஹர்ஷனுக்குத் தெரிந்தால் உன்னைக் கொன்று விடுவான். கிரஹவர்மனைப்போல் இரக்கங்காட்டமாட்டான்.

ஒ. த.: நான் தவறினால் அது எனக்குத் தக்க தண்டனையே யாகும்.

தேவ: சரி. மந்திரியை வரச்சொல் சசாங்கனுக்குச் செய்தி அனுப்பவேண்டும்.

(போகிறான்)

## காட்சி 19

### தானேஸ்வரம்

A035

ஹர்ஷன். பண்டி வருகிறன்.

ஹர்ஷ: என்ன பண்டி?

பண்: ஒன்றும் வரவில்லையாம் திரும்பவும் இரண்டு வீரர்களை சக்கரவர்த்தி அனுப்பி இருக்கிறர்.

ஹர்ஷ: மூன்று மாதங்கள் ஆகிறது, இன்னும் ஒரு சமாசாரமும் தெரியவில்லை.

பண்: ராஜ்யவர்த்தனன் விசேஷ சமாசாரம் இல்லாவிட்டால் சொல்லி அனுப்பமாட்டான். ஒரு வேளை பூரண வெற்றியுடன் திரும்பிவந்து தானே நேரில் சந்தோஷ சமாசாரம் தெரிவிக்கலாமென்று நினைக்கலாம்.

ஹர்ஷ: அப்படி இருக்கமாட்டான் சக்கரவர்த்தி சமாசாரத்திற்காக கவலையுடன் காத்துக்கொண்டிருப்பார் என்று அவனுக்குத் தெரியும். எனக்கு ஏதோ சந்தேகமாயிருக்கிறது.

பண்: சந்தேகமா? யார் மீது?

ஹர்ஷ: ஒருவர்மீதிலுமில்லை. ராஜ்யவர்த்தனன் நிலைமையைப்பற்றி.

பண்: என்ன, நீ கூட இப்படிப் பேசுகிறய்?

ஹர்ஷ: உறவினர்கள் கொடுமையையும், ராஜாவின் கடுமையையும் நினைக்கும்போது...

பண்: சிம்ஹநாதன் இருக்கும்போது ராஜ்யவர்த்தனனுக்கு ஒன்றும் அபாயம் ஏற்படாது.

ஹர்ஷ: பிரமாத அபாயம் ஏற்படாவிட்டாலும் அவனுடைய நிலைமை சங்கடமானதாயிருந்தால்...பண்டி, நான் நேரில் சென்று அறிந்துவருவதுதான் உத்தமம் என்று நினைக்கிறேன்.

பண்: ஹர்ஷா, சக்கரவர்த்தியின் கவலையை அதிகரிக்கவா?

ஹர்ஷ: இல்லை, தவிர்க்க.

பண்: சக்கரவர்த்தி சம்மதிக்கமாட்டார். நீயும் போனபின், செய்தி வராவிட்டால் எவ்வளவு கவலைப்படுவார்?

ஹர்ஷ: நான் விஷயத்தை அறிந்துவரத்தானே போகிறேன். போனவுடன் திரும்பிவிடுவேன். இப்பொழுதிருக்கும் கவலை நிறைந்த நிலைமையை எப்படியாவது தடுக்கவேண்டும். ஒன்றும் தெரியாமலிருக்கும் இந்த நிலைமை தாங்கமுடியவில்லை.

பண்: சக்கரவர்த்தியிடம் சொல்லலாமா?

ஹர்ஷ: சொல்லிவிட்டுத்தான். இரு நான்போய் அனுமதி பெற்று வருகிறேன்.

(போகிறன்)

[அடுத்த நிமிஷம் இந்துமதி வருகிறள். பண்டியைக் கண்டதும் சட்டென நிற்கிறள்.]

பண் : என்ன அம்மணி!

இந்து: இளவரசர் இல்லையா?

பண் : இப்பொழுதுதான் போனார். நான் அழைத்து வரட்டுமா?

இந்து: வேண்டாம் ஏதாவது முக்கிய காரணமாய் போயிருக்கிறாரோ?

பண் : ஆ...இல்லை ஏதோ சக்கரவர்த்தியைப் பார்க்க வேண்டுமென்று போனார்.

இந்து: பாஞ்சாலத்திலிருந்து ஏதாவதுசெய்திவந்திருக்கிறதா?

பண் : ஒன்றும் வரவில்லை.

இந்து: அதைப்பற்றி ஏதாவது ஆலோசிக்கச் சென்றிருக்கிறாரோ?

பண் : இருக்கலாம்.

இந்து: நிச்சயமாய்த் தெரியாதா?

பண் : ஹர்ஷன் வந்தவுடன் தெரியுமென்று நினைக்கிறேன்.

இந்து: மாதவனும், குமாரனும் கூடப்போயிருக்கிறார்களே. யாராவது ஒருவர் சமாசாரம் கொண்டுவரக் கூடாதோ?

பண் : போர்க்களத்தில் அதிக வேலையாயிருக்கும், சீக்கிரம் வெற்றியுடன் திரும்பி வந்துவிடுவார்கள்.

இந்து: இங்கிருந்து நம்பிக்கையுள்ளவர்கள் யாராவது போய் பார்த்துக்கொண்டுவந்தால்...

பண் : அதற்காகத்தான். ஹர்ஷர்......

இந்து: ஊம்......போகப் போகிறாரா?

பண் : இல்...லை. சில தூதர்களை அனுப்பலாமென்று.

இந்து: நேற்றுத்தான் தூதர்கள் போனார்களே! இன்னும் அனுப்புவதில் என்ன பயன்.

பண் : அதைப்பற்றி யோசிக்கத்தான்......

இந்து: யோசனையென்ன? நீங்கள் ஏதோ மறைக்கிறீர்கள்.

பண் : என்ன அப்படிச் சொல்கிறீர்கள்.

இந்து: இந்த நிலைமையை உத்தேசித்து இளவரசர் புறப்படப்போகிறாரா இல்லையா?

பண் : ஒருவேளை அந்த எண்ணம் இருக்கலாம்.

இந்து: உங்களுக்குத் தெரியாதோ? எல்லைக்குப் புறப்பட அனுமதிவேண்டித்தானே சக்கரவர்த்தியிடம் போயிருக்கிறார்? மறைக்காமல் சொல்லுங்கள்.

பண் : ஆம் என்ன சொல்வது? அவருடையகவலையில் நேரே போய்...

இந்து: எனக்குத் தெரியும். நான் சந்தேகப்பட்டது உண்மையாய்விட்டது. மகாராணியிடம் சொல்கிறேன்.

(போகிறன்)

[பண்டி பிரமித்து நிற்கிறன்]

## காட்சி 20

**யசோமதி. பிரார்த்தனை.**

[ஒருபுறமாக ஹர்ஷனும் மறுபுறம் இந்துமதியும் ஓடி வருகிறார்கள்.]

இந்து: மகாராணி!

ஹர்ஷ: அம்மா!

யசோ: என்ன கண்ணே! என்ன ஹர்ஷா!

[இருவரும் ஒருவரையொருவர் பார்த்து திடுக்கிட்டு சட்டென நின்று விடுகிறார்கள்.]

யசோ: என்ன இந்து, பிரமித்து நிற்கிறாயே! ஹர்ஷா, இதென்ன பேசாமல் நிற்கிறாய்?

ஹர்ஷ: ஒன்றுமில்லையம்மா தனியாயிருக்கிறாயோ என்று வந்தேன். இந்துமதி இருக்கிறாளே. நான் அப்புறம் வருகிறேன்.

இந்து: மகாராணி, என்னைத் தேடுவீர்களென்று வந்தேன். இளவரசர் இருப்பது தெரியாது. ஏதாவது முக்கிய சமாசாரம் இருக்கும் நான் போகிறேன்.

யசோ: என்னம்மா, இரண்டுபேரும் சேர்ந்துதானேவந்தீர்கள்?

இந்து: இல்லையே, நான் இப்பொழுதுதானே வந்தேன்.

ஹர்ஷ: நான்தான் இப்பொழுது வந்தேன். இந்துமதி இங்கு தானே இருந்தாள்.

இந்து: இளவரசர்தான் ஓடி வந்தாரே எனக்கு முன்!

ஹர்ஷ: இந்துமதி பறந்து வந்தாள்.

யசோ: ஐயோ இதென்ன? இரண்டுபேருக்கும் சண்டையா? விளையாட்டா?

ஹர்ஷ: சண்டையில்லை யம்மா.

இந்து: நாங்கள் விளையாடவில்லை மகாராணி.

யசோ; போகட்டும் என்ன கண்ணே! ஓடிவந்தாயே என்ன சொல்ல வந்தாய்?

இந்து: ஒன்றும் விசேஷமில்லை மகாராணி. இளவரசர் ஏதோ முக்கிய விஷயமாய் வந்திருக்கிறார்கள் போலிருக்கிறதே!

ஹர்ஷ: அப்படி ஒன்றுமில்லையம்மா! இந்துமதி தான் சொல்லவந்ததை என் எதிரில் சொல்லமாட்டாள்போலிருக்கிறது.

இந்து: நான் ஒன்றும் சொல்ல வரவில்லை. இளவரசர் ராஜீய காரியமாக வந்திருப்பார். என்முன் சொல்லலாமோ கூடாதோ.

யசோ: நிஜமாகவே சண்டைபோலிருக்கிறதே? போகட்டும் நான் தீர்த்துவைக்கிறேன். உங்கள் புகார்களைச் சொல்லுங்கள்.

ஹர்ஷ: அம்மா சண்டையைப்பற்றி எனக்கொன்றும் தெரியாது. இந்துமதிதான் புகார் சொல்ல வந்திருக்கிறாள்.

இந்து: அதுமட்டும் தெரியும்போலிருக்கு.

ஹர்ஷ: நீதானே பண்டியிடம்...(நிறுத்திவிடுகிறன் திடுக்கிட்டு)

இந்து: ஊம்! ஒன்றுந் தெரியாது என்பதற்கு உதாரணம். பார்த்தீர்களா மகாராணி.

யசோ: என்ன ஹர்ஷா, பண்டியிடம் என்ன சொன்னுள்?

ஹர்ஷ: (வேறு வழியின்றி) அம்மா, ராஜாவிடமிருந்து ஒன்றும் செய்தி வரவில்லையே யென்று அப்பா கவலைப்பட்டுக்கொண்டிருந் தார். அப்பாவைப் பார்க்கப் போயிருந்தேன்.

யசோ: இந்துமதியோடு பேசிக்கொண்டிருக்கும்போது திடீ ரென்று போயிருப்பாய். அதற்காகத்தான் குழந்தை என்னிடம் சொல்லவந்தாள். என்ன இந்து?

இந்து: இல்லை அம்மணி. அவர் என்னேடு பேசியே மூன்று நாளாகிறதே. தவிர பண்டியிடம் எனக்கென்ன வேலை?

ஹர்ஷ: மகாராணியிடம் சொல்லப் போகிறேனென்று பண்டியிடம் சொல்லவில்லையோ?

இந்து: நீங்கள் சொல்லவில்லையே நானுவது சொல்லலா மென்று வந்தேன்.

ஹர்ஷ: நான் சொல்லுவதற்காகத்தானே இப்பொழுது வந்தேன்.

இந்து: சொல்லுங்களேன்.

ஹர்ஷ: நீதான் ஓடிவந்தாயே சொல்வதுதானே.

யசோ: ஐயோ! திரும்பவுமா சண்டை?

இந்து: அவரும் பாஞ்சாலத்திற்குப் போகப் போகிருராம்.

யசோ: ஹர்ஷா! நீயுமா? போர்க்களத்திற்கா?

ஹர்ஷ: நான் யுத்தம் செய்வதற்காகப் போகவில்லையம்மா!

இந்து: பார்த்துவிட்டு வருவதற்காக.

யசோ: ஹர்ஷா, ராஜாவிடமிருந்து ஒரு தகவலுமில்லை யென்று நாங்கள் வருத்தப்பட்டுக்கொண்டிருக்கிறோம்.

ஹர்ஷ: அதனுல்தான் அம்மா வெறும் கவலையோடிருப்பதை விட......

இந்து: யுத்தகளத்திற்கும் போய் கவலைப்படலாம்.

ஹர்ஷா: நான் போனுல் உண்மையை அறிந்துவரலா மல்லவா? எத்தனைநாள் இப்படி ஒரு விஷயமும் தெரியாமல் இருப்பது?

யசோ: ஹர்ஷா நீயும் போனபின், தகவல் வராவிட்டால்?

ஹர்ஷ: நான் போனவுடன் வந்துவிடுவேன் அம்மா. சமா சாரம் அறிந்துவரத்தானே போகிறேன்.

யசோ: அப்பா என்ன சொன்னுர்?

ஹர்ஷ: என் யோசனை நல்லதென்றுதான் சொன்னுர். உன் னையும் கேட்டு அனுமதிபெறச் சொல்லுகிருர்.

இந்து: மகாராணி, நீங்கள் போய் சக்கரவர்த்தியைக் கேட்டுப்பாருங்கள்.

ஹர்ஷ: என் வார்த்தையில் நம்பிக்கையில்லை.

யசோ: சரிதான். நீ போகிறாயென்று இந்துக்குக் கோபமா? சண்டைக்குக் காரணம் இப்பொழுது தெரிகிறது.

இந்து: நீங்களும் அனுமதி கொடுத்துவிட்டீர்களா?

ஹர்ஷ: உன் சிபார்சு இல்லாமல் கிடைக்குமா?

இந்து: நான் மகாராணியிடம் பேசினேன்.

ஹர்ஷ: நான் எங்கள் அம்மாவிடம் பேசினேன்.

(இந்துமதியின் கண்களில் நீர் ததும்புகிறது)

யசோ: ஹர்ஷா, என்ன இது? கண்ணே இந்து, பயப்படாதே. சக்கரவர்த்தியைக் கேட்காமல் நான் ஒன்றும் சொல்ல மாட்டேன். இதோ நான் போய்க் கேட்கிறேன்.

(ஹர்ஷன் பின்தொடருகிறான்)

யசோ: ஹர்ஷா, நீ இங்கேயே இரு.

ஹர்ஷ: இல்லை, அம்மா. நான் வந்தால்...

யசோ: வேண்டாம். நீ இந்துவோடு சண்டை பிடித்ததற்காக உனக்கு தண்டனை நீ இங்கேதான் இருக்கவேண்டும். (சந்தோஷத்துடன் தழுவும் இந்துமதியைப்பார்த்து) இந்து, தண்டனை உனக்கும்தான். நான் வரும்வரையில் நீங்கள் இங்கேயே இருக்க வேண்டும்.

(போகிறாள்)

[ஹர்ஷன் கோபத்துடன் தன்னுடைய வாளைக் கீழே எறிந்துவிட்டு இங்குமங்கும் உலாவுகிறான். இந்துமதி ஒரு மூலையில் முகத்தைத் திருப்பியவண்ணம் நின்றுகொண்டிருக்கிறாள். அவள் விம்மி அழுவதுபோல் தோள்கள் அசைகின்றன. ஹர்ஷன் சட்டென நிற்கிறான்.]

ஹர்ஷ: வெற்றியால் ஏற்பட்ட சந்தோஷத்தில் சிரிப்புத் தாங்கவில்லையோ?

இந்து: .........

ஹர்ஷ: ஆம். என் நிலைமை நீ சிரிக்கும்படிதான் இருக்கிறது......

[இந்துமதி சட்டென திரும்புகிறாள். அவள் கண்களிலிருந்து நீர் தாரைதாரையாகப் பாய்கிறது. அழுகிறாள்.]

ஹர்ஷ: (திடுக்கிட்டு அருகில் சென்று) இந்துமதி! அழுகிறாயா? மன்னிக்கவேண்டும். நான் நினைத்தது தவறு.

இந்து: இளவரசே, குற்றம் செய்தது நான். நான் துரோகி. என்னை மன்னிக்கவேண்டும்.

ஹர்ஷ: சீ! அழாதே. நீ என்னசெய்துவிட்டாய் துக்கப் படுவதற்கு? நான்தானே இரக்கமில்லாமல் உன்னைக் கண்டித் தேன். என்னை மன்னிப்பது உண்மையானால் உன் துயரத்தை ஒழி.

இந்து: குற்றம் முழுவதும் என்னுடையது. விளையாட்டாக வந்து மகாராணியிடம் சொல்லிவிட்டேன்.

ஹர்ஷ: அதனாலென்ன? நானும் அனுமதிபெறத்தானே வந்தேன்?

இந்து: நீங்கள் என்னைவிட்டுப் போகிறீர்களே என்ற வருத் தத்தினால் அசட்டுத்தனமாய் இருந்துவிட்டேன்.

ஹர்ஷ: ராஜாவைப்பார்த்து விஷயம் தெரிந்துவரத்தானே போகிறேன். அவனிடமிருந்து ஒன்றும் செய்தி வராததால் எல் லோருக்கும் கவலையாயிருந்தது.

இந்து: ஆம். நான்தான் மூடத்தனமாய் நடந்துகொண் டேன். உங்களோடு விளையாடும் உரிமையைக் கைக்கொண்ட தற்காக மன்னிக்கவேண்டும்.

ஹர்ஷ: மாட்டேன். விளையாடுவதற்கு நீயும் இல்லாவிட் டால் நான் என்ன செய்வேன்? உன்னுடைய மனதை அறியாமல் கேவலமாய் நடந்துகொண்டேன்.

இந்து: உங்கள் காரியம் முழுவதையும் கெடுத்த பிறகும் இவ்வளவு பெருந்தன்மையாய் நடந்துகொண்டிருக்கிறீர்கள்.

ஹர்ஷ: நீ கெடுக்கவில்லையே உண்மையில், என் வேலையை சுலபமாகச் செய்துவிட்டாய். அம்மாளிடம் எப்படிச்சொல்லி விடைபெறுவது என்று யோசித்துக்கொண்டிருந்தேன். நீயே உத விக்கு வந்துவிட்டாய்.

இந்து: எனக்காகப் பரிந்துகொண்டு மகாராணி அனுமதி கொடுக்காவிட்டால்?

ஹர்ஷ: உனக்குத்தான் வெற்றி.

இந்து: உங்கள் தமையனாரைப் பார்க்கப் போகமுடியாதே.

ஹர்ஷ: உன்னை வருத்தியதற்கு அது எனக்குத் தக்க தண் டனையாகுமல்லவா?

இந்து: ஐயோ! வேண்டாம் பிறகு எல்லோருக்குமே கவலை அதிகமாகும். இதோ நான்போய் மகாராணியிடத்திலும் சக்கர வர்த்தியிடத்திலும் உங்களுக்கு அனுமதிபெற்றுவருகிறேன்.

ஹர்ஷ: வேண்டாம். மகாராணியின் கட்டளையை மீறக் கூடாது. இங்கேயே இருக்கவேண்டும்.

இந்து: மீறினால் இதைவிடக் கடுமையான தண்டனைதானே கிடைக்கும். தண்டனைகாலம் நீடிக்கப்பட்டால் எனக்கு சந்தோ ஷம்தான். உங்கள் விஷயத்தில் செய்த குற்றத்தை எப்படியாவது தவிர்க்கவேண்டும்.

(ஓடுகிறாள்)

ஹர்ஷ: இந்து!......

## காட்சி 21

### கர்ணஸுவர்ணம்

### சசாங்கன் சபை

[தேவகுப்தன் வருகிறான்]

சே: மகாராஜாதி ராஜன், மாளவகிரீடாதிபதி!

சசாங்கன்: அரசே! வரவேண்டும். உங்களுடைய வரவால் பெருமையடைந்தேன்.

தேவ: கௌட மன்னனால் கௌரவிக்கப்படுவது என் பாக்கியம்.

[சசாங்கன் ஒரு சமிக்ஞை செய்ய மற்றவர்கள் சபையைவிட்டு நீங்குகின்றனர்.]

சசா: தேவகுப்தா! என்ன அவசரமாக வந்தாய்; விசேஷமென்ன? தூதர்களை அனுப்பக் கூடாதா?

தேவ: சசாங்கா! நாம் எதிர்பார்த்திருந்த சமயம் வந்துவிட்டது—கன்னோசியைத் தாக்க.

சசா: ஏன், ஹர்ஷனை வென்றுவிட்டாயோ?

தேவ: ராஜ்யவர்த்தனனும் ஹர்ஷனும் ஹூணர்களோடு போராடப் போயிருக்கிறார்கள். இப்பொழுது கன்னோசிக்கு உதவி கிடையாது.

சசா: சரிதான் ஆனால் நீ சொல்வது நம்பக்கூடியதாயில்லை. இருவரும் ராஜ்யத்தைவிட்டுப் போகமாட்டார்களே.

தேவ: இருவர்மட்டுமல்ல. சிம்ஹநாதன், பண்டி, குப்த சகோதரர்கள் எல்லோருமே போயிருக்கிறார்கள்.

சசா: அவர்களுக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறதா?

தேவ: இல்லை, முதலில் ராஜ்யவர்த்தனனும் சிம்ஹநாதனும் தான் போனார்கள். ராஜ்யவர்த்தனனிடமிருந்து ஒன்றும் செய்தியே வரவில்லை. அதனால் ஹர்ஷன் பின்தொடர்ந்திருக்கின்றான்.

சசா: அதெப்படிச் செய்தி கிடைக்காமல் போகும்?

தேவ: ராஜ்யவர்த்தனன் செய்தி அனுப்பிக் கொண்டுதான் இருந்தான்.

சசா: ஆனால்...நீ...?

தேவ: ஆம்

சசா: சபாஷ், தேவகுப்தா! உன் ராஜதந்திரம் விருத்தியடைந்துவிட்டது.

தேவ: எல்லாம் உன் சகவாசம்தான்.

சசா: ஆகவே, ஹர்ஷனும் போய்விட்டானு?......நல்ல சமயந் தான்.

தேவ: ஆனுல் கன்னேசியைத் தாக்குவதற்குக் காரணம் வேண்டுமே.

சசா: யுத்தத்திற்குக் காரணம் வேறு வேண்டுமா? உன்னுடைய குடிகளை வெளியேற்றினுனே அதற்காகப் படையெடு.

தேவ: நல்ல யோசனை நம் இருவருக்கும் பொதுவான காரணம்.

சசா: என்னையுமா இழுக்கிருய்?

தேவ: உன் உதவியில்லாமல் நான் என்ன செய்வேன்?

சசா: உதவி செய்ய மாட்டேனு? ஆனுல், கன்னேசி தனித்திருக்கும்போது பிரமாத உதவி வேண்டியதில்லை.

தேவ: இருந்தாலும்...

சசா: சமயத்தில் உதவி செய்வேன், பயப்படாதே.

## காட்சி 22

### கன்னேசி

[ராஜ்யஸ்ரீ படுத்து உறங்கிக்கொண் டிருக்கும் போது திடீரென 'ஓ'வென்று அலறி விழித்துக்கொள்ளுகிருள். தோழிகள், கிரஹவர்மன் முதலியோர் ஓடிவருகிருர்கள்.]

கிரஹ: ராஜ்யம்! என்ன? ஏன் கூவினுய்?

ராஜ்ய: [உடல் நடுங்க] ஐயோ! பயமாயிருக்கிறதே தெய்வமே!

கிரஹ: ராஜ்யம், இதென்ன! இதோபார். என்ன பயம்? இதோ நன்ருய் விழித்துக்கொள். என்ன கண்ணே, ஏதாவது சொப்பனங் கண்டாயா?

ராஜ்ய: [தூக்கம் தெளிந்து] ஆம்...பயங்கரமான சொப்பனம். ஹூணர்கள் நமது ராஜ்யத்தையும் தானேச்வரத்தையும் அழித்து எல்லோரையும் கொன்றதாக....

கிரஹ: சீ, என்ன பிரமை! வெறும் கனவு. ஹூணர்கள் ராஜ்யவர்த்தனனிடத்தில் படும்பாடு சொல்லி முடியாது. நீ அதே கவலையா யிருப்பதனுல்தான் இப்படி.

ராஜ்ய: ஒன்றும் தகவலே வராததால்......தெய்வமே கனவு பொய்யாகவே இருக்கட்டும்,

கிரஹ: கனவு மெய்யாகுமா? யுத்தகளத்திலிருந்து செய்தி அனுப்புவது ராஜதந்திர முறையல்ல. நீ வீணுகப் பயப்படாதே. கடவுளை வணங்கிவிட்டு நித்திரை செய்.

(பிரார்த்திக்கிருன்)

## காட்சி 23

### தானேச்வரம்

### அரண்மனை

[பிரபாகரவர்த்தனன் படுத்துக்கொண் டிருக்கிருன். இந்துமதி பாடுகிருள். பிரபாகரன் மெது வாய்த் தூங்க ஆரம்பிக்கிருன். அவன் தூங்கு வதைக்கண்டு, அருகில் விசிறிக்கொண்டிருந்த யசோமதி இந்துமதிக்குப் பாட்டை நிறுத்தும் படி சைகை செய்துவிட்டு அவளருகில் வரு கிருள்.]

யசோ: நல்லவேளை இன்ருவது தூக்கம் வந்ததே.

இந்து: அம்மணி, வைத்தியர் என்ன சொன்ஞர்?

யசோ: வைத்தியனுக்குக் கட்டுப்பட்டதா இந்த நோய்? ஹர்ஷன் போனதுதான் கவலை. இருவரும் அருகில் இல்லை. எப்படிச் சகிப்பார்?

இந்து: ஐயோ! இதென்ன சங்கடம்! இளவரசர்களை அனுப்பாமலும் இருக்க முடியவில்லை.

யசோ: அதனுலென்ன? நீ இங்கே இருக்கும்பொழுது, அவ்வளவு கவலையில்லை. உன்னைப் பார்த்தே அவர் ஆறுதலடைவார்.

இந்து: மகாராணி, ஹர்ஷரைச் சீக்கிரம் வரும்படி சொல்லியனுப்பினுல்?

யசோ: அவனுக்கு வீண் கவலை ஏற்படும், அவன் சீக்கிரம் வந்துவிடுவானே?

இந்து: அம்மணி, என்னையறியாமல்...ஏதோ பயமாயிருக்கிறது. எதற்கும் சீக்கிரம் வரச்சொல்லிச் செய்தி அனுப்பினுல்... இல்லாவிட்டால் அவரும் யுத்தத்தில் சேர்ந்துவிட்டால்?

யசோ: அந்தச் சந்தேகம் எனக்கும் ஏற்படுகிறது. ஆனுல் தூதர்களை அனுப்பக் கூடாதென்று ஹர்ஷன் சொல்லியிருக்கிருனே. எதிரிகள் தூதர்களை மறித்துவிடுவார்களென்று சொல்லவில்லையா?

இந்து: தூதர்கள் வேண்டியதில்லை. எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. நான் செய்தி அனுப்புகிறேன். இதோ வந்துவிட்டேன்.

(போகிருன்)

## காட்சி 24

### கன்னேசி

[கிரஹவர்மன் ஒரு கடிதத்தைப் படித்துக்கொண் டிருக்கிருன்.]

கிரஹ: என்ன துணிச்சல்! தேவகுப்தனுக்கு இவ்வளவு தைரியமா? அவன் மக்களை வெளியேற்றியதற்குத் தக்க சமாதானம் வேண்டுமாம்.

மந்திரி: வீண் வம்புக்கு வழி தேடுகிருன்.

கிரஹ: தேடட்டும் அவன் நாசத்தை. மந்திரி, எலியின் கூச்சலைக் கேட்டு பூனை பயப்படாது. எலியைத் தேடிவரும் என்று அந்த மாளவனுக்கு எழுதி அனுப்பு...ஆம். தானேச்வரத்திற்கு செய்தி அனுப்பவேண்டும். சேனுபதியை அழை.

மந்திரி: இருந்தாலும் நாம் அலக்ஷியமாய் இருக்கக்கூடாது.

கிரஹ: கூடாது. அரண்களைச் செப்பனிட்டுப் பார்த்துக் கொள்ளவேண்டும்.

மந்திரி: இந்த விஷயங்கள் அந்தரங்கமாக இருக்கட்டும். முக்கியமாக ராணிக்கு இதைப்பற்றி ஒன்றும் சொல்லவேண்டாம்.

மந்திரி: உத்தரவு.

(போகிருன்)

## காட்சி 25

### மலைச்சாரல்

[வாசலில் ஹர்ஷன். பண்டி வருகிருன் ஒரு பக்கத்தில் இரண்டு குதிரைகள் கட்டப்பட் டிருக்கின்றன.]

பண்டி: மலையில் பனி அதிகமா யிருக்கிறதாம். தூதன் குற்றுயிராய் வந்து சேர்ந்திருக்கிருன்,

ஹர்ஷ: ஆம். ராஜ்யவர்த்தனன்.

பண்டி: மலையுச்சியிலிருந்து நம்முடைய படை முகாம் தெரிகிறதாம். நமது கொடி கம்பீரமாய் பறந்துகொண் டிருக்கிறதாம் ஹூணர்களின் அடையாளமே தெரியவில்லையாம்.

ஹர்ஷ: ஆனல் நமது படைகள் வெற்றியடைந்திருக்க வேண்டும். மறுபக்கம் இறங்கமுடியாதபடி அவ்வளவு மோசமாகவா இருக்கிறது?

பண்டி: இந்தப் பக்கம் உச்சிக்குச் செல்வதே கஷ்டமாம். படைமுகாம் அடிவாரத்திலிருந்து மூன்று யோசனை தூரத்தி லிருக்கிறதாம். சைகையினுல்கூட செய்தி அனுப்புவது கஷ்டமாம்

ஹர்ஷ: இருந்தாலும் ஏறிப்போய்ப் பார்க்கவேண்டுமென்று எனக்குத் தோன்றுகிறது.

பண்டி: ஹர்ஷா, வேண்டாம். ஒருவிதமான கஷ்டத்திற் கும் ஆளாகாமல் திரும்பிவருவதாக மகாராணிக்கு வாக்குக் கொடுத்ததை மறந்துவிடாதே.

ஹர்ஷ: இவ்வளவு அருகில் வந்துமா நாம் ஒருவிதமான தக வலும் இல்லாமல் திரும்புவது?

பண்டி: இன்னும் சில வீரர்களை அனுப்புவோம். சாகத் துணிந்த நமது வீரர்களில் எத்தனையோ பேர் மலையைக்கடந்து போக ஆவலுள்ளவர்களாய் இருக்கிருர்கள்.

ஹர்ஷ: ஆம், சென்றுவந்த தூதன் பிரக்ஞை தெளிந்ததும், தீர விசாரித்து, தக்க தற்காப்புக்களுடன் வீரர்களை அனுப்ப வேண்டும்...மலையுச்சியில் இருக்கும் பனி எப்பொழுதும் உருகாது என்று நினைக்கிறேன்.

பண்டி: ஆம் இங்கே உயரம் அதிகம். கிழச் சிங்கத்தின் பிடரியைப்போல் படர்ந்திருக்கிறது பார் கடும் பனி.

ஹர்ஷ: இல்லை சத்தியத்தைப் போர்வையாகக் கொண்ட ஞானி நிஷ்டையிலிருப்பது போலத் தோன்றுகிறது...ஆம். ராஜ்ய வர்த்தனன் எப்படி மலையைக் கடந்திருப்பான்? வேறு ஏதாவது வழி இருக்குமோ?

பண்டி: ராஜ்யவர்த்தனன் போகிறபோது சரிவில் பனி கிடையாது. குளிர்காலம் தொடங்கவில்லை. ஹூணர்களை இப் பக்கத்திலிருந்தே துரத்திக்கொண்டு போயிருக்கவேண்டும். வழி யில் எலும்புக் கூடுகள் பனியால் புதைந்திருப்பதைப் பார்த்த தாகத் தூதன் சொல்லுகிருன்.

ஹர்ஷ: பார்த்தாயா பனியின் பரிவை, உயிர் போனபிறகு கூட உடலைப் பாதுகாக்கிறது. அதை அபாயமென்கிருயா?

பண்டி: ஆம், உயிர் போனபின்தான் உடலைக் காக்கும். இதில் பரிவென்ன?

ஹர்ஷ: இந்தப் பனியில்லாவிட்டால், எலும்புக் கூடுகள் கூறும் உண்மையை நாம் அறியமுடியுமா?

பண்டி: இந்தப் பனி இல்லாவிட்டால் நாம் அப்பொழுதே ராஜ்யவர்த்தனனைப் பார்த்திருப்போம்.

ஹர்ஷ: வாஸ்தவம். இருந்தாலும்...அதோ பார். பனி நிறைந்த அந்தச் சிகரத்தின் தோற்றத்தில் பயங்கரத்தைவிட அழகு நிறைந்த கம்பீரம்தானே தோன்றுகிறது.

பண்டி: கம்பீரமா? ராக்ஷஸத் தோற்றம். அலக்ஷியம் நிறைந்த அவலக்ஷணம்.

ஹர்ஷ: பண்டி, நீ மலையைக் கடக்கமுடியவில்லை என்ருல் அதைத் தூஷிக்கவேண்டுமா? அலக்ஷியமல்ல. சிருஷ்டியின் ரகசியத்தை அறிந்த ஞானத்தோற்றம். மனிதன் இழைக்கும் இடையூறுகள் ஒன்றுக்கும் கட்டுப்படாமல் மீறி நிற்கிறது பார்.

பண்டி: என்ன பயன்? இப்பொழுது நமக்கு இடையூறு ஏற்படுத்துகிறதே.

ஹர்ஷ: நாம்தானே அதை மிதித்து அதன்மேல் ஏறிக்கொண்டுபோக முயல்கிருேம். இந்தப் பர்வதங்கள் தானே நம் நாட்டின் சிறப்புக்குக் காவலாளிகள்போல் நிற்கின்றன. இமை கொட்டாமல் காக்கும் இந்த இமயமலைதான் நம் கலைக்கு அறிகுறி. அதற்கும் உயர்ந்தது ஒன்றுமில்லை பார். விண்ணுலகத்தின் ரகசியத்தையே எட்டிப்பார்க்கும் தோரணையில் அது ஓங்கி நிற்கிறது. சத்தியத்தைப் பறைசாற்றும் தூய வெண்கொடிச் சீலைபோல் பனி விளங்குகிறது பார்.

பண்டி: படையெடுத்து வருபவர்களுக்குமட்டும் வழி விடுகிறதே.

ஹர்ஷ: அதனுல் அதன் உயரம் குன்றிவிட்டதா? மரம் தன்னை வெட்ட வருபவனுக்கு நிழல் கொடுக்க மறுக்குமா? அப்படி வெட்டிக் களைத்துப்போனவனும் அந்த நிழலில்தானே இளைப்பாறுகிருன்.

பண்டி: என்னவோ, அந்தச் சிகரத்தைப் பார்க்கும்போது எனக்கு ஆத்திரம்தான் அதிகமாகிறது.

ஹர்ஷ: அதனுல் நமது மன நிம்மதிதான் கலைகிறது. நமது திறமையின் எல்லையை உணர்ந்து இயற்கையின் சக்திக்கு நாம் மரியாதை செய்யவேண்டும். பார், அந்த மேகங்கள் ஆகாயத்தில் தான் சஞ்சரிக்கின்றன. ஆனுல், அந்த மலைச்சிகரத்தின் அருகில் வந்ததும் அதன் அடிகளில் பணிந்து வணங்கிச் செல்கின்றன.

பண்டி: (ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டிருந்தவன்) ஹர்ஷா, அதோ பார், எவ்வளவு சிறிய மேகம் பனித்துளிபோல், பறந்து... இல்லையே பறவைபோல் இருக்கிறதே.

ஹர்ஷ: ஆம், பறவைதான் தனித்துப் பறந்துவருகிறதே... அதோ கீழே இறங்குகிறது, என்ன லாகவம்! என்ன பாய்ச்சல்... மறைந்துவிட்டது...இல்லை...இதோ நம் கூடாரத்தின் உச்சியில் உட்காருகிறது.

பண்டி: ஹர்ஷா! நமது அரண்மனைப் புரு மாதிரி இருக்கிறதே!

(புரு பறந்துவந்து ஹர்ஷன் கையில் உட்காருகிறது)

ஹர்ஷ : ஆம். எங்கே நம்மைத் தேடிவந்திருக்கிறது...ஏதோ செய்தி, பண்டி!

(புருவின் காலிலிருந்து கடிதத்தை அவிழ்த்துப் பார்க்கிறன்)

பண்டி : யார் இவ்வளவு முன் யோசனையுடன் புரு மூலம் செய்தி அனுப்பியிருப்பார்கள்.

ஹர்ஷ : (பரபரப்புடன்) இந்துமதி...

பண்டி : இதைக்கேள். 'சக்கரவர்த்தியின் தேகநிலை சரியாக இல்லை. சீக்கிரம் காரியத்தை முடித்துக்கொண்டு வாருங்கள்.'

பண்டி : இந்துமதியா? நீ யுத்தத்தில் சேர்ந்துவிடுவாயோ என்று பயந்து எழுதியிருப்பாள்.

ஹர்ஷ : இல்லை, பண்டி. சக்கரவர்த்தியைப்பற்றி எனக்கே கவலை. இன்று முழுவதும் என் மனமே சரியாயில்லை. அருகில் ஒருவரும் இல்லாததே அவருடைய தேக அசௌக்கியத்திற்குக் காரணம். நாம் திரும்பிப்போக வேண்டியதுதான்.

பண்டி : வந்த காரியம்?

ஹர்ஷ : தூதன் மூலம் நாம் அறிந்ததைத்தான் சொல்ல வேண்டும். இதோ இந்தப் புருவின்மூலமே ராஜாவுக்கும் செய்தி அனுப்புவோம். மலைகடந்து செல்லும் வீரர்களை வரச்சொல்.

(பண்டி போகிறன். ஹர்ஷன் எழுது கிறன். பண்டியும் வீரர்களும் வந்ததும்)

ஹர்ஷ : ராஜாவின் முகாமை நிச்சயமாய் அடைவீர்களா?

வீரர்கள் : எங்கள் உடலில் உயிருள்ளவரையில் அதே முயற்சிதான் மகாராஜ்.

ஹர்ஷ : உங்களுக்கு வெற்றியுண்டாகட்டும். இதோ இந்தப் புருவைக் கூடக்கொண்டு செல்லுங்கள். உச்சியை அடைந்ததும் மறுபக்கம் இறங்குவதற்குமுன் இதை முகாம் நோக்கிப் பறக்க விடுங்கள்.

வீரர் : அப்படியே மகாராஜ்.

ஹர்ஷ : ஜாக்கிரதை. புருவுக்குப் போகவேண்டிய மார்க்கம் நன்ருய்த் தெரியவேண்டும். பண்டி, நாம் புறப்பட ஏற்பாடு செய். சீக்கிரம் போய்ச் சேரவேண்டும்.

பண்டி : இதோ புரு வந்ததுபோல் பறந்து செல்வோம்.

## காட்சி 26

### கன்னேசி

**கிரஹவர்மனும், ராஜ்யஸ்ரீயும்**

ராஜ்ய: என்ன திடீரென்று அவ்வளவு வேலை? எப்பொழுதும் ஏதாவது யோசித்துக் கொண்டிருக்கிறீர்களே.

கிரஹ: ஒன்றுமில்லை. அரசியல் வேலைதான்.

ராஜ்ய: எங்கே பார்த்தாலும் பரபரப்பாயிருக்கிறது. சேனைகள் எல்லாம் எல்லைக்குப் புறப்பட்டுவிட்டதாகச் சொல்லுகிருர்களே.

கிரஹ: வழக்கம்போல் சேனைகள் இடம் மாறுகின்றன. அதைப்பற்றி நீ ஏன் கவலைப்படுகிருய்?

ராஜ்ய: இதையெல்லாம் கண்டு எனக்குப் பயமாகவே இருக்கிறது. அடிக்கடி துர்ச்சகுனங்கள் ஏற்படுகின்றன.

கிரஹ: வீண் பிரமை.

ராஜ்ய: தானேசுவரத்திலிருந்து ஒரு செய்தியும் வரவில்லையா?

கிரஹ: இன்று ஏதாவது வருமென்று எதிர்பார்க்கிறேன்.

ராஜ்ய: ஏனே என் மனம் ஒரு நிலையில் இல்லாது தவிக்கிறது.

கிரஹ: வீண் கலவரத்திற்கு இடங்கொடுக்காதே. கடவுளை நினைத்துத் தைரியமாயிரு, மனச்சாந்தி கிடைக்கும். இதோ வந்துவிட்டேன்.

(போகிருன்)

(ராஜ்யஸ்ரீ கடவுளைப் பிரார்த்திக்கிருள்)

## காட்சி 27

### தானேசுவரம்

[பிரபாகரவர்த்தனன் படுக்கையின் அருகில் யசோமதி. இந்துமதி விசிறிக்கொண்டிருக்கிருள்; பண்டி பின் தொடர ஹர்ஷன் வருகிருன்)

ஹர்ஷ: அம்மா! அப்பா!

(படுக்கையருகில் ஓடுகிருன்)

யசோ: உஸ்! தூங்குகிருர்!

ஹர்ஷ: அம்மா! என்ன? எப்படி இருக்கிறது?

யசோ: உனக்குச் சமாசாரம் அனுப்பியதிலிருந்து கொஞ்சம் அதிகமாய்விட்டது. அடிக்கடி, உன்னையும் ராஜாவையும், ராஜ்யத்தையும் பற்றியே பிதற்றுகிறார்.

ஹர்ஷ: ரஸாயனன் என்ன சொல்லுகிறான்?

யசோ: ஒன்றுமே சரியாகச் சொல்லவில்லை. இப்பொழுது கூட மருந்து கொடுத்துவிட்டுப் போனான்.

இந்து: மகாராணி, மூன்று நாளாக நீங்கள் தூங்கவில்லையே. கொஞ்சம் சிரமபரிகாரம் செய்துக்கொள்ளக்கூடாதா?

யசோ: கண்ணே இந்து! நீயும்தானே என்னோடு கஷ்டப் படுகிறாய். எனக்கு என்ன சிரமம்? நீ போய் இளைப்பாறு.

ஹர்ஷ: அம்மா, நீங்கள் இருவரும் போய்க் கொஞ்சம் நித்திரை செய்யுங்கள். அப்பா எழுந்ததும் நான் சொல்லியனுப்புகிறேன். போ, இந்து, நான் இருக்கிறேனே இங்கே. என்ன பயம்? அம்மா!

(இந்துமதியும், யசோமதியும் போகிறார்கள்)

## காட்சி 28

[யசோமதி பிரார்த்தித்துக்கொண் டிருக்கிறாள். இந்துமதி அழுதுகொண்டே ஓடிவருகிறாள்.]

யசோ: (அவளைத் தழுவிக்கொண்டு) இந்து! என்ன இது? ஏன் இப்படி அழுகை...?

இந்து: ஐயோ அம்மணீ! ரஸாயனன் தற்கொலை செய்து கொண்டுவிட்டானாம்...

யசோ: என்ன, நமது வைத்தியனா! ஏன்? சக்கரவர்த்திக்கு மருந்து கொடுக்க...

இந்து: அம்மா...சக்கரவர்த்தியைக் காப்பாற்ற முடியாதென்று தெரிந்து...

யசோ: (திடுக்கிட்டு) ஐயோ தெய்வமே! இந்து, இது உண்மையா?

இந்து: ஐயோ, சக்கரவர்த்தியை இனி யார் காப்பாற்றுவார்கள்?

யசோ: (கடவுளை நினைத்து) தேவி! உன் எச்சரிக்கைக்கு நன்றி செலுத்துகிறேன். இந்து...சீக்கிரம் எனக்கு அக்கினி குண்டம் தயார் செய்யச் சொல்.

இந்து: ஐயோ, இதென்ன கோலம்! அம்மா, சக்ரவர்த்தி உயிருடன்தானே இருக்கிறார். விபரீதமாய்ப் பேசுகிறீர்களே.

யசோ: அப்படியல்ல இந்து. நான் மாங்கல்யமிழக்காமல் சக்ரவர்த்தியுடன் சேர்வதற்குக் கடவுள் அனுப்பிய எச்சரிக்கை இது. துக்கத்திற்கு இது சமயமல்ல. ஒரு நிமிஷங்கூடத் தாமதிக்கக்கூடாது.

இந்து: ஐயோ, வேண்டாம்...வேண்டாம்...

(யசோமதி போகிருள், இந்துமதி அலறிக்கொண்டு ஓடுகிருள்)

## காட்சி 29

[ஹர்ஷன் படுக்கையருகில் நின்றுகொண்டிருக்கிருன். பிரபாகர வர்த்தனன் மெல்லக் கண் விழிக்கிருன்.]

ஹர்ஷ: அப்பா!

பிரபா: ராஜா!

ஹர்ஷ: அப்பா, ராஜா வருகிருன். நான் ஹர்ஷன்.

பிரபா: ஹர்ஷன்...ஹர்ஷா, ராஜ்யம் எங்கே...?

ஹர்ஷ: (கண்களைத் துடைத்துக்கொண்டு) அப்பா, ராஜ்யமும் வருகிருள். உங்களுக்கு எப்படி இருக்கிறது?

பிரபா: ஹர்ஷா...என்...உயிர்...

ஹர்ஷ: அப்பா, ஒன்றுமில்லை. கவலைப்படாதீர்கள். பண்டி! ரஸாயனன் எங்கே? மருந்து கொடுக்கவேண்டுமோ என்னவோ?

(விம்மி அழுதுகொண்டு இந்துமதி வருகிருள்)

பிரபா: ஹர்ஷா, என் கண்ணே, ரஸாயனன் என்ன செய்வான்? என் கிட்ட வா. அது யார்?...ராஜ்யம்!

ஹர்ஷ: அப்பா, இந்துமதி.

பிரபா: குழந்தாய்! இங்கே வா. அழாதே.

இந்து: ஐயோ, மகாராணி...

ஹர்ஷ: பண்டி, அம்மாவை அழைத்துவா. (பண்டி ஓடுகிருன்.)

பிரபா: ஹர்ஷா, இந்துமதி, இங்கே வாருங்கள். (அவர்கள் கைகளைப் பிடித்துக்கொண்டு) குழந்தைகளே துக்கப் படாதீர்கள். ராஜாவும், ராஜ்யமும் இல்லை......உங்களையாவது பார்க்கக் கொடுத்துவைத்தேனே.

ஹர்ஷ: (துக்கத்துடன்) அப்பா, அவர்கள் வந்துவிடுவார்கள். ராஜா வெற்றியுடன் வருகிருன்.

(இந்துமதி தேம்பி அழுகிருள்)

பிரபா: இந்துமதி, அழாதே. ஹர்ஷா, இந்துமதியைக் காப்பாற்று, ராஜாவையும் ராஜ்யத்தையும் தேற்று—வீணுகத் துக்கப்படவேண்டாம். நமது குடிகளைக் காப்பாற்று. நம் வம்சத்தின் கீர்த்தியை நிலைநாட்டு. யசோமதி...

இந்து: (அலறிக்கொண்டு) மகாராணி...அக்னி...

ஹர்ஷ: அப்பா!

## காட்சி 30

### கன்னேசி

(ராஜ்யஸ்ரீ தேவியைப் பிரார்த்திக்கிருள்)

ராஜ்ய: தேவி! என் சஞ்சலத்தைத் தவிர்க்கமாட்டாயா? என் குடிகளுக்குத் தீங்கு வராமல் காப்பாற்று. என் தாய் தந்தையர்களை ......

[ராஜ்யஸ்ரீயின் கையிலிருந்து புஷ்பத்தட்டுத் தடாலென்று விழுகிறது. தேவியின் அருகிலிருக்கும் தீபத்தின் ஜோதி திடீரென்று அணைகிறது. ராஜ்யஸ்ரீ பயந்து அலறுகிருள். கிரஹவர்மன் ஓடி வருகிருன்.]

## காட்சி 31

### தானேச்வரம்

[ஹர்ஷன் துயரக்கடலில் ஆழ்ந்திருக்கிருன். ராஜ்யவர்த்தனன் வருகிருன்.]

ஹர்ஷ: அண்ணு!

ராஜ். வ.: ஹர்ஷா! ஐயோ நான் பாவி! நான் தாய் தந்தையரைக் கடைசியாகப் பார்க்கக் கொடுத்துவைக்கவில்லையே! அப்பா! அப்பா!

(அலறுகிருன்)

ஹர்ஷ: (அடக்கமுடியாத துக்கத்துடன்) அண்ணு! அண்ணு!, வேண்டாம்.

ராஜ். வ.: ஹர்ஷா, அப்பா கடைசியில் என்ன சொன்ஞர்? அவர் இறந்ததைப் பார்க்க எப்படியடா சகித்தாய்! ஐயோ, அம்மாவும் போய்விட்டாளா! அம்மா! உன்னையும் தரிசிக்கமுடியாத அவ்வளவு பாவியா நான். ஐயோ! எனக்காகக் கொஞ்சம் காத்திருக்கக் கூடாதா அம்மா!

ஹர்ஷ: அண்ணு! அப்பா இறந்தபின் அம்மா உயிருடன் இருப்பாளா! அம்மா மாங்கல்யத்துடன் போனது நம் அதிருஷ்டம்.

ராஜ். வ.: அதிருஷ்டம்! இதோ பெற்றோர் இருவரையும் இழந்தோம். என்ன அதிருஷ்டம்! ஹர்ஷா. இனி உயிர்வாழ்ந்து என்ன பயன்?

ஹர்ஷ: அண்ணு! நீகூட இப்படிப் பேசலாமா? ராஜ்யத்தை ஆளவேண்டாமா? ராஜ்யஸ்ரீயைக் காப்பாற்றவேண்டாமா?

ராஜ். வ.: ஹர்ஷா. அருமை ராஜ்யஸ்ரீ இதை எப்படிச் சகிப்பாள்! இந்தக் கடும் செய்தியை கேட்டதும் அவள் உயிர் விட்டு விடுவாளே!

ஹர்ஷ: அண்ணு! அதை நினைக்கத்தான் பயமாய் இருக்கிறது. பண்டியை அனுப்பி யிருக்கிறேன். ராஜ்யஸ்ரீயையும் கிரஹவர்மனையும் சீக்கிரம் எதிர்பார்க்கிறேன்.

ராஜ். வ.: என்ன கோலம்! தாயும் தந்தையும் இல்லாத இந்தப் பாழும் இடத்தைப் பார்க்கவா அவள் வருகிறுள்? அவளை எப்படியடா தேற்றப்போகிறும்?

(இருவரும் துக்கம் தாங்கமுடியாமல் வருந்து கிறுர்கள். மந்திரி அவந்தி, மாதவன் முதலியோர் வருகிறுர்கள்.)

அவந்தி: அரசே! இப்படித் துக்கப்படலாமா? நடந்தது நடந்துவிட்டது. மேல் நடக்கவேண்டிய காரியங்கள் எவ்வளவோ இருக்கின்றனவே.

ராஜ். வ.: அவந்தி, துக்கம் சகிக்க முடியவில்லையே.

அவ: என்ன செய்வது. எல்லாம் இறைவன் செயல். ஹூணர்களை முறியடித்து வெற்றியுடன் திரும்பிவந்த தங்களுக்கு இவ்வளவு துக்கம் ஏற்பட்டது நமது குடிகளின் துரதிருஷ்டம். பதினைந்து நாட்களாய் நம் நாடு அரசனில்லாமல் வாடுகிறது. துக்கத்தைத் தவிர்த்துத் தாங்கள் முடிசூட்டிக்கொள்ள வேண்டும்.

ராஜ். வ.: முடியா, பாவியாகிய எனக்கா?

அவ: அரசே, சக்ரவர்த்தி காலமானதுமுதல் குடிகள் இயற்கையாக உங்களையே சக்ரவர்த்தியாக ஏற்றுக்கொண்டு விட்டார்கள். இனி மகுடாபிஷேகம் செய்வது தான்......

ராஜ். வ.: அவந்தி, என் தந்தை அமர்ந்திருந்த சிம்மாசனத்தில் நான் உட்காரச் சகியேன்.

அவ: அரசே, நாட்டுக்கு நாயகன் வேண்டாமா?

ராஜ். வா.: ஹர்ஷனுக்கு முடிசூட்டுங்கள்.

ஹர்ஷ: அண்ணு! எவ்வளவு பெரிய பொறுப்பை என்மீது சுமத்துகிறுய். மூத்தவன் நீயிருக்க......

ராஜ். வ.: ஹர்ஷா, எனக்கு ஒன்றிலும் விருப்பமில்லை. வாழ்க்கையைத் துறந்து பிக்ஷுவாக சேவைசெய்தால்தான் என் மனம் நிம்மதியடையும்.

ஹர்ஷ: அண்ணு, இன்னெருமுறை அப்படிச் சொல்லாதே, தானேச்வராதிபதி பிக்ஷுவாவதா? நம் தங்கை ராஜ்யஸ்ரீயை உத்தேசித்தாவது கிரீடத்தை ஒப்புக்கொள்.

ராஜ். வ.: ஹர்ஷா, என்னைக் காட்டிலும் நீ திறமையுள்ள வன். நீ ராஜ்யத்தை ஒப்புக்கொள். நான் உனக்குச் சேவை செய்கிறேன்.

ஹர்ஷ: அண்ணு, ஏற்கனவே துயரத்தில் வருந்தும் நமது குடிகளை நீ கைவிடக் கூடாது. அனுபவமில்லாத என்னிடத்தில் அவர்களை ஒப்படைக்காதே.

அவ: அரசே, இளவரசர் சொல்வதுபோல் குடிகளின் துய ரத்தை நாம் மறந்துவிடக் கூடாது. அரசர்களுக்குத் தனிப்பட்ட சுகமோ துக்கமோ கிடையாது. எல்லாம் குடிகளின் சுகதுக்கத் தைப் பொறுத்ததுதான்.

மாதவ: வர்த்தனகுமாரா, இளம் வயதுமுதல் பழகிய உன் னைத்தான் நம்பியிருக்கிறோம். நீ கைவிட்டுவிடாதே. இவ்வளவு துயரத்தைத் தாங்கிய உனக்கு தானேச்வர கிரீடத்தைத் தாங்கு வது அசாத்தியமல்ல.

ஹர்ஷ: ஆம், அண்ணு! தாமதியாமல் ஒப்புக்கொள்.

ராஜ். வ.: மாதவ, உன்போன்ற நண்பர்கள், அவந்திபோன்ற அமைச்சர்கள் இவர்களுடைய உதவியால்தான் நான் ராஜ்யபாரம் வகிக்கவேண்டும். கடவுள் அருள் புரியட்டும்.

## காட்சி 32

### படைவீடு

[தேவகுப்தன், சேனுதிபதி ஓடிவருகிருன்]

சேனு: அரசே, பண்டி தப்பி ஓடிவிட்டான்.

தேவ: (கோபத்துடன்) மடையர்கள்! தானேச்வரத்திற்குத் தகவல் தெரிவிக்கக் கூடாது என்று எவ்வளவோ ஜாக்கிரதையா யிருந்தும் தவறிவிட்டீர்களா!

சேனு: நாலாபக்கமும் தேடும்படி படைவீரர்களை அனுப்பி யிருக்கிறேன்.

தேவ: முட்டாள்! காற்றைப் பிடிக்க முயலும் கபோதி! இனி பண்டியைப் பிடிப்பதேது?

சேஞ : ஆனல் தானேச்வரத்திலிருந்து படைகள் வந்து விடுமே.

தேவ : ஆம். கடைசியில் காரியம் முழுவதும் கெட்டு விடப் போகிறது. உஜ்ஜயினியிலிருக்கும் சசாங்கன் படைக்குச் சொல்லி யனுப்பு சீக்கிரம். மௌகரி மாண்டதைக் கேட்டு ராஜ்யவர்த் தனன் நம்மை அழித்துவிடுவான். நல்ல வேளையாகப் பிரபாகரன் இறந்த துக்கத்தில் இருக்கிருன். அவன் வரத் தாமதமாகும். கன் ஞேசி ராணியும் தப்பிவிடப்போகிருள். ஜாக்கிரதை.

சேஞ : அவளுடைய காலில் விலங்கிட்டு வைத்திருக்கிறேம். கிரஹவர்மன் இறந்தது அவளுக்குத் தெரியாது.

தேவ : நல்லவேளை. தெரியவேண்டாம். தெரிந்தால் தானும் இறந்து விடுவாள். பெண் புலியைப்போன்ற அவளை உஜ்ஜயி னிக்குக் கொண்டுபோக வேண்டும்.

## காட்சி 33

### தானேச்வரம்

[சக்ரவர்த்தி ராஜவர்த்தனன் சிம்மாசனத்தில் வீற்றிருக்கிருன். அருகில் ஹர்ஷன் நிற்கிருன். அவந்தி, குப்தர்கள் முதலியோர் சுற்றி நிற் கின்றனர்.]

(பண்டி தன் செய்தியைச் சொல்லியதும்...)

ராஜ. வ. : யார்! கிரஹவர்மஞ! மௌகரி திலகமா? இறந்து போய்விட்டான?

ஹர்ஷ : என்ன? ராஜ்யஸ்ரீ மாங்கல்யமிழந்து விட்டாளா! அண்ண!

(சபையில் பரபரப்பு)

ராஜ். வ.: (சிம்மாஸனத்திலிருந்து இறங்கிவந்து) பண்டி! உண்மை யாகவா?

பண்டி : ஐயோ! அரசே! நான் இந்தச் செய்தியைத்தான கொண்டுவர வேண்டும்? நானே பார்த்தேன். போரில் புறங்காட் டாது சண்டைசெய்து உயிர் துறந்தார். என்னைச் சிறைப்படுத்தி விட்டார்கள். தப்பியோடி வந்தேன்.

ராஜ். வ. : மாளவனுக்கா இவ்வளவு துணிச்சல்?

ஹர்ஷ : பண்டி, ராஜ்யம் என்னவானுள்?

பண்டி : ஐயோ, ராணியை விலங்கிட்டுச்·சிறையிலடைத்து... (அழுகிருன்)

ஹர்ஷ : (அழுகையும் கோபமும் தோன்ற) ஆஹா! ராஜ்யத்தைச் சிறைப்படுத்தினனா? அண்ணா, இதோ போய் அவனை இரண்டு துண்டாக வெட்டி வருகிறேன். ஐயோ ராஜ்யம்...

ராஜ். வ.: ஹர்ஷா, பதறாதே. நான் சென்று பழிக்குப் பழி வாங்கிவருகிறேன்.

ஹர்ஷ , அண்ணா! எலியைக் கொல்ல யானை போவதா?

ராஜ். வ.: அப்படியல்ல. ராஜ்யஸ்ரீயை மீட்கவேண்டும். நீ இங்கே நாட்டைப் பார்த்துக்கொள்.

ஹர்ஷ : (துக்கத்துடன்) அண்ணா! நானும் கூட வர அனுமதி கொடுங்கள்.

ராஜ். வ.: ஹர்ஷா, துக்கத்துக்கும் தர்க்கத்திற்கும் இது சமயமல்ல. நாயகனில்லாமல் நாட்டைவிட்டு இருவரும் போகக் கூடாது. கேவலம் தேவகுப்தனைக் தாக்க நாம் இருவருமா போக வேண்டும்? தவளைக்குச் சர்ப்பத்தை எதிர்க்கத் துணிச்சலா! மாளவத்தை மண்ணாக்கி வருகிறேன், பண்டி, படைகளைத் தயார்செய். அவந்தி, ஹர்ஷனே அரசன். நாட்டைக் கவனித் துக்கொள்.

ஹர்ஷ : அண்ணா! முதலில் ராஜ்யஸ்ரீயை மீட்டு வா.

## காட்சி 34

[ஹர்ஷன் தனியே உட்கார்ந்துகொண் டிருக் கிறான். இந்துமதி வருகிறாள்]

இந்து : அரசே! நீங்கள் இப்படி எப்பொழுதும் துக்கப் பட்டுக்கொண் டிருந்தால், நாங்கள் என்ன செய்வது?

ஹர்ஷ : இந்துமதி, என்னை அரசே என்று அழைக்காதே. என்ன அரசு? துக்கமும் கஷ்டமும் நிறைந்த ராஜபதவியை எனக்கு வகிக்கவே தெரியவில்லை.

இந்து : ராஜ்யபதவிக்கு துக்கம் ஏது, சுகம் ஏது? உங்களுக்கு ஏற்பட்ட துயரத்தை அந்தப் பதவி தான் தவிர்க்கவேண்டும். உங்களை அரசே என்று சொல்லாமல் நான் வேறு என்ன செய்வேன்?

ஹர்ஷ : இந்துமதி, ராஜ்யஸ்ரீ போனதுமுதல் உன்னை அவள் போலவே பாவித்துவருகிறேன். இப்பொழுது அவள் மாங்கல்ய மிழந்து வருகிறாள். நான் போகவும் முடியவில்லை. நீ என்னை அண்ணா என்று கூப்பிடக் கூடாதா?

இந்து : (திடுக்கிட்டு) என்ன? சக்ரவர்த்தி! உங்களையா! அண்ணாவென்று! என்னைச் சகோதரி யென்று பாவித்து வந்தீர்?

ஹர்ஷ : ஏன் ஆச்சரியப்படுகிறாய்? நாம் ஒன்றாக வளர்ந்த வர்கள் தாம். நான் சக்ரவர்த்தியாய்விட்டதனால் நமது அன்பு

போய்விடுமா? இந்துமதி, ஏன் கலங்குகிருய்? என்னைத் தேற்றிக் கொண்டிருந்த உனக்கு என்ன துக்கம்?

(மாதவகுப்தன் வருகிருன்)

மாதவ: அரசே! சக்ரவர்த்தி புறப்பட்டு விட்டார்.

ஹர்ஷ: இதோ! இந்துமதி, மாளவப்புழுவை ஒழிக்கப் போகும் புலியை அனுப்பிவிட்டு வருகிறேன்......மாதவா! இந்துமதியைத் தேற்று.

(போகிருன்)

மாதவ: இந்துமதி! இதென்ன? சக்கரவர்த்திக்கு ஏற்கெனவே துக்கம். நீ அதை அதிகரிக்கிருயா?

இந்து: (தேம்பியழுகிருள்) அண்ணு! நான் மதியிழந்து நடந்துவிட்டேன்.

மாதவ: வழக்கம்தானே. இப்பொழுது என்ன அதற்கு? தாங்கமுடியாத துயரத்தை ராஜகுமாரர்கள் சகிக்கும்போது உனக்கென்ன குறை?

இந்து: வீண் நம்பிக்கை கொண்டிருந்தேன்.

மாதவ: என்ன உளறுகிருய்? பைத்தியம் பிடித்துவிட்டதா?

இந்து: என்னைச் சகோதரியாகத்தான் பாவிப்பதாக அரசர் இப்பொழுது சொன்ஞர்.

மாதவ: பின் எப்படி......ஓ! தானேச்வர ராணியாகலாமென்று நினைத்தாயோ? பைத்தியமே அரண்மனையில் தர்மத்திற்கு வளர்ந்த உனக்கு வேண்டியதுதான். தங்கையின் நிலைமையைக் குறித்து வருந்தும் ஹர்ஷனுக்கு நல்ல ஆறுதல்தான் நீ இருப்பது. அப்படி உனக்குத் தைரிய மிருந்தால் ராஜ்யஸ்ரீயை மீட்டு ஹர்ஷனை ஆச்சரியப்படச் செய். கொம்புத் தேனுக்கு ஆசைப் படாதே.

(போகிருன்)

[இந்துமதி ஸ்தம்பித்து நிற்கிருள். அவள் முகம் யோசனையால் மலருகிறது.]

இந்து: ராஜ்யஸ்ரீயை மீட்டு........அண்ணு! என்னைப் பரிகாசம் செய்தாய். அதுகூடச் செய்யாவிட்டால் என் உயிர் இருந்து என்ன பயன்? சக்கரவர்த்தி இப்பொழுதுதானே புறப்படுகிருர்.

(போகிருள்)

## காட்சி 35

### படை முகாம்

### ராஜ்யவர்த்தனன், பண்டி

பண்டி: அரசே, எங்கே தேடியும் ராணியைக் காணவில்லை. சிறைப்பட்ட மாளவர்கள், ராணி தப்பி ஓடிவிட்டதாகச் சொல்கிறார்கள்.

ராஜ். வ.: தேவகுப்தனை நாய்போல் அடித்துக் கொன்றாய் விட்டது. இனி ராஜ்யத்துக்கு......அவள் இன்னும் உயிருடனிருந்தால்......ஒன்றும் ஆபத்து நேராது. கன்னோசியும் தானேச்வரமும் ஒன்று என அறிக்கைவிடுத்தாயா?

பண்டி: ஆம், மாளவத்தையும் ஒரு மாகாணமாகச் சேர்த்திருக்கிறேன். மாளவப் பிரபுக்கள் கப்பத்துடன் வாசலில் காத்துக்கொண்டிருக்கிறார்கள்.

ராஜ். வ.: சசாங்கனுக்கு விடுத்த அறைகூவல் என்னவாயிற்று?

பண்டி: கௌடதூதன் காணிக்கையுடன் வந்திருக்கிறான்... இதோ!

ராஜ். வ.: தூதா, உன் அரசனுக்கு இப்பொழுதாவது புத்தி வந்ததா?

தூதன்: பரமபட்டாரக தானேச்வர சக்ரவர்த்தி! தங்களுடைய எச்சரிக்கையில் கண்டபடி எங்கள் அரசன் தங்கள் ஆணைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறார். பௌத்தர்களுடைய கஷ்டங்களை நீக்கிச் சிவபக்தர்களுக்குச் சரியான உரிமைகள் கொடுக்க உடன்படுகிறார். உங்களைப் பேரிறைவனாக வரவேற்கக் காத்துக்கொண்டிருக்கிறார்.

ராஜ். வ.: சரி, போ.

பண்டி: அரசே! கேவலம் சசாங்கன் உறைவிடத்திற்கு நீங்கள் போவதா! அவன் துரோகி......

ராஜ். வ.: மாளவன் பட்டபாட்டிற்குப் பிறகு துரோகம் செய்ய அவனுக்குத் தைரியமேது? அவன் தானேச்வரத்தின் மேன்மையை நேரில் அங்கீகரிக்கும் காட்சியை நீ பார்க்க வேண்டாமா? அவன் முகாமெடுத்துக் கௌடம் போவதற்குள், போர்க்களத்திலேயே அவனைச் சந்திக்கவேண்டும். தோல்வியின் பலனை அவன் அனுபவிக்கட்டும்.

## காட்சி 36

### தானேச்வரம்

### ஹர்ஷனும் மாதவகுப்தனும்

ஹர்ஷ: மாதவா, இன்னும் தெரியவில்லையா?

மாதவ: அரசே, நகரம் முழுவதும் தேடியாகிவிட்டது. அரண்மனைத் தோழிகள் இந்துமதி வெளியிற் சென்றதையே பார்க்கவில்லையென்று சொல்லுகிறார்கள்.

ஹர்ஷா: குமாரன் எங்கே?

மாதவ: துக்கத்துடன் உட்கார்ந்திருக்கிறான்.

ஹர்ஷ: பாவம்.

மாதவ: அரசே, உங்களுக்கு ஏற்பட்டதைவிட என்ன துயரம் எங்களுக்கு? உங்களுடைய சகோதரியின் நிலையை விடவா......மன்னிக்கவேண்டும்.

ஹர்ஷ: மாதவா, உங்கள் துக்கத்தைவிட எனக்கு அதிக துக்கம் இந்துமதி மறைந்த விஷயத்தில்தான். எனக்கு எவ்வளவோ ஆறுதலாக இருந்தாளே. அன்று ஏதோ வருத்தத்துடனிருந்தாள். என் துக்கத்தில் அதை நான் சரியாகக் கவனிக்கவில்லை. அவளுக்கு நேர்ந்த கஷ்டம் என்னவென்றுகூடத் தெரியவில்லையே.

மாதவ: பெண் தானே, எதையாவது நினைத்துக்கொண்டு கோபமாய் இருந்திருப்பாள். அந்தக் கோபத்தைக் காட்ட எங்கேயாவது போயிருப்பாள். மாயமாய் மறைந்திருக்க முடியாது.

ஹர்ஷ: மாதவா, எனக்கு அதிக வருத்தம் ஏற்படக் கூடாதென்று நீ இப்படிப் பேசுகிறாய். கோபமென்றாயே என்ன காரணமாயிருக்கும்?

(ஒரு படை வீரன் ஓடிவருகிறான்)

வீரன்: (மூச்சுத்திணற) அரசே, ஐயோ! சக்ரவர்த்தி...

ஹர்ஷ: (திடுக்கிட்டு) யாரது, என்ன? மாதவா, இவனைப் பிடித்துக்கொள். மூர்ச்சையாய் விடுவான்போல் இருக்கிறதே...

மாதவ: இதோ...என்னப்பா! இங்கே பார்! பயப்படாதே என்ன சொல்...அரசே, யுத்தகளத்திலிருந்து வந்திருக்கிறான்.

வீர: சக்ரவர்த்தியைச் சசாங்கன்...கொன்றுவிட்டான்.

ஹர்ஷ: யார்? ராஜாவையா? நடக்காத காரியம்!

வீர: (சமாளித்துக்கொண்டு) உண்மை. சக்ரவர்த்தி தேவகுப்தனைத் தோற்கடித்துக் கொன்றுவிட்டார். சசாங்கன் பணிவ

தாகப் பாசாங்கு செய்து சக்ரவர்த்தியைத் தன் விடுதிக்கு வர வழைத்துத் துரோகத்தினால் கொன்றுவிட்டான்.

மாதவ: பண்டி எங்கே?

வீர: சசாங்கன் படைகளைத் தொடர்ந்து சென்றிருக்கிறான்.

ஹர்ஷ: ஐயோ! ராஜா! ராஜா! தந்தையைப் பின் தொடர்ந்துவிட்டாயா? சண்டாளன் சசாங்கன் கத்திக்கா இறையானாய்?......அப்பா! ராஜ்யஸ்ரீ எங்கே?

வீரன்: ராணி சிறையிலிருந்து தப்பி ஓடிவிட்டார்கள். போனவிடம் தெரியவில்லை. அரசே! நான் பாதகன் இந்தச் செய்தியையா கொண்டுவர வேண்டும்?

ஹர்ஷ: உயிர் போகுமுன் அண்ணா ராஜ்யத்தைக் கூடப் பார்க்க வில்லையா? அண்ணா! என்னைத் தனியே விட்டுப் போய் விட்டாயே?

(துக்கிக்கிறான்)

வீர: (மாதவனை நோக்கி) பிரபுவே! எங்களுடன் வந்த உங்கள் தமையனையும் காணவில்லை.

மாதவ: குமாரனா? உங்களுடன் வரவில்லையே. இங்கே அரண்மனையில்தானே இருக்கிறான்.

வீர: என்ன ஆச்சரியம்! நாங்கள் யுத்தகளம் போகும் போது படையோடு சேர்ந்திருந்தாரே......ஒருவருடனும் பேச வில்லையே.

மாதவ: ஓகோ! சரிதான். சரி, நீ போய் இளைப்பாறு. அரசே, உங்களுக்கு ஆறுதல் கூற எனக்குச் சக்தி...

ஹர்ஷ: ஆறுதலா, மாதவா? அந்தச் சசாங்கனைக் கொன்ற பிறகுதான் எனக்கு ஆறுதல். படைகளைத் தயார் செய்......

மாதவ: அரசே, நமது தேசம்......நீங்கள் முடிசூட்டிக் கொண்டபின்......

ஹர்ஷ: என் அண்ணன் கொலைக்குப் பழிதீர்க்கும் வரையில் வேறு வேலை ஒன்றும் பார்க்கமாட்டேன். ராஜ்யஸ்ரீயையும் மீட்ட பிறகுதான்......ராஜ்யம், இந்துமதி இவர்களுக்காக நான் வாழ வேண்டியதவசியம். இல்லாவிட்டால் அப்பொழுதே என் உயிர் என் அண்ணனையும், பெற்றோரையும் தேடிப் போயிருக்கும்......நீ நாட்டைப் பார்த்துக்கொள்.

மாதவ: அரசே, நானும் வருகிறேன். எனக்கும் ஒரு கடமை இருக்கிறது. நானும் என் தங்கையைத் தேடவேண்டும்.

ஹர்ஷ: அதற்கு என்னோடு ஏன் வரவேண்டும்?

மாதவ: இந்துமதி மாறுவேஷம் அணிந்து சக்கரவர்த்தியின் படையுடன் போனதாகத் தெரிகிறது. இப்பொழுது வந்த வீரன் குமாரன் படையோடு இருந்ததாகச் சொல்லுகிருன். இந்துமதி ஆண்வேஷ மணிந்தால் குமாரன் போலத்தான் இருப்பாள். அவளைக் கன்ஞேசியில்தான் தேடவேண்டும்......

ஹர்ஷ: என்ன தைரியம்! இந்துமதி ஏன் போர்க்களம் போகவேண்டும்? சரி, நம் சகோதரிகள் இருவரையும் காணுமல் நாம் திரும்பக்கூடாது......போ. ஒரு க்ஷணமும் தாமதிக்காதே. புறப்பட ஏற்பாடு செய்.

(மாதவன் போகிருன்)

ஹர்ஷ: (துக்கத்தை அடக்க முடியாமல்) அண்ணு! நான்தான் பாவி. தந்தையை இழந்தேன், தாயை இழந்தேன்...உன்னையும் இழந்தேனே...ராஜ்யம்! என்ன கோலத்தில் உன்னைக் காணப் போகிறேன்.........அம்மா, ராஜ்யம், நீ உயிருடனிருக்கிருயா! உலக முழுவதும் உன்னைத் தேடுவேன்......ஐயோ! அண்ணு...... யாரையும் நம்பும் குணத்திஞல் அந்தத் துரோகியை நம்பி உயிர் இழந்தாயே. என்னைத் தனியாய் விட்டுப் போய்விட்டாயே. (பிரலாபிக்கிருன்.)

## காட்சி 37

### விந்தியமலைச்சாரல்

[ராஜ்யஸ்ரீ தனியாய் அழுதுகொண்டிருக்கிருள். இரு புத்த சந்நியாசிகள் வருகிருர்கள். ஒருவன் திவாகரமித்திரன்.]

தி. மி.: அம்மணி, தாங்கள் யார்? இந்தக் கொடும் வஞந்தரத்தில் வருந்திக்கொண்டிருக்கிறீர்களே? இங்கே அபாயம் அதிகம்.

ராஜ்ய: அந்த அபாயத்திஞல் என் உயிர் போகக்கூடாதா? ஐயா, நான் கன்ஞேசி ராணியாயிருந்து இப்பொழுது கைம்பெண்ணுக வாழ்கிறேன்.

தி. மி.: யார்? கிரஹவர்மன் பட்டமகிஷியா? அம்மா, தாங்கள் புஷ்பபூதி வம்சமல்லவா? பிரபாகரவர்த்தனன் புத்ரி...

ராஜ்ய: ஆம், என் தந்தை தாய் எல்லோரும் இறந்து விட்டார்கள். என் கணவன் கொலையுண்டிறந்தார். என்னை மீட்கவந்த என் தமையன் ராஜ்யவர்த்தனனும் கொல்லப்பட்டு, இறந்துவிட்டான். ஹர்ஷன் உயிருடனிருக்கிருனே வென்பது தெரியவில்லை. என் உயிர்மட்டும் போகமாட்டேன் என்கிறது.

தி. மி.: அம்மா, அப்படிச் சொல்லாதீர்கள். வீணுக உயிரை மாய்த்துக்கொள்ளக்கூடாது. நான் தானேச்வரத்துக்குச் செய்தி

அனுப்புகிறேன். தாங்கள் என் ஆசிரமத்தில் வந்து தங்கியிருக்க வேண்டுகிறேன்.

ராஜ்ய: வேண்டாம், சந்நியாசிகளான உங்களுக்கு என்னைக் காப்பாற்றும் பொறுப்பு எதற்கு? நான் இங்கேயே இருந்து உயிர் விடுகிறேன்.

தி. மி.: அம்மணீ! நாங்கள் வாழ்க்கையைத் துறந்த சந்நியாசிகள். ஆனால் சேவையைத் துறக்கவில்லை. அரசி! கிரஹவர்மன் என் பழைய நண்பன். உங்களைக் காப்பாற்றுவது என் கடமை. வாருங்கள் போகலாம்.

(போகிறார்கள்)

## காட்சி 38

### ஹர்ஷன் படை முகாம்

[மாதவகுப்தனும் ஹர்ஷனும். பண்டி வருகிறான்.]

ஹர்ஷ: பண்டி! எங்கிருந்து இவ்வளவு வேகமாய் வருகிறாய்?

பண்டி: அரசே! சசாங்கன் ஓடிவிட்டான். அவன் நாட்டின் மேல் படையெடுத்துப் போவதற்குமுன் மாளவத்தைச் சீர்ப்படுத்தலாமென்று போனேன்......நீங்களும் படையுடன் புறப்பட்டது கேட்டு ஓடிவந்தேன். அரசே! அந்தத் துரோகியை என் கையால் கொல்ல அனுமதி வேண்டும்.

ஹர்ஷ: அவசியமில்லை பண்டி, சசாங்கன் ராஜ்யவர்த்தனனிடம் மன்னிப்புக் கேட்கப் போய்விட்டான்.

மாதவ: பண்டி, இன்று காலைதான் கௌடத்திலிருந்து வந்தோம். சசாங்கன் உயிர்துறந்தான். இனி கௌடம் கிடையாது. தானேச்வரத்தின் ஒரு மூலைதான்.

பண்டி: அரசே! என் சந்தோஷத்திற்கு எல்லை காண முடியாது.

ஹர்ஷ: என்ன சந்தோஷம், பண்டி. சசாங்கன் இரத்தம் இன்னும் என் கத்தியில் நாறுகிறது. இப்படிப்பட்ட கோழைகளோடு நாம் போரிடவேண்டி இருக்கிறது. எலிகளைக் கொலை செய்யும் வேலை......

பண்டி: அரசே! எலிகளை ஒழிப்பதும் நம் கடமை தானே! மாளவம் முழுவதும் புஷ்பபூதி ஆதிக்கத்தை அளவிலாத ஆனந்தத்துடன் வரவேற்கிறார்கள். கௌடத்திலும், உஜ்ஜயினியிலும் தாங்கள் பரமபட்டாரகச் சக்கரவர்த்தியாகமுடிசூட்டிக்கொண்டு......

ஹர்ஷ: அதற்கு சந்தர்ப்பமில்லை, பண்டி. ராஜ்யஸ்ரீயைத் தேடவேண்டும். இந்துமதியையும் காணவில்லை.

பண்டி: இந்துமதியா......தானேச்வரத்திற்கு யார் அப்படி விரோதி?

மாதவ: விரோதி வரவில்லை. அவள் தானாகவே மறைந்து விட்டாள். ஏதோ காரணத்தை முன்னிட்டு உங்கள் படையுடன் மாறுவேஷத்தோடு புறப்பட்டாள். பிறகுதான் எங்களுக்குத் தெரியும்.

பண்டி: என்ன ஆச்சரியம்? எங்களோடு......போர்க்களத் திற்கா?

ஹர்ஷ: பண்டி, நீ கௌடம் சென்று நாட்டை ஒழுங்கு படுத்து. நானும் மாதவனும் ராஜ்யஸ்ரீயைத் தேடி வருகிறோம்.

பண்டி: அரசே, எங்கு போய்த் தேடுவீர்கள்? சக்ரவர்த்தி யாகிய நீங்களா...

(ஒரு வீரன் வருகிறான்)

வீரன்: மகாராஜா! காமரூபமன்னன் காணிக்கையுடன் வரு கிறார்.

[பாஸ்கரவர்மன் வருகிறான் பரிவாரங்களுடன்:
காணிக்கையைச் சமர்ப்பித்து]

பாஸ்க: மகாராஜாதிராஜ பரமபட்டாரக சீலாதித்ய சக்ர வர்த்தி! ஏழையை உங்கள் சேவகனாக ஒப்புக்கொள்ள வேண்டும்.

ஹர்ஷ: பாஸ்கரவர்மா, எழுந்திரு. உன்னைப்போன்ற நண் பர்கள் சேவை இருக்கும்வரை தானேச்வரத்திற்கு என்ன குறை?

பாஸ்க: அரசே, கன்னோசிச் சிறையிலிருந்து தப்பிய பெண் கள் சிலரை விந்தியமலைச்சாரலில் கண்டதாக சில பௌத்த சந்நி யாசிகள் சொன்னார்கள்......

ஹர்ஷ: ஆ! ராஜ்யஸ்ரீ சென்றவிடம்! மாதவா, விந்திய மலைக்குப் புறப்பட ஏற்பாடு செய். பாஸ்கரவர்மா, கூடிய சீக்கி ரம் உன் நாட்டிற்கு விஜயம் செய்கிறேன்.

மாதவ: அந்த முகூர்த்தத்திற்கு நாட்களை எண்ணிக்கொண் டிருப்பேன். உங்கள் காரியம் வெற்றியடையட்டும்.

## காட்சி 39

### விந்தியமலைச்சாரல்

[ஹர்ஷனும், மாதவனும்]

மாதவ: மலை சிறியதா யிருந்தாலும், மிகவும் அபாயகர மானதுபோல் இருக்கிறது. ராணியம்மாள் என்ன கஷ்டத்திற்கு உள்ளானார்களோ?

ஹர்ஷ: விந்தியம் சிறியதுதான். ஆனால். ஹிமாலயத்தின் கம்பீரமான ஆதிக்கத்தில் ஒரு பராக்கிரமசாலியான சிற்றரசனைப் போல, நாட்டின் மத்தியில் கண்கொட்டாது காவல்புரிகிறது. ராஜ்யஸ்ரீ இங்கே வந்தது உண்மையானால் நிச்சயமாய் அவளைக் காண்போம்.

மாதவ: இங்கே காட்டு மனிதர்கள் அதிகமாயிற்றே.

ஹர்ஷ: ஆம், நாகரிகமடைந்த நாம் அவர்களுக்கு இடம் கொடுக்கமாட்டோம். அவர்கள் இங்கே வந்து இயற்கையின் மடியில் வாழ்கிறார்கள். பாரததேவி அவர்களைத் தன் மார்பில் வைத்துக் காப்பாற்றுகிறாள்.

மாதவ: அவர்களால் அபாயம் நேரிடாதா?

ஹர்ஷ: நம்மால் அவர்களுக்கு அபாயம் நேரிடாமல் இருந்தால் போதும். புத்த சந்நியாசிகள் தங்களுடைய தபஸுக்கு இம் மலைக்கு வருகிறார்களென்றால், இதன் சுற்றுணர்ச்சியையும் இங்கே வசிப்பவர்களின் குணத்தையும் நாம் உணரலாமே......மாதவா! அது என்ன, குரல் ஏதோ கானம்......

மாதவ: எனக்கொன்றும் கேட்கவில்லையே!

ஹர்ஷ: இரு! ஆம், இந்துமதியின் குரல்...

மாதவ: (திடுக்கிட்டு) அரசே, இது என்ன பிரமை! இந்துமதியைச் சீக்கிரம் கண்டுபிடித்து விடுவோம். சற்றுத் தைரியமாயிருங்கள்.

ஹர்ஷ: மாதவா, பிரமையல்ல, உண்மை. நான் போய்ப் பார்த்துவருகிறேன்.

மாதவ: அரசே, அது மிகவும் அபாயகரமான வழி...... வேண்டாம்.

(ஹர்ஷன் ஓடுகிறான்: மாதவன் பின்தொடருகிறான்)

## காட்சி 40

[மலையில் ஒரு புதருக்கருகில் இந்துமதி பாடிக் கொண்டிருக்கிறாள் : ஹர்ஷன் ஓடிவருகிறான்]

ஹர்ஷ: இந்து, இந்துமதி! கண்ணே!

இந்து: (அசையாமல் உட்கார்ந்தவண்ணம் அவனையே உற்றுப் பார்க்கிறாள்.)

ஹர்ஷ: (அவள் கைகளைப் பிடித்து) இந்துமதி, இதோ பார்!

(மாதவன் வருகிறான்)

மாதவ: அரசே, கூடப்பிறந்த பாவியான என்னால் அக் குரலை அறிய முடியவில்லையே. இந்து......

ஹர்ஷ: மாதவா, என்ன இப்படிப் பார்க்கிறாள்!

மாதவ: புத்தி ஸ்வாதீனம் இழந்திருக்கிறாள்.

ஹர்ஷ: நமது முகாமுக்கு அழைத்துக்கொண்டு போவோம். இவளைக் கண்டதே நம் அதிர்ஷ்டம்.

இந்து: (திடீரென்று) ஐயோ! ராணி! சீக்கிரம் ஓடுங்கள். (சிரிக்கிறாள்.)

ஹர்ஷ: இந்துமதி! பயப்படாதே கண்ணே. வா போவோம்.

மாதவ: பிரக்ஞையிழந்து எத்தனை நாளாக இங்கே சுற்றிக் கொண்டிருக்கிறாளோ!

[மூவரும் போகிறார்கள். ஹர்ஷன் இந்துமதியைத் தூக்கிக்கொண்டு போகிறான்)

## காட்சி 41

முகாம்

[ஹர்ஷன். இந்துமதி படுத்துக்கொண்டிருக்கிறாள். பைத்தியம் இன்னும் தெளியவில்லை]

ஹர்ஷ: இந்துமதி! இதோ நான்தான் ஹர்ஷன். தெரியவில்லையா? ராஜ்யஸ்ரீயைப் பார்த்தாயா?

இந்து: ராணி! (எழுந்து உட்கார்ந்து) இளவரசி! (பலமாகச் சிரிக்கிறாள்.)

(மாதவன் வருகிறான்)

மாத: அரசே, நல்ல செய்தி! மலைமேல் ராணி இருக்கிறாள்.

ஹர்ஷ: ராஜ்யஸ்ரீயா! எங்கே? எங்கே, மாதவா?

மாதவ: ஒரு பௌத்த ஆசிரமத்தில். இரண்டு காட்டு மனிதர்களை விசாரித்தேன், சொன்னார்கள்.

ஹர்ஷ: புறப்படு உடனே. இந்துமதி, ராஜ்யஸ்ரீயைப் பார்க்கலாம் வா.

இந்து: ராணி! (வேகமாய் எழுந்திருக்கிறாள். பிறகு அசைவற்று நின்றுவிடுகிறாள்.)

ஹர்ஷ: வா கண்ணே, போவோம். ராஜ்யஸ்ரீயைக் கண்ட பிறகாவது உன் சித்தம் தெளியட்டும்.

[மாதவன் போகிறான். இந்துமதியை மெல்ல அழைத்துக்கொண்டு ஹர்ஷன் போகிறான்.]

## காட்சி 42

### திவாகரமித்திரன் ஆசிரமத்துக்கருகில்

[ராஜ்யஸ்ரீ ஒரு தீக்குழிக்கருகில் உட்கார்ந்து கடவுளைப் பிரார்த்திக்கிறாள். திவாகரமித்திரன் ஓடிவருகிறான்.]

திவா: மகாராணி! என்ன காரியம் செய்யத் துணிந்தீர்கள்? வேண்டாம். என் வேண்டுகோளுக்கு இரங்குங்கள்.

ராஜ்ய: என்னைத் தடுக்கவேண்டாம். தாய் தந்தையரை இழந்தேன் மாங்கல்யமும் இழந்தேன். சகோதரர்கள் உயிருடனிருப்பார்களென்று நினைத்தேன். ஐயோ! ராஜாவும் கொலைசெய்யப்பட்டதாக நேற்றுச் சொன்னீர்களே!

திவா: ஹர்ஷன்!......சீலாதித்ய சக்ரவர்த்தி உங்களைத்தேடி வருவார். நான் தூதர்களை அனுப்பியிருக்கிறேன்.

ராஜ்ய: நான் நம்பவில்லை. அந்தத் துரோகிகள் ஹர்ஷனை விட்டிருப்பார்களா? எனக்கு வேறு கதியில்லை. என் பதியிடம் போய்ச் சேருகிறேன்.

திவா: மகாராணி! ஹர்ஷனைக் கொல்லவும் மனிதன் பிறந்திருக்கின்றானா? அரசி! எனக்காக இந்த விபரீதச் செயலை நிறுத்துங்கள். நானே உங்களைத் தானேச்வரத்திற்கு அழைத்துச் செல்கிறேன்.

ராஜ்ய: என்ன பயன்? எங்கள் குடும்பம் முழுவதும் அழித்துப் பாழடைந்த தானேச்வரத்தை எப்படிக் காண்பேன்? வேண்டாம் மித்திரா, என்னைத் தடுக்காதே! எனக்கும் என் பதிக்கும் நடுவில் நிற்காதே......(விழப் போகிறாள்.)

திவா: அரசி! மகாராணி!

(இந்துமதி, மாதவனுடன் ஹர்ஷன் ஓடிவருகிறான்.)

ஹர்ஷ: ராஜ்யம்! ராஜ்யம்!

(ஓடிவந்து அவளைப் பிடித்துக்கொள்கிறான்.)

இந்து: ராணி! (பாய்ந்தோடி அவளைக் கட்டிக்கொள்கிறாள்.)

ராஜ்ய: அண்ணா! (சந்தோஷமும் துக்கமும் கலக்க.)

ஹர்ஷ: ராஜ்யம்! நீயும் மோசம் செய்யப் பார்த்தாயா?

இந்து: மகாராணி! நானும்......

(தீக்குழியைக் காண்பிக்கிறாள்.)

ராஜ்ய: பைத்தியம்! இந்துமதி!

ஹர்ஷ: ராஜ்யம். அவளுக்கு உண்மையிலேயே சித்த ஸ்வாதீனமில்லை. (இந்துமதி சட்டெனெ ஹர்ஷன் பக்கம் திரும்புகிறாள்.)

ராஜ்ய: என்ன? இந்துமதி! இதோ ஹர்ஷன், இதோ என்னைப் பார்.

இந்து: (விழித்துக்கொண்டவள்போல் சுற்றுமுற்றும் பார்க்கிறாள்) ராணி! இதென்ன ஐயோ! தீ! (ராஜ்யஸ்ரீயை அப்பால் இழுத்துக் கொண்டு போகிறாள்.) ராணி, இங்கே எப்படி வந்தோம்?

திவா: சக்ரவர்த்தி! நமஸ்கரிக்கின்றேன். இந்தச் சந்திப்பைக் காண நேர்ந்தது என் அதிருஷ்டம்.

ஹர்ஷ: ராஜ்யம்! இங்கே எப்படி வந்து சேர்ந்தாய்?

ராஜ்ய: அண்ணா, ராஜா படையெடுத்தபோது குமார குப்தன் என்னைச் சிறையிலிருந்து விடுவித்தான். அதன்பின் நடந்த கலவரத்தில் நான் பயந்து ஓடிவிட்டேன். வழி தெரியாது பல நாட்கள் அலைந்து இந்த மலைக்கு வந்தேன். இவர்தான் என்னைக் காப்பாற்றினார்.

மாதவ: குமாரகுப்தனா? அவன் கன்னோசிக்கு வரவில்லையே!

ஹர்ஷ: இந்துமதி! மாறுவேஷத்தில் உயிருக்குத் துணிந்து ராஜ்யத்தை மீட்கப்போனாயா?

ராஜ்ய: என்ன, இந்துமதியா! கண்ணே! நீயா என் உதவிக்கு வந்தாய்! ஐயோ! அப்பொழுதே தெரியாமல் போய் விட்டதே. (இந்துமதி நாணத்துடன் தலைகுனிகிறாள்.)

ஹர்ஷ: ராஜ்யம்! உன்னைக் கண்டதும் இந்துமதி பிரக்ஞை அடைந்துவிட்டாள். இந்து, ஏன் திடீரென்று மறைந்தாய்! என்னிடம் சொல்லாமல் போய்விட்டாயே!

இந்து: ராணி! என்னைச் சகோதரிபோல் பாவிப்பதாக இளவரச......சக்ரவர்த்தி சொன்னார். அவருடைய சகோதரியை மீட்டு அவர்......

மாதவ: இந்து! நான் தோற்றேன். என் வார்த்தைகளை நீ நிரூபித்துவிட்டாய். என்னை மன்னிக்கவேண்டும்.

ராஜ்ய: அண்ணு! இந்துமதி என்னைத் தப்புவித்து உனக்கு அளித்துவிட்டாள். நான் உன் சகோதரி. அவளை நீ சகோதரி யாகப் பாவிக்கமுடியாது. (இந்துமதி நாணி மறைகிருள்.)

ஹர்ஷ: (தடுமாற்றத்துடன்) ராஜ்யம்! என் துக்கத்தில் அவள் மனத்தை அறியவில்லை. ...நீ சொல்லுகிறபடி செய்கிறேன். ...மாதவா சம்மதந்தானே.

மாதவ: அமிர்தம் வேண்டுமா என்று கேட்டால், என்ன பதில் சொல்வது?

ராஜ்ய: தானேச்வர மகாராணி!

இந்து: ஐயோ! ராணி!......

ராஜ்ய: ராணியா! என் வாழ்க்கை இனி துறவியாகத்தான். என் ராஜ்யம் காடுதான்.

ஹர்ஷ: ராஜ்யம்! என்னைக் கைவிடப் போகிருயா? வா போவோம். அதோ ஏமாற்றமடைந்த அந்த நெருப்பு தன் எரியும் கரங்களால் உன்னைப் போகச் சொல்லுகிறது. சீக்கிரம் போவோம் வா. உன் உதவியைக் கொண்டுதான் நான் நாட்டை ஆளவேண்டும். திவாகரமித்திரா! உன் உதவிக்குக் கைம்மாறு செய்வது அசாத்தியம்.

திவா: அரசே! புஷ்பபூதி திலகமாகிய சீலாதித்ய சக்ர வர்த்தி என் ஆசிரமத்திற்கு விஜயம் செய்வதைவிட வேறு என்ன பாக்கியம் வேண்டும் எனக்கு?

ஹர்ஷ: உன் ஆசிரமத்திற்கு வந்துதான் இந்துமதிக்குப் புத்தி தெளிந்தது. இங்குதான் என் ராஜ்யத்தைக் கண்டேன். இனி இவ்விடம் ஒரு பெரிய அறிவுக் கோயிலாக விளங்கட்டும். பௌத்த சர்வகலாசாலைகளை ஏற்படுத்துவதே இனி என் முக்கிய கவனமாகயிருக்கும். என் சகோதரிக்கும் அது மனச் சாந்தியை அளிக்கும். போய்வருகிறோம். (திரை.)

4035

---

# எமது இதர வெளியீடுகள்

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| ஹேமாங்கினி | சரத் சந்திரர் | 0 | 12 |
| ஸந்தியா | சரத் சந்திரர் | 1 | 8 |
| உஷா | சரத் சந்திரர் | 1 | 8 |
| அநுராதா | சரத் சந்திரர் | 1 | 0 |
| சீதா | துவிஜேந்திரலால் ராய் | 1 | 8 |
| அயர்லாந்து | எஸ். எஸ். மாரிசாமி | 1 | 12 |
| காணாமலே காதல் | கு. ப. ராஜகோபாலன் | 1 | 12 |
| பிரேத மனிதன் | 'புதுமைப்பித்தன்' | 1 | 0 |
| ராதையின் பிரார்த்தனை | து. ரா. | 1 | 8 |
| ஸ்டர்லிங் நிதி | ஆர். வேங்கடராஜுலு | 1 | 12 |
| துருக்கி | எஸ். எஸ். மாரிசாமி | 1 | 0 |
| பசி (நாவல்) | க. நா. சு. | 2 | 8 |
| சினிமா (படங்களுடன்) | பி. எஸ். ராமையா | 3 | 8 |
| விஜயம் (நாவல்) | வ. ரா. | 3 | 8 |
| அபலை (கதைகள்) | என். எஸ். ஸ்ரீநிவாஸன் | 1 | 12 |
| ஹர்ஷன் (நாடகம்) | பெ. கோ. சுந்தரராஜன் | 2 | 0 |
| மலரும் மணமும் (கதைகள்) | பி. எஸ். ராமையா | 3 | 8 |
| ஊர்வசி (நாடகங்கள்) | ந. சிதம்பர சுப்ரமண்யன் | 2 | 8 |
| விடிவெள்ளி (கதைகள்) | ரா. ஆறுமுகம் | 2 | 8 |

## அடுத்த வெளியீடுகள்

| | |
|---|---|
| லீலா (நாவல்) | 'ஆண்டாள்' |
| மோஹினி (கதைகள்) | ந. பிச்சமூர்த்தி |
| சர்மாவின் உயில் (நாவல்) | க. நா. சு. |
| குலவதி (கதைகள்) | சேது அம்மாள் |
| சைலஜா (சரத் சந்திரர் நாவல்) | பி. எஸ். கிருஷ்ணமூர்த்தி |

# ஜோதி நிலையம்

திருவல்லிக்கேணி — சென்னை

# சர்வதேசக் கதைகள்

ஒவ்வொன்றும் விலை அணா எட்டு

## வெளி வந்தவை

**காதற் கதை** — க. நா. சுப்ரமண்யம்
(இத்தாலியக் கதை)

**வெற்றி** — 'வாணீசரணன்'
(பிரஞ்சுக் கதை)

**காளி** — க. நா. சுப்ரமண்யம்
(ஜெர்மன் கதை)

**காதற் கீதம்** — ரா. ஆறுமுகம்
(ரஷ்யக் கதை)

**பெண் மனம்** — ப. திருமலை
(ஸ்பானியக் கதை)

**போலி** — எஸ். ராஜா
(ஆங்கிலக் கதை)

**தேவமலர்** — க. நா. சுப்ரமண்யம்
(ஸ்விடிஷ் கதை)

**3 கதைகள்** — எஸ். ராஜா
(ஹங்கேரி)

## அடுத்து வருபவை

**மலைமகள்** — பெ. கோ. சு.
(அமெரிக்கக் கதை)

**துர்லக்** — த. நா. குமாரஸ்வாமி
(செக்கோஸ்லோவேகியக் கதை)

**நாஸ்திகனின் கடவுள்** — க. நா. சு.
(பிரெஞ்சுக் கதை)

இன்னும் நார்வே, போலந்து, சீனா, ஜப்பான், பின்லந்து, டென்மார்க் முதலிய தேசத்துக் கதைகளும் வெளிவருகின்றன

## ஜோதி நிலையம்

திருவல்லிக்கேணி — சென்னை

# ஜோதியின் ஏழு சுடர்கள்

- **மலரும் மணமும்**

  பி. எஸ். ராமையா எழுதிய உணர்ச்சி ததும்பும் கதைகள். ஒவ்வொன்றும் வாழ்க்கையை அப்படியே பிரதிபலிப்பவை.

  சாதா பதிப்பு விலை ரூ. 3 8 0
  உயர்ந்த பதிப்பு விலை ரூ. 4 0 0

- **ஊர்வசி** (நாடகங்கள்)

  ந. சிதம்பரசுப்ரமண்யன் எழுதிய அழகிய நாடகங்களின் தொகுப்பு. ஒவ்வொன்றும் ஒரு கனவு உலகத்தை நம் முன் கொண்டு வரும் அற்புத சிருஷ்டிகள். உயர்ந்த பதிப்பு

  விலை ரூ. 2 8 0

- **சினிமா**

  பி. எஸ். ராமையா எழுதியது. சினிமாக் கலை சம்பந்தமான சகல விவரங்களும் அடங்கியது. 12 படங்களுடன் கூடிய அழகிய பதிப்பு.

  விலை ரூ. 3 8 0

- **விடிவெள்ளி** (கதைகள்)

  ரா. ஆறுமுகம் எழுதிய சிறுகதைத் தொகுப்பு. தினசரி வாழ்க்கையில் நடமாடும் பாத்திரங்களை வைத்துக்கொண்டு பல அற்புத சித்திரங்களைத் தீட்டி இருக்கிறார் ஆசிரியர்.

  விலை ரூ. 2 8 0

- **விஜயம்**

  ஆசிரியர் வ. ரா. எழுதிய நாவல். வாழ்க்கைப் புயலில் சிக்கிய ஓர் அபலையின் உணர்ச்சி ததும்பும் ஜீவிய சித்திரம்

  விலை ரூ. 3 8 0

- **பசி** (நாவல்)

  க. நா. சுப்ரமண்யம் எழுதிய அற்புதமான நாவல் உயர்ந்த அழகிய பதிப்பு

  விலை ரூ. 2 8 0

- **காணாமலே காதல்** (கதைகள்)

  அமரர் கு. ப. ராஜகோபாலன் எழுதிய அழகான சரித்திரக் கதைகள்

  விலை ரூ. 1 12 0

விவரங்களுக்கு

## ஜோதி நிலையம்

திருவல்லிக்கேணி — சென்னை


Cover Printed at P. A. S. Press, Post Box No. 349, Mount Road, Madras